# மீண்டும் ஜீவனோடு

பாகம் – I




சகோ. யூஜின் பர்ன்ஸ்

# மீண்டும் ஜீவனோடு

பாகம் – I

சகோ. யூஜின் பிரின்ஸ்

# "மீண்டும் ஜீவனோடு" எனும் புஸ்தகத்திற்கு ஓர் அறிமுகம்

மெகிதோவில் நடந்த கடைசிப் போரில், போர் புரிந்தவர்களில் ஒருவர் லெவ் ஆரோன் என்பவர் ஆவார்; இவர் பேரொலியுடன் வெடித்த வெடியினால் தனது இடது கை துண்டிக்கப்பட்டதும், வெடி குண்டானது தனது சரீரத்தைத் துளையிட்டதும் குறித்த நினைவுகளையே தனது இறுதி நினைவாகப் பெற்றிருந்தார்.

ஆனால் இப்பொழுதோ, முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு ஜீவனையும், பெலத்தையும் இவர் உணர்ந்தார். இவரால் தன்னுடைய காயங்களின் எந்த ஓர் அடையாளத்தையும் காணமுடியவில்லை.

இவர் புதுமையான மற்றும் மாறுபட்ட ஓர் உலகத்தில் தான் இருப்பதாகப் புரிந்துகொண்டார்; அதாவது மனுக்குலத்தின் ஒட்டுமொத்த கனவுகளைப் பிரதிபலிக்கும் ஓர் உலகமாகவும், அதேசமயம் ஆச்சரியமூட்டும் ஓர் உலகமாகவும் அது இருந்தது.

கொஞ்சமும் எதிர்பார்த்திராத விதத்தில் வேதவாக்கியங்களானது இவருடைய கண்களுக்கு முன்பாகப் பொருந்தத் துவங்கினது.

இவருக்கு இந்தப் புதிய உலகில் ஓர் ஊழியம் கொடுக்கப்படப் போகின்றது. கடந்த கால சந்ததியினரில் இருந்து உயிர்த்தெழுந்து வரும், அநேகருடைய ஜீவியங்களை இவரது சொந்த ஜீவியமானது தொடவிருப்பதினால், மனித சரித்திரத்தின் விறுவிறுப்பான சம்பவங்களையும், அனுபவங்களையும் இப்புதிய உலகில் சந்திக்கவிருக்கின்றார்.

இவரால் கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியாத அளவுக்கு அன்பையும், தயவையும் அனுபவித்துப் பார்க்கப் போகின்றார்.

இவர் அநேக எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் சந்திக்க இருக்கின்றார். இவரது இந்தப் புதிய வாழ்வு நிஜந்தானா? அபிஷேகம் பண்ணப்பட்டவரின் வல்லமை, தீமையின் வல்லமையை எதிர்கொள்ள கூடுமா?

கிறிஸ்துவினுடைய அன்பின் ஆற்றல் எவ்வளவு தூரம் கடந்து செல்லும்? கிறிஸ்துவினுடைய அன்பானது எந்த மட்டிலுமான சீர்கேடுகளை சொஸ்தப்படுத்தக் கூடும்?

# ஆரம்ப காட்சி

பொதுவாகவே எல்லாவற்றிற்கும் பதில்களை அறிந்திருக்கும் ஒரு நபர் நான். எனக்கு விடை பற்றி தெரியவில்லை என்றாலும், எதையாவது முயல்வேன். "முதலாவது செயல்படு, பின்னர் யோசி" என்பதே எனது கொள்கை. நான் சரி என்று நினைப்பதைச் செய்தால், அவைகள் அனைத்தும் நன்றாய் முடியும். பொதுவாகவே நான் இப்படித்தான் செய்வேன். என்னால் இயலாத கட்டத்தில்தான் அமர்ந்திருந்து ஜெபிப்பது எனது பழக்கம்.

என் சகோதரன் ஜேக், வழக்கமாக என்ன சொல்லுவான் தெரியுமா? நாம் கர்த்தருடைய கரத்தை எப்பொழுதும் சார்ந்திருக்க வேண்டும் என்று சொல்லுவான்: ஆனால் அது எனக்கு சரி வராத காரியமாகும். நாம் கண்டிப்பாகப் போராட வேண்டும்; வெற்றி அல்லது தோல்வி என்பது நாம் போராடுவதில்தான் உள்ளது!

இந்த முறை மட்டும், என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் என்னால் சிந்திக்கக்கூட முடியவில்லை. நாங்கள் அனைவரும் சிக்கிக்கொண்டோம். எங்குபோவது என்று தெரியவில்லை. எதிர்நடவடிக்கை எடுக்கத் தெரியவில்லை. நாங்கள் அனைவரும் மரிக்கப்போகின்றோம் என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன். ஆனால் மரிப்பதினால் என்ன மேன்மை இருக்கின்றது?

நாங்கள் எங்களுடைய எதிரிகளை மெகிதோ சமவெளியில் எதிர்கொண்டு, அவர்கள் எருசலேமை நோக்கி முன்னேறிச் செல்வதை தாமதப்படுத்த முயன்றோம். எல்லை மீறி நுழைந்த இராணுவம், யூதேயாவிலுள்ள பல்வேறு கிராமங்களில் நிற்கும்படிக்குக் கட்டளை இடப்பட்டிருந்த எங்களது சிறிய குழுக்களைத் திணறச் செய்தது. நாங்கள் மற்ற இஸ்ரேலியப் படைகளுடனான தொடர்பை இழந்து விட்டோம். எனக்குத் தெரிந்தவரையில் நாங்கள் எருசலேமுக்கும்,

இஸ்ரயேலுக்கும் கடைசி நம்பிக்கையாக இருந்தோம். ஆனால் முற்றிக்கையிடப்பட்டிருந்தோம், தொடர்ந்து குண்டு வீச்சுக்கு ஆளாகிக் கொண்டிருந்தோம். கிட்டத்தட்ட என்னைச் சுற்றியுள்ள ஆண்கள் அனைவரும், ஒன்று காயத்துடனோ அல்லது மரித்தோ இருந்தனர்.

என் அருகில் ஒரு ஏவுகணை (Rocket) வெடித்தது. நான் என் வலது கரத்தைத் தூக்கி, என் தலையைப் பாதுகாக்க முயற்சித்தேன். என்னுடைய நுரையீரல் வெந்துபோய், நான் சுவாசிப்பது கடினமானது. எனது இடது கைக்கு என்ன ஆனது என்று நான் பார்த்தபோது, உருசிதைந்த நிலையில் இரத்தக்களரியான ஒரு துண்டு மாத்திரமே மீந்து இருந்தது.

என் அருகே தைரியத்துடன் மருத்துவர் ஒருவர் அணுகினபோது, மோசமாகக் காயம் அடைந்த நிலையில் என்னை அவர் கண்டார் மற்றும் கைகளிலிருந்தும், நெஞ்சிலிருந்தும் ரத்தம் வடிவதை நிறுத்த முயற்சித்தார். நான் வார்த்தைகள் திணறியபடி, அவரை நோக்கி: "எனது....என-து....மனை.... மனைவி ரெபெ-க்கா-ளிடம்... நான்... நான் நேசிக்....நேசி-க்கி-றே...." (நான் நேசிக்கிறேன் உன்னை என்று லெவ் ஆரோன்) இவ்வார்த்தைகளை சொல்லி முடிப்பதற்கு முன்னதாகவே காதுகள் நிசப்தத்தை உணரவே, பார்வை மெதுவாக மங்கி மறைந்தது.

***

# முகவுரை

மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டு எனக் கிறிஸ்தவ மதம் போதிக்கின்றது. ஆரம்பகால கிறிஸ்தவத்தின் மையமாக உயிர்த்தெழுதல் உபதேசம் இருந்தது.

இயேசுவின் போதனையாவது:

**"*இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது எழுந்திருக்கிறவர்களாக புறப்படுவார்கள்.*" (யோவான் 5:28,29)**

இயேசு மார்த்தாளிடம் கூறியதாவது:

**"*நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.*" (யோவான்** 15:25)

இயேசு இந்த வார்த்தைகளைக் கூறி இருந்தபோதிலும், மரணம் தடையின்றி தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பில்லியன் கணக்கானோர் மரித்துவிட்டனர். மேலும் தங்களை இயேசு கல்லறையிலிருந்து அழைப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

தமது வாக்குத்தத்தத்தை இயேசு நிறைவேற்றுவார் எனும் விஷயத்தில் யாரேனும் சந்தேகிக்கின்றீர்களா?

இயேசுவைப்போலவே அப்போஸ்தலர்களும் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசினார்கள். பவுல் அப்போஸ்தலன் அகரிப்பா ராஜாவிற்கு முன் விலங்கிடப்பட்டிருந்தபோது, அவர்:

**"*தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?*" (அப்போஸ்தலர் 26:8)** என்று வினவினார்.

கொரிந்துவில் இருந்த சபை மெய் விசுவாசத்தில் இருந்து வீழ்ச்சி அடையத் தொடங்கியபோது, அவர்களைக் குழப்பின காரியங்களில்

ஒன்றாக உயிர்த்தெழுதல் உபதேசம் இருந்தது. பவுல் அவர்களை நோக்கிக் கூறியதாவது:

**"கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப் பட்டிருக்க மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே. கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா. உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக்குறித்துச் சாட்சி சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர் களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருப்போம். கிறிஸ்துவோ மரித்தோர ரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்."** (1**கொரிந்தியர்**15:12-20)

உயிர்த்தெழுதலைக்குறித்து, கொரிந்து சபையினருக்கு இருந்த தவறான புரிந்துகொள்ளுதலை அப்.பவுலின் செய்தி சரி செய்தது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் "முதற்-பலனானால்," நியாயமாக "பிற்-பலன்களும்" இருக்க வேண்டும். *"மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது"* (மத்தேயு19:28) அதற்கான ஏற்ற காலமாயிருக்கும்.

உயிர்த்தெழுதல் என்பது கிறிஸ்துவ மார்க்கத்தின் அடிப்படை உபதேசமாகும் - "மரித்தோரின் உயிர்த்தெழுதல்" என்ற ஒன்று உண்டு. இந்த மாபெரும் கிறிஸ்துவ போதகமானது, பூமியில் நடக்கவிருக்கும்

சுவாரசியமான காட்சிகளைக் கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. "பிரேத குழிகளில் காணப்படும் அனைவரின்" உயிர்த்தெழுதலானது மனம் கவரும் விதத்தில் அன்பின், பாசத்தின் மற்றும் மகிழ்ச்சியின் காட்சிகளை நமது மனக்கண்களின் முன்பு வைக்கின்றதாய் இருக்கிறது.

ஆனால் "மறுஜென்ம காலத்தில்" மரித்தோருடன் புதைந்து காணப்பட்ட குற்றம், பயம் மற்றும் அவமானம் போன்ற உணர்வுகளும் அவர்களோடுகூடக் கடந்து வரும். "மனிதர்கள் செய்யும் தீமை அவர்கள் மரித்த பிற்பாடும் ஜீவிக்கின்றது. அவர்கள் செய்த நன்மையோ பெரும்பாலும் அவர்களுடைய எலும்புகளோடுகூடப் புதைந்து விடுகிறது" என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். எனினும் உயிர்த்தெழுதல் மூலம், மனிதர்கள் செய்த நன்மை, அவர்கள் திரும்பவும் உயிர்பெறும் போது அவர்களோடுகூட வரும். தீமையும் அப்படியே கூட வரும்! உயிர்த்தெழுதலினால் "தீயவர்களுக்கும் நீண்ட வாழ்வு கொடுக்கப்படும்." மனிதர்கள் கல்லறையினின்று வெளிவரும் படிக்கு அழைக்கப்படும் போது அவர்களது முழுக்கடந்தகால நினைவுகளும் உண்மையாக, நிஜமானவைகளாகக் காணப்படும். ***"என் வழி செம்மையாயிராதோ?"*** **என்று (எசேக்கியேல்18:25)**-இல் தேவன் கூறியிருக்கிறார். "இந்த உலகம் ஒரு நாடக மேடை, இதில் ஆண்களும், பெண்களும் நடிகர்கள் மட்டுமே" என்றும் ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். இது உண்மையாய் இருக்குமானால், இந்த நடிகர்கள்(மனுக்குலம்) அனைவரும் மறுஜென்ம காலத்தில் இரண்டாம் முறை நடிப்பதற்க்கென்று திரும்ப வருவார்கள் என எடுத்துக்கொள்ளப்படலாம்.

இந்த உயிர்த்தெழுதலின் காலத்தில் சத்தியம் எல்லா நேரங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கும். பொய்கள், வஞ்சனைகள், அரைகுறை உண்மைகள், உண்மை அல்லாதவைகள் மற்றும் நேர்மையற்றவைகள்

ஆகியவற்றை இதுவரைக்கும் செய்துவந்தோர், இனி இத்தகைய கிரியைகளைச் செய்வதற்கான உரிமைகள் இரத்து செய்யப்படும். அவர்கள் செய்கையின் முழுக்கணக்கும் வெளியரங்கமாக்கப்படும். சத்திய செய்தி மட்டுமே அனுமதிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். இந்த "மறுஜென்ம காலத்தின்" முழுப்பகுதியிலும் ***"எந்த மறைவான காரியங்களும் இருப்பதில்லை." (ஏசாயா 28:17)***

***"கிறிஸ்து தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின் படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்பு செய்வார்" (ஏசாயா 11:3:4).*** எல்லாக் காரியங்களும் வெளியரங்கமாகவும், அனைவரும் அறியும் வண்ணமாகவும் இருக்கும். ஒவ்வொரு சூழ்நிலையின் உண்மையினை அறிய கிறிஸ்துவுக்கு எந்த விதமான ஆதாரங்களோ அல்லது சாட்சிகளோ தேவை இருப்பதில்லை. ஏனெனில் அவர் இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பவராவார்.

மனித மீட்புக்கான முதல் தேவை, அவர்களுக்கான மறுசீரமைப்பின் அவசியத்தை அடையாளம் கண்டு கொள்வதாகும். ஒவ்வொருவரும் தனது சக மனிதனோடும், தேவனோடும் ஒப்புரவு ஆகுவதே பிரதான தேவையாய் உள்ளது.

தேவனுக்கும் மனிதனுக்குமான ஒப்புரவாக்குதலின் காலம் தற்போது நடைபெறுவதாக சிலர் நினைத்திருக்கின்றனர். எனினும், இயேசுவின் நாள் முதல் இன்று வரை உள்ள காலப்பகுதியானது, "கிறிஸ்துவினுடைய மணவாட்டிக்கான" அழைப்பு மற்றும் வளர்ச்சிக்காக விசேஷமாக நியமிக்கப்பட்டுள்ளது.

மணவாட்டி தேர்ந்தெடுக்கப்பட்ட பிற்பாடு, ***"உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வரும்"***

(*அப்போஸ்தலர்3:21*). இதுவே உயிர்த்தெழுதலின் காலமாக இருக்கும். அப்போது மனுக்குலம் ஒருவருக்கொருவருடனும் மற்றும் தேவனுடனும் ஒப்புரவாக்கப்படுவார்கள்.

உயிர்த்தெழுதல் என்பது சொல்லர்த்தமாக ஒருநாளின் இருபத்து-நான்கு மணி நேரத்தில் நடைபெறாது. "திரும்பக்கொடுத்தலின் காலங்களில் (வருஷங்களில்)" நடைபெறும்.

மனுக்குலத்தை மறுசீரமைத்து, பூரணத்திற்குக் கொண்டு வருவது ஒரு கற்பிக்கும் செயல்முறையாக இருக்கும். இந்த மறுசீரமைப்பு செயல்முறை மனித வரலாற்றில் மிகவும் உற்சாகமான மற்றும் பலனளிக்கும் அனுபவமாக இருக்கும். பூமியின் மில்லியன் கணக்கானோர்களின் இந்த உயிர்தெழுதலைக் குறித்தும், "திரும்பக் கொடுத்தலின் காலங்கள்" குறித்தும் "மீண்டும் ஜீவனோடு" என்ற இந்தப் புஸ்தகத்தில் விளக்க முயற்சித்திருக்கிறோம்.

நிச்சயமாகவே இவ்வகையான எந்த ஒரு வேலைக்கும், சிந்தனையுடன் கூடிய கற்பனைத்திறன் அவசியமாயிருக்கும். கடந்த காலத்தினை பற்றின போதுமான அளவு உண்மையான தகவல்களை அறிந்துகொள்வது என்பது, மீண்டும் வாழ்வது என்றால் என்ன என்பதைப் பற்றி புரிந்துகொள்வதற்கு உதவுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனுடைய கடந்த காலமும் ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்குவதற்கு உதவியாக இருக்கின்றது.

பெரும்பாலான கிறிஸ்தவ எழுத்தாளர்கள் தங்கள் கதையின் உச்சகட்டத்தினை பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடனோ அல்லது வேதாகமக் கூற்றிற்குப் புறம்பான "ஏழு வருஷங்கள் உபத்திரவம்" எனும் கற்பனைக் கதையுடனோ நிறைவு செய்துள்ளனர். யாரொருவரும் இதுவரையில் பரலோகத்தைப் பற்றி யதார்த்தமான உண்மைகளை வெற்றிகரமாக விவரிக்கவில்லை.

"எடுத்துக்கொள்ளப்படுதல்" மற்றும் "அர்மகெதோன்" பற்றின புஸ்தகங்கள் ஏராளமாக உள்ளன. மனுக்குலத்தின் பெரும்பாலானோர் நித்திய எரிநரக அக்கினிக்குள் போவார்கள் என்று கூறுவதோடு அவர்களது பார்வை நின்றுவிடுகிறது.

மனுக்குல அனுபவத்தின் மிகவும் விறுவிறுப்பான மற்றும் அர்த்தமுள்ள காலத்தை "மீண்டும் ஜீவனோடு" என்னும் புஸ்தகம் படம் பிடித்துக்காட்டுகின்றது. வாழ்ந்து மரிப்பது என்பது ஒரு காரியமாக இருக்கின்றது. ஆனால் கடந்த காலத்தைப் பற்றிய முழு அறிவோடு, ஒவ்வொரு எண்ணங்களையும், வார்த்தைகளையும் முழுமையாக நினைவுகூர்ந்து, "நீதியை" கோரும் ஒரு புதிய உலகின் சவால்களைச் சந்திப்பதற்கு மீண்டும் உயிர்த்தெழுந்து வருவது என்பது முற்றிலும் வேறொரு காரியமாக இருக்கின்றது.

"மறுபடியும் என்னுடைய வாழ்க்கையை மீண்டும் வாழும் வாய்ப்பு எனக்கு கிடைத்தால்" என்று பலர் அடிக்கடிக் கூறுவதைக் கேட்டிருப்போம். உயிர்த்தெழுதலானது, எவருக்கும் இதே வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கான வாய்ப்பை அளிக்காது. இதைவிட சிறந்ததொரு வாழ்க்கையை வாழ வழிவகுக்கும். கடந்தகாலத்தில் மனுக்குலமானது அடைந்திருந்த எந்தவொரு குணலட்சண வளர்ச்சியினையும், முதிர்ச்சியினையும் இழந்து போகாது.

நம்முடைய தற்போதைய வாழ்க்கையை, நாம் ஒன்றுமே அறியாதவர்களாகத் துவங்குகிறோம். நம்முடைய வாழ்வில் அநேகப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் தருணத்தில், கற்றுக்கொள்ளும் செயல்முறையில் நாம் அநேகத் தவறுகளைச் செய்வதால், நாம் பல தவறுகளையும் சேர்த்துவிடுகிறோம். மறுஜென்ம காலத்தில் மனுக்குலமானது, ஏற்கெனவே கடந்த காலத்தில் பெற்றிருந்த தங்களது தனிப்பட்ட அனுபவங்கள் மூலமாக, அநேகவற்றை கற்று அறிந்திருக்கும்

அனுகூலத்தை உடையவர்களாக இருப்பார்கள். சக மனிதனோடும் மற்றும் தேவனோடும் ஒப்புரவாகுதலுக்கான நீண்ட பயணத்தைத் தொடங்கும்போது, அவர்கள் தற்போதைய வாழ்க்கையின் அனுபவங்களால் பெரிதும் பயன் பெறுவார்கள்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் சொல்லுவதற்கு ஒரு கதை இருக்கிறது. உயிர்த்தெழுதலின் செயல்முறையில், மரித்தவர்கள் உயிர்த்தெழுந்து தங்களது வருங்காலத்தைச் சந்திப்பார்கள். கல்லறையானது, பில்லியன் கணக்கானோரின் பற்றி எரியும் அன்பினையும், நற்குணங்களையும் குறுக்கிட்டு நிறுத்தியது. மேலும் அது ஒவ்வொருவரின் தீமையையும்கூடக் குறுக்கிட்டது. அன்பிற்கான கதவும், தீமைக்கான கதவும் மீண்டும் திறக்கப்படும். மனுக்குலத்தின் இருதயமானது அன்பினாலும், வெளிச்சத்தாலும் நிறைந்து வழிந்தோடும். அதேசமயத்தில், அவர்களது கண்களுக்கு முன்பாக தீமையினால் ஏற்பட்ட விளைவுகளையும் முழுமையாகக் கொண்டுவரும்.

(A Christmas carol எனும் ஆங்கில நாவலின் அற்பமான கற்பனைக் கதாநாயகனாகிய) எபிநேசர் ஸ்க்ரூஜ் என்பவர் சொப்பனத்தின் மூலமாகக் கடந்த காலத்தைக் குறித்து நினைப்பூட்டப்பட்டார். தற்காலத்தைக் குறித்தும் புதிய கண்ணோட்டத்தில் பார்க்கவும் மற்றும் தனது பார்வையைச் சரிபடுத்தாத பட்சத்தில் தன் வாழ்க்கை எப்படியாக முடியும் என்பது பற்றியும் பார்க்க உதவப்பட்டார். இது அவரது வாழ்க்கையை மாற்றுவதற்கான ஓர் அசாதாரண உத்வேகத்தை அவருக்கு அளித்தது.

ஆகையால் இந்த நாவலில், இச்சொப்பனங்களைக் கண்ட பிற்பாடு ஸ்க்ரூஜ் உயிரோடிருக்கிற தனது எஞ்சிய காலங்களிலேயே திருந்தி வாழ்வதற்குரிய வாய்ப்பினைப் பெற்றுக்கொள்கின்றார். ஆனால் மனுக்குலத்தைப் பொறுத்தமட்டில் திருந்தி வாழ்வதற்கான

இந்த வாய்ப்பு என்பது கல்லறையிலிருந்து வெளியே வரும்போது அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

மறைபொருளான சுவிசேஷத்தை "மீண்டும் ஜீவனோடு" எனும் இந்தப் புஸ்தகமானது எடுத்துக் கூறுகின்றது. முழு வேதாகமும் "திரும்பக்கொடுத்தலின்" நற்செய்தியைப் பற்றி பேசுகையில், பெரும்பாலான மதத்தலைவர்கள், இந்த அறிவானது உலகை இரட்சிப்பதற்கான அவர்களின் தற்போதைய பணிக்கு இடையூறாக இருப்பதாகக் கருதுகின்றனர். உலகை மாற்றுவதில் யாரும் இன்னும் பெருமளவு வெற்றி அடைந்திடவில்லை. ஆனாலும் பொதுநல கோட்பாடுடையவர்களுக்கு இதுவே தற்போதைய இலக்காக உள்ளது. எனினும் உலகத்தை மாற்றுவதற்கான காலம் எதிர்காலமாகவே இருக்கிறது. சக மனிதனோடும் தேவனோடும், உலகம் ஒப்புரவாக வேண்டும் என்ற நோக்கத்தில், கிறிஸ்து மரித்தோரை உயிர்த்தெழுப்பும் போது, உலகம் மாற்றத்திற்குள்ளாக வரும்.

ஆம்! "***நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு*" (அப்போஸ்தலர் 24:15). "*மரணமும், பாதாளமும் தங்களில் இருந்த மரித்தோரை ஒப்புவிக்கும் காலத்தில்*" (வெளிப்படுத்தல்20:13).** உயிர்த்தெழுதல் எனும் காட்சி எப்படி அரங்கேறும்? மறுஜென்மம் எப்படியாக இருக்கும்? உயிர்த்தெழுதலின் வல்லமையைக் கற்றுக்கொள்வதற்கான சிறந்த வழி, திரும்பி வந்தவர்களுடன் சேர்ந்து வாழ்வதைக் கற்பனை செய்து பார்ப்பதில் இருந்து அறிந்து கொள்ளமுடியும்.

***

"*மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்.....*"
**(ஏசாயா 26:19)**

# அத்தியாயம் - 1

(லெவ் ஆரோன் அவரது சிந்தையில் எண்ணியது) கடைசியாக நான் உணர்ந்த கடுமையான வலி இப்பொழுது இல்லை. நான் கடைசியாகக் கேட்ட துப்பாக்கிகளின் சத்தத்திற்கும், குண்டு வெடிப்பின் சத்தத்திற்கும் பதிலாக, பறவைகளின் கீச்-கீச் சத்தம் எனது செவிகளில் விழுந்தது. என் கண்களைத் திறக்க எனக்குப் பயமாக இருந்தது - மிகவும் மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்த எனது உடலைப் பார்க்க பயந்து என் கண்களைத் திறவாமல் நான் அமைதியாகப் படுத்திருந்தேன். ஆனால் சரீரம் இலகுவாக இருப்பதைப்போல உணர்ந்தேன். நான் எழும்ப விரும்பினேன், ஆனாலும் என் மூச்சு சத்தத்தைக் கேட்டுக்கொண்டு அப்படியே படுத்திருந்தேன்.

நான் மெதுவாக என் கண்களைத் திறந்தேன். இந்த இடம் நான் அகப்பட்டிருந்த துயரம் நிறைந்த போர்க்களம் போல் இல்லை. என் படுக்கையினருகே இருந்த மேசையைப் பூச்செண்டு அலங்கரித்து இருந்தது. நான் இருந்த அறை, மருத்துவமனையின் அறையும் அல்ல.

என் இடது கை துண்டிக்கப்பட்டுவிட்டது என்றும், மேல்பகுதி மட்டுமே எஞ்சியிருந்தது என்றும் என் மனது எனக்குக் கூறியது. எனினும் என் இடது கை முழுமையாக இருப்பதை இப்போது நான் பார்க்கிறேன் - நான் என் இடது கையை அசைக்க முற்பட்டபோது அது எந்தவித வலியுமில்லாமல் அசைகிறது - என் விரல்களையும் சுலபமாக அசைக்க முடிகிறது. நான் கடைசியாக இருந்த போர்க்களம் கனவா அல்லது இப்போது இந்த அமைதியான சூழலில் நான் இருப்பது கனவா? என்று எனக்கு முற்றிலும் குழப்பமாய் இருக்கிறது.

நான் என் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன். என்னுடைய நுரையீரல்கள் சேதமடையாமல் தடுப்பதற்காக, என் காயங்களுக்குள் நான் அடைத்து வைத்த சட்டை எங்கே? அது இப்பொழுது இல்லை மற்றும் காயமடைந்திருந்ததற்கான எந்தவித தழும்புகளும் இல்லை. திறந்திருந்த ஜன்னலின் வழியாக சூரிய ஒளி பிரகாசித்தது. எந்த விதமான சிரமமும் இன்றி என்னுடைய நுரையீரல் தூய்மையான காற்றை சுவாசித்தது. என்னுடைய உடலை நான் தொடர்ந்து ஆராய்ந்து பார்த்தபோது - காயங்களுக்கான எந்தத்தடயமும் இல்லை.

எங்கள் வீரர்கள் முழுவதுமாக சூழப்பட்டிருந்த சூழ்நிலை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. மிகப்பெரிய அளவிலான படைகளின் படையெடுப்பைத் தாமதப்படுத்தும் நோக்கில், பாதுகாக்கும் முதன்மை காவலர்களாக நாங்கள் சென்றோம். எருசலேமை நோக்கிய அவர்களது முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் மெகிதோவின் சமவெளியில் எதிரிகளைச் சந்தித்தோம்.

முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் புனிதமாகக் கருதும் புனித ஸ்தலம் அழிந்துவிடும் என்பதால் அவர்கள் எருசலேமின் மீது கனரக பீரங்கிகளைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியும். எங்களை ஒரே மூச்சில் வீழ்த்தி அழித்துவிடக் கூடாது என்பதற்காக இஸ்ரேலியப் படைவீரர்கள் அடங்கிய சிறு சிறு குழுக்களை சமாரியா மற்றும் யூதேயாவின் கிராமங்கள் முழுவதும் நிறுத்தியிருந்தோம். எங்கள் தளபதிகள் தங்கள் யுக்திகளில் புத்திசாலிகள், இருப்பினும் படையெடுத்துத் தாக்கும் இராணுவம் மிகப்பெரியதாய் இருந்தது. அதனால் அனைத்தும் பயனற்றதாய் இருந்தது. தூரத்தில், பெரும் இரைச்சலோடு கூடிய கனரக பீரங்கிகளின் வெடிச்சத்தத்தை நான் கேட்டேன் மற்றும் எங்களது துப்பாக்கிகளின் சத்தம் படிப்படியாகக் குறைந்தது. எங்களது குழு கடைசியாக வீழ்ந்தது. ஒரு ஹெலிக்காப்டர் நான் இருந்த இடத்தை நோக்கி குண்டுகள் வீசியது, பிறகு என்

உடலுக்குள் ஒரு சூடான உலோகத்துண்டு ஊடுருவுவதை உணர்ந்தேன். எனக்கு மிக அருகாமையில் குண்டுகள் வெடித்துச் சிதறும் பயங்கர சத்தத்தைக் கேட்டேன், பேரதிர்வினைத் தொடர்ந்து குத்தி ஊடுருவும் வலியினை உணர்ந்தேன். அதிர்ச்சி மற்றும் பெரும் பயத்துடன் என் இடது கை துண்டிக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். என் நெஞ்சில் துளையிட்ட காயம் இருந்தது, நான் சுவாசிப்பதற்கு சிரமப்பட்டேன். என் வலது கையால் என் உடைமைகளில் இருந்த ஒரு சட்டையை எடுத்து என் நெஞ்சின் காயத்திற்குள் புகுத்தினேன்.

"முடிந்தது" என்று முணுமுணுத்தேன். நான் போர்க்களத்தில் இருந்து வெகு தொலைவிற்கு அப்பால் அகற்றப்பட்டதைப்போல் உணர்ந்தேன், என்னைச் சுற்றிலும் முழங்கிக் கொண்டிருந்த சத்தம் அனைத்தும் அமைதியானது போல் தோன்றியது. என் இரத்தம் எல்லா இடங்களிலும் சிதறி இருந்தது. என் வாழ்வில் எல்லாம் முடிந்தது. பின்பு என்னை நோக்கி ஒரு மருத்துவர் வந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் அவர் எனக்கு உதவி செய்தாலும் நான் உயிர் தப்பப்போவதில்லை. நான் வார்த்தைகள் திணறியபடி, அவரை நோக்கி: "எனது...என-து... மனை... மனைவி ரெபெ-க்கா-விடம்...நான்... நான் நேசிக்...நேசி-க்கி-றே..." (நான் நேசிக்கிறேன் உன்னை என்று லெவ் ஆரோன்) என்று கூறும்படி முணுமுணுத்தேன். இவை மட்டும்தான் என் நினைவில் இருக்கிறது.

அந்த நாளில் காணப்பட்ட வெளிச்சம் என் கவனத்திலிருந்து படிப்படியாக மறைந்து இருள் சூழ்ந்தது. என் சுயநினைவை இழக்கத் துவங்கினேன். துப்பாக்கி முழங்கும் சத்தம் முற்றிலும் அமைதியானது.

## என் மூளைக்குள் போட்டிப்போட்ட கேள்விகள்

நான் படுக்கையில் இருந்து எழுந்தபோது பல கேள்விகள் என் மனதில் ஓடின. நான் எங்கு இருக்கின்றேன்? அறுவை சிகிச்சை

நிபுணர்கள் என் தோள்பட்டையைச் சரி செய்துவிட்டார்களா? ஏன் திடீரென்று இப்படி மிகவும் அமைதியாக உள்ளது? எவ்வளவு காலம் நான் இப்படி நினைவின்றி இருந்தேன்? எனக்குள் மறக்கப்பட்டு புதைந்துபோயிருந்த நினைவுகள் திரும்பினபோது, விசித்திரமான ஓர் உணர்வு என் வயிற்றைச் சுற்றி இறுக்குவது போலிருந்தது. என் கண்களுக்கு முன்பாக முழுவாழ்வும் மெதுவாகக் கடந்துபோவதைத் தெளிவாக என்னால் உணர முடிந்தது. எனது குழந்தைப்பருவ தள்ளுவண்டியின் படங்கள், எபிரெயப்-பள்ளியில் படித்தபோது செய்த சேட்டைகள்; பருவ வயதில் உணர்ந்த பாதுகாப்பின்மைகள் மற்றும் என்னை ஒரு நபராக நிலைநிறுத்திக்கொள்வதற்குப் போராடிய போராட்டங்கள், நான் திருமணம் செய்து கொள்ள நிச்சயிக்கப்பட்டிருந்த பெண்ணாகிய-ரெபெக்காள்... பற்றிய நினைவலைகள் அனைத்தும் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. இப்போதுதான் நடந்ததுபோல முன் நிகழ்ந்தவைகள் எல்லாம் புதியதாக என் மனதில் இருந்தன. பழைய நினைவுகளில் மூழ்கும் தருணம் இதுவல்ல. எனது தற்போதைய நிலைமையைப் பற்றிப் புரிந்துகொள்ள எனக்கு நிறைய தகவல்கள் தேவைப்பட்டன. இரண்டு உலகங்களுக்கு இடையே நின்று கொண்டும், இரண்டையும் முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியாமலும், அதிலும் குறிப்பாக எனது தற்போதைய நிலையைப் பற்றி எதையும் புரிந்துகொள்ள முடியாமல் நான் குழப்பத்தில் இருந்தேன்.

என் படுக்கையின் அருகில் இருந்த நாற்காலியில் உடைகள் நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தன. நான் அங்கிருந்த உடையை வேகமாக அணிகையில், அது "எனக்கு மிகவும் பிடித்தமான காக்கி நிறச்சட்டை மற்றும் பழுப்பு நிறக் காற்சட்டை என்பதை உணர்ந்து திகைப்படைந்தேன். பலமுறை அணியப்பட்ட என்னுடைய உடைகள் போல இவைகள் இல்லை. இவைகள் புதியதாக உள்ளன. எனக்கு மிகவும் பிடித்த வகையில் இருந்த என்னுடைய காலணிகள் முதற்கொண்டு அனைத்தும் மிகக் கச்சிதமாக இருப்பதை உணர்ந்தபோது, நடுக்கமாக இருந்தது.

நான் கதவைத் திறந்தபோது, மெல்லிய சப்தங்கள் என் காதில் கேட்டன. சத்தமின்றி நான் நடைபாதையைக் கடந்து நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு பெரிய அறைக்குள் சென்றேன். மற்றொரு அறையிலிருந்து குரல்களின் சத்தம் கேட்டது. அவர்கள் பேசுவதை உடனே நிறுத்திவிட்டார்கள். ஒருவேளை அவர்கள் என் சத்தத்தைக் கேட்டிருக்கலாம். நான் உறைந்துபோனேன். அப்படியே நிற்க வேண்டுமா அல்லது கதவை நோக்கிச் செல்ல வேண்டுமா? என்று நான் யோசித்ததில் நேரம் கடந்தது. குதூகலத்தோடும், புன்னகையோடும் இளைஞன் ஒருவன் நடந்து வந்தான். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்து நின்றோம். எவ்வளவு விசித்திரம் - அவன் கொஞ்சம் என் ரெபெக்காளைப்போல இருந்தான். மற்றொரு புறத்தில், என் மகன் ஆலனைப் போன்றும் இருந்தான். ஆனால் அப்படி இருக்க வாய்ப்பில்லை, ஏனென்றால் என் மகனுக்குப் பத்து - வயதே ஆகின்றது. என் கண் முன் நிற்பவரோ வளர்ந்த மனிதனாகக் காணப்பட்டார்.

## திரும்பச்சேர்தல்

"அப்பா, வந்துவிட்டீர்களா!" என்று ஆலன் சந்தோஷத்தோடு சத்தமிட்டான்.

"லெவ்!" என்று அழைத்தவாறு, நீண்ட கருமையான கூந்தலுடன் ஒரு பெண்மணி அறையின் உள்ளே நுழைந்தாள். திகைப்புடன் கண்களை அகல விரித்து, வாயினைத் திறந்தபடி நின்றுகொண்டிருந்த லெவ்வை நோக்கி அவள் ஓடினாள். அவன் அந்தத் தருணத்தின் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, கட்டி அணைக்க வரும் அவளைத் தன் கரங்களை விரித்து ஏற்றுக்கொண்டான். ஆலனும் தன் கரங்களினால் அவர்கள் இருவரையும் சேர்த்தணைத்தான்.

"நீங்கள் மீண்டுமாய் எங்களுடன் இருக்கிறீர்கள், அப்பா!" "தேவனுக்கு நன்றி" என்று ஆலன் கூறினான்.

அளவற்ற மனமகிழ்ச்சியினாலும் நம்பமுடியாமலும் புன்னகைத்தவாறு லெவ்: "நான் எப்படி இங்கே வந்தேன்? நான் எங்கே

இருக்கிறேன்? என் காயங்கள் எங்கே?" என்று அடுத்தடுத்து கேள்விகள் கேட்டான்.

ரெபெக்காள் அவன் வாயில் தன் கையை வைத்து மூடி, அவனை அமைதிப்படுத்தினாள்.

"லெவ், என் அன்பே... ஒவ்வொரு கேள்விக்காய் விடை தேடுவோம், மெகிதோவில் நடந்த போரில் நீங்கள் மரித்துப்போன அந்தக் கொடுமையான நாளிலிருந்து இன்று வரை எங்களுக்கு நிறைய சம்பவங்கள் நடந்துவிட்டன. நாம் சமையல் அறைக்குள் சென்று தேநீர் அருந்திக் கொண்டே பேசலாமே" அவள் தன் கரங்களால் கணவனை அணைத்தவாறு அவனைச் சமையல் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

பழங்கள் அடுக்கிவைக்கப்பட்ட மேஜையைச் சுற்றி அவர்கள் அமர்ந்தார்கள். ரெபெக்காள் தேநீரை ஊற்றினாள். காபியைவிட தனித்தன்மையான சுவையுடனும், நுண்ணிய வாசனையுடனும், இருந்த தேநீரின் நறுமணம் அந்த அறை முழுவதும் வீசியது. மிகுந்த உணர்ச்சிப் பெருக்கினால் லெவ் பேச முடியாமல் இருந்தான். அவனது கண்கள் மட்டும் ரெபெக்காளையும், பிறகு ஆலனையும், மறுபடியும் ரெபெக்காளையும் பார்த்துக்கொண்டே இருந்தன. சந்தோஷம் மற்றும் நம்பிக்கையின்மையினால் லெவ், தன் தலையை மெதுவாக அசைத்தான்.

தான் கடைசியாகப் பார்த்தபோது இருந்ததைவிட ரெபெக்காள் மிகவும் அழகாகவும், இளமையாகவும் இருந்தாள். அவளுடைய ஆலிவ் நிறத்தோல் இன்னும் மென்மையானதாகவும் மற்றும் நீண்ட கருங்கூந்தல் அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் இருந்தது. அவளது வலது கன்னத்தில் இருந்த மச்சம் மறைந்து போயிருந்தது. தான் இதுவரை பார்த்தவர்களில், அவள் மிகவும் அழகான பெண்ணாக இருந்தாள்.

இளைஞனாய் இருந்த ஆலன், லெவ்வினுடைய இளம் வயதின் தோற்றத்தைப் பிரதிபலிப்பவனாகவும் அதே சமயம் ரெபெக்காளுடைய

கண்களின் சாயலை மாத்திரம் பெற்றவனாகவும் இருந்தான். லெவ் தனது வாழ்க்கையின் இரு முக்கியமான நபர்களின் முன்னிலையில், மெய்யான ஆத்ம திருப்தியுடன் அமர்ந்திருந்தான்.

ரெபெக்காள் வழக்கத்தின்படியே சாப்பிடுவதற்கு முன்பு எப்போதும் தான் செய்யும் நன்றியறிதலான ஜெபத்தை ஏறெடுக்கும் விதமாக அவள்:

"கர்த்தாவே லெவ்விற்காகவும் - இன்னுமாக எங்களிடம் அவரை திரும்பக் கொண்டுவந்து சேர்த்தற்காகவும் - மரணத்திலிருந்து ஜீவனுக்குத் திருப்பியதற்காகவும், உமக்கு நன்றி; கர்த்தாவே, திரும்ப வந்துகொண்டிருக்கும் அனைவருக்கும் ஜீவனைக் கொடுத்தருளும்" என்று கூறி ஜெபத்தை முடித்தாள்.

அவளுடைய எளிமையான ஜெபம் இருதயப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்தது. அது லெவ்வை வியப்புக்குள்ளாக்கியது.

லெவ்வின் சிந்தை திரும்பவும் அந்த யுத்தக் களத்திற்குச் சென்றது. நான் உண்மையிலேயே மரித்தேனா? எனக்கு ஒன்றும் புரியவில்லை - சரி - ஆனால் அது இப்போது முக்கியமல்ல. ஏனெனில் நான் உயிருடன் இருக்கின்றேன்; சேதமின்றி நன்றாக இருக்கின்றேன். என்னுடைய மனைவி மற்றும் மகன் என்னுடன் இருக்கின்றனர் என்று சிந்தித்துக்கொண்டிருந்தான்.

தனது தாகத்தைத் தணிப்பதைக்காட்டிலும், தனது குழம்பிய மனநிலையை மறைக்க வேண்டும் என்பதற்காக, லெவ் சூடான தேநீரைப் பருகினான். அந்தத் தேநீர் விநோதமாய் புத்துணர்வு அளிப்பதாகவும், உணர்வுகளை அமைதிப்படுத்துவதாகவும் இருந்தது.

ரெபெக்காளின் கண்களை நேராகப் பார்த்து லெவ்: "நான் மரித்துப்போனேன் என்று தானே நீ சொல்லப் போகிறாய்?" என்றான்.

"அப்பா, எருசலேமுக்கு எதிராக முற்றிக்கையிடப்பட்டிருந்தவர்களால் உங்கள் முழுச்சேனையும் அழிக்கப்பட்டது" என்று ஆலன் கூறினான்.

தங்களின் முழுச்சேனையும் எப்படி கடுமையான கனரகக் குண்டுகளால் தாக்கப்பட்டது மற்றும் கனரக இயந்திரத் துப்பாக்கியால் தொடர்ந்து சுடப்பட்டது என்பதையும் நினைத்து, லெவ் மெதுவாகத் தன் தலையை அசைத்து ஒப்புக்கொண்டான். தனது குழுவில் தான்தான் கடைசியாக மரித்தது அவனது நினைவில் இருந்தது. அவனது இடது கை துண்டிக்கப்படக் காரணமாய் இருந்த அந்தக் குண்டுவெடிப்பு, அவனுக்கு மிகவும் தெளிவாக நினைவிலிருந்தது. வலியைத் தொடர்ந்து அவனுக்கு ஏற்பட்ட உணர்வற்ற நிலையையும், இது தனக்கு நடந்திருக்கக்கூடாது என்று தான் எண்ணியதையும் அவன் நினைவு கூர்ந்தான். அந்தச் சமயத்தில் தன்னருகே வந்த மருத்துவரிடம் தன் மனைவியிடம் சொல்லும்படி: "நான் போகிறேன் - ரெபெக்காள், நான்... நான் நேசிக்...நேசி-க்கி-றேன்...." என்று தான் கூறியதையும் நினைவுகூர்ந்தான். பிறகு அமைதியும், இருளும் மட்டுமே நிலவியது, வேறு எதுவும் இல்லை என்பதையும் நினைவுகூர்ந்தான்.

"லெவ் அன்பே, இதை உங்களிடம் எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நீங்கள் அந்தப் போர்க்களத்தில் கொல்லப்பட்டீர்கள். கடைசியாக நாங்கள் உங்களின் உடலைக் கண்டுபிடித்தபோது, அதை எடுத்து துயரத்துடன் நம் குடும்ப நிலத்தில்தான் புதைத்தோம்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"நான் இப்பொழுது எப்படி உயிரோடு இருக்கின்றேன்? நான் இங்கே உட்கார்ந்து உன்னிடம் எப்படிப் பேசிக் கொண்டிருகின்றேன்? என்ன நடந்து கொண்டிருக்கிறது இங்கே? நான் இறந்துவிட்டது உண்மை என்றால், பிறகு நான் ஏன் இங்கே இருக்கிறேன்?" என்று லெவ் வினவினான்.

"ஏனென்றால் நீங்கள் மரித்த நிலையிலேயே இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம் இல்லை. அதனால் நீங்கள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டு இருக்கின்றீர்கள்.

ஆலன், உங்களது சகோதரர் ஜேக், ரேச்சல் மற்றும் நான், அனைவருமே சேர்ந்து நீங்கள் திரும்ப வருவதற்கான ஆயத்தங்களைச் செய்தோம். நாங்கள் அனைவரும் சேர்ந்து இந்த வீடு, பூந்தோட்டம் மற்றும் பூங்காவை உங்களுக்காக உருவாக்கினோம்'' என்று ரெபெக்காள் கூறினாள்.

லெவ் குழப்பத்தில் தன் புருவத்தைச் சுழித்தான். ''இந்த வீடு நம்முடையது என்று தானே சொல்கிறாய், அப்படித்தானே?'' என்று அவன் சொன்ன வார்த்தையில் ''நம்'' என்பதை அழுத்தமாகக் கூறினான்.

ரெபெக்காள் அமைதியாக இருந்தாள், அவளது மறுக்கும் முகபாவனையை அவன் புரிந்துகொண்டான். அவள் கிட்டத்தட்ட பயந்து போயிருந்தாள். லெவ் தன்னுடன் தனியாக இருக்க வேண்டும் என்று அதிக விருப்பத்தோடு இருப்பதை உணர்ந்தாள்.

''ஒரு நிமிடம், ஆலன். நாங்கள் இருவரும் சற்று தனியாகப் பேச வேண்டும்'' என்றவாறு லெவ், ரெபெக்காளின் கரங்களைப் பற்றிப்பிடித்து சமையல் அறைக்கு வெளியே வந்து வேறு ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். அவன் தன் மனைவியை நேராகப்பார்த்து, அவளது இரண்டு கரங்களையும் அவன் கரங்களுக்குள்ளாகப் பற்றிக் கொண்டான்.

அவனுடைய மனதில் நினைவுகள் வெள்ளம்போல் எழுந்தன. அவளருகே நின்றபோது, அவள் உடலிலிருந்து வரும் நறுமணம், அவளது உதடுகளின் மென்மை, அவனுடைய கரங்களில் தவழ்ந்த வலுவான அதேசமயம் மிருதுவாயிருந்த அவளது உடல் இவைகளைப் பற்றின நினைவு வெள்ளங்கள் அவனது மனதில் புரண்டுவரவே ''ரெபெக்காள், நான் உன்னோடு தனியாக இருக்க வேண்டும், நான் உன்னை அணைக்க வேண்டும்'' என்று மெல்லிய குரலில் கூறினான்.

அவள் தன்னிடமிருந்து விலகுவதை அவன் உணர்ந்தான்.

"இல்லை, லெவ், இப்போதுள்ள இந்த உறவுமுறை வித்தியாசமானது" என்று ரெபெக்காள் கூறினாள்.

"'வித்தியாசமானதா?' வித்தியாசமானது என்பதன் அர்த்தம் என்ன?" அவனுடைய வேட்கை உணர்வுகள் கரையத் தொடங்கி குழப்பமாக மாறியது, பயத்தின் வெளிப்பாடாகக் கோபம் வெளிப்பட்டது. ரெபெக்காள் தன் காதலி மற்றும் தன் மனைவி. அவர்களது உறவு மாற்றப்படுவது என்பதை அவனால் ஒருபோதும் தாங்கிக்கொள்ள முடியாது. அவர்கள் பகிர்ந்துகொண்ட அனைத்தையும் எதுவந்து மாற்ற முடியும்? அவனது குரலில் கோபம் வெளிப்பட்டது. மேலும் தனது கேள்வியை அதிகாரத்தோடும் மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தின் தொனியிலும் லெவ் மீண்டும் கூறினான்.

"'வித்தியாசமானது' என்று நீ சொல்வதன் அர்த்தம் என்ன?" என்றான்.

ரெபெக்காள் தன் விழிகளை விரித்து அவனை நோக்கினாள். "நாம் இப்போது வேறு உலகில் வாழ்கிறோம்" என்று கூறிய அவளது குரல் பலவீனமாய் இருந்தது, அவர்கள் இருவரது கண்களும் சந்தித்தன. திடீரென்று அவள் தன்னிலும் தடுமாற்றத்தை உணர்ந்தாள்.

"நமது திருமணம் - திருமணத்தின் அனைத்து பந்தங்களும் - நாம் இறந்தபோது முடிவுற்றது" என்று கூறி அவனது முகத்தை விட்டு தனது பார்வையை வேறுபுறம் திருப்பினாள்.

லெவ் தனது கால்கள் பலவீனமாவதை உணர்ந்தான். மனைவி என்ற உறவுமுறை இன்றி, எதுவும் பேசாமல் தன் முன்னே நின்று கொண்டிருந்தவளைப் பார்த்துக்கொண்டிருந்த அந்த ஒரு நிமிடம் லெவ்விற்க்கு யுகங்கள் கடந்து போவதைப்போல இருந்தது.

இறுதியாக லெவ், "என்னைப் பார் ரெபெக்காள், நீ அப்படிச் சொல்லமுடியாது" என்றான். அவன் தன் கரங்களால் அவளது

முகத்தைத் தாங்கி, இருவரது கண்களும் சந்திக்கும்படியாக அவளது தலையை மெல்ல உயர்த்தினான்.

"நாம் இருவரும் ஒன்றாக இருந்த காலங்கள் உனக்கு நினைவில் இல்லையா? நம்முடைய தேனிலவு, நாம் ஒன்றாக இருக்கும்படி தெரிந்துகொண்ட குகை, அப்போது வீசிய புயல், மழை இவை அனைத்தும் உனக்கு ஞாபகம் இல்லையா?" என்றான்.

ரெபெக்காளின் உதடுகள் நடுங்கின. அவளது பழுப்பு நிறக் கண்களின் ஆழத்தில் செயலற்று இருந்த உணர்ச்சிகள் புத்துயிர் பெறுவதை அவன் பார்த்தான். அவள் தன்னிடம் நெருங்கி வரும்படி இழுத்தான்.

"ம்ம், 'எனக்கு நினைவிருக்கிறது லெவ்.' எனக்கு நினைவிருக்கிறது" என்று அவள் மென்மையாக முணுமுணுத்தாள். "நானும் அதை திரும்பப்பெற விரும்புகிறேன். ஆனால் இப்போதுள்ள இந்த உறவுமுறை வித்தியாசமானது. இங்கு இளம் குழந்தைகளை வளர்ப்பதற்காக மட்டுமே தம்பதிகள் ஒன்றாக வாழ்கின்றனர். குழந்தைகள் வளர்ந்த பிறகு, ஒவ்வொருவரும் தனியாக அவரவர் சொந்த வீடுகளில் வசிக்கின்றனர். தனியாகவும், சில சமயங்களில் விருந்தினர்களுடனும் வாழ்வதே சிறந்தது என்று நாங்கள் கண்டுகொண்டோம்" என்று கூறின ரெபெக்காளுடைய குரலின் தொனி, குறைந்து ஒலித்தது.

"உலகம் மக்களால் நிரம்பியிருப்பதால் கணவன் - மனைவி உறவு இனிமேல் தேவையில்லை" என்று ரெபெக்காள் மிகவும் அமைதியாகக் கூறினாள்.

"உலகம் மக்களால் நிறைந்துள்ளது என்று நீ சொல்வதின் அர்த்தம் என்ன? அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று பதட்டத்தோடு லெவ் கேட்டான்.

"தேவனுடைய மனுஷர்கள் இவையெல்லாவற்றையும் எங்களுக்கு விவரித்துச் சொன்னார்கள். இது பைத்தியகாரத்தனமாகத் தோன்றும்

என்று எனக்குத் தெரியும் ஆனால் நாங்கள் இந்தப் புதிய பூமியில் பல வருடங்களாக வாழ்ந்துகொண்டு இருக்கிறோம். மேலும் விஷயங்கள் பழைய பூமியில் இருந்ததைப்போல இப்போது இல்லை" என்றாள்.

"தேவனுடைய மனுஷர்களா - சரி இருக்கட்டும்! நீ அவர்கள் கூறிய அனைத்தையும் நம்புகிறாயா? ஒருவேளை அவர்கள் ஏமாற்றுக்காரர்களாக இருந்தால் என்ன செய்வாய்?" என்று சந்தேகத்துடன் லெவ் கேட்டான்.

"லெவ், என் கண்களால் அவர்கள் செய்யும் அற்புதங்களைக் நான் கண்டிருக்கிறேன். மேலும் அவர்கள் உறவுகளைப் பற்றிக் கூறும் அனைத்தும் உண்மைதான்" என்று ரெபெக்காள் உறுதியாகப் பதிலளித்தாள்.

"உன்னால் எப்படி இதைக் கூற முடிகின்றது? நமது திருமணம் இப்போது ஒரு பொருட்டாக உனக்கு தெரியவில்லையா? இனிமேல் நீ என்னை நேசிக்கமாட்டாயா? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நமக்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது இங்கே?" என்று குழப்பத்துடன் லெவ் வினவினான்.

பதில் தெரியாத பல கேள்விகளால், திடீரென்று தன் தலை சுற்றுவது போல் லெவ் உணர்ந்தான்.

"லெவ், நானும் உங்களை நேசிக்கின்றேன்." ரெபெக்காளின் முகத்தில் கண்ணீர் வழிந்தது, அவள் தனது கையால் அவனது கன்னத்தை வருடினாள். அவளது தொடுதல் மென்மையாக இருந்தது.

லெவ் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற்றதுபோல் உணர்ந்ததால், அவளை முத்தமிட மெதுவாக அவளது முகத்தைத் தன்னிடம் நெருக்கமாக இழுத்தான். அவள் எதிர்க்கவில்லை. அவர்களது உதடுகள் லேசாகத் தொட்டதும், அவன் ஒரு விசித்திரமான பாசத்தின் ஆழத்தையும், மென்மையையும், முத்தமிட

வேண்டும் என்ற ஆவல் தன்னிலிருந்து திசைதிருப்பப்பட்டு அரவணைக்க விரும்புவதையும் உணர்ந்தான். அவன் அவளிடம் இப்போது உணர்ந்த காதல், அவனுக்கு முன்பு நினைவில் இருந்ததை விட வலிமையாய் இருந்தது ஆனால் எப்படியோ - "அது வித்தியாசமாக இருக்கிறது" என்பதை லெவ் உணர்ந்தான்.

அவன் திடுக்கிட்டுப் பார்த்தான். "நாம் மிகவும் வித்தியாசமான உலகில் வாழ்கின்றோம்" என்று ரெபெக்காள் கூறியதில் ஏதோ அர்த்தம் இருப்பதாக அவனும் உணர்ந்தான். முத்தமிட வேண்டும் என்ற உணர்ச்சி பொருத்தமற்றதாகத் தோன்றியது, இந்த ஆறுதலான அரவணைப்பே போதுமானது என்ற நிறைவு அவனுக்குள் ஏற்பட்டது. ரெபெக்காளின் மீது அவன் கொண்டிருந்த காதலும், பாசமும் அவனுடைய சிந்தையின் ஒவ்வொரு நரம்புகளிலும் நிறைந்திருந்தது.

"இந்தப் புதிய உலகம் பற்றி எனக்குப் புரியவில்லை, ரெபெக்காள்" என்றான்.

"என்னாலும் இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. காரியங்கள் இப்படித்தான் புதிய உலகில் இருக்கின்றது என்பதை என் அறிவால் புரிந்துகொண்டு உள்ளேன். ஆனால் நீங்கள் உயிர்த்தெழுந்து வரும்போது நமது உறவுமுறை எப்படி இருக்கும் என்று நான் யோசித்ததும் உண்டு, அதனால் குழம்பிப்போய் காணப்பட்டதும் உண்டு" என்று ரெபெக்காள் கூறினாள்.

"நானும் குழப்பத்தில்தான் இருக்கின்றேன்" என்று லெவ் கூறினான். அவளை அணைத்திருந்த கைகளை விடுவித்தான். லெவ் அளவு கடந்த சந்தோஷத்திலும், அளவுகடந்த குழப்பத்திலும் தன்னை உணர்ந்தான்.

## ஏதேனின் கனி

ரெபெக்காள் லெவ்வின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, மெதுவாக சமையலறையை நோக்கி அழைத்துச் சென்றாள்.

"உங்களுக்கு அதிர்ச்சியாக இருப்பதைப்போலவே, அதிலும் குறிப்பாக உங்களோடு இருக்கும் இந்த நேரத்தில் எனக்கும் அதிர்ச்சி ஆகத்தான் உள்ளது. இவைகளைப் புரிந்துகொள்ள நம் இருவருக்கும் கொஞ்சம் அவகாசம் வேண்டும். இதுவரை இல்லாத அளவிற்கு நான் உங்களை நேசிக்கிறேன், லெவ்" என்று ரெபெக்காள் கூறினாள்.

அவளது கண்களில் தெரிந்த பிரகாசம் அவனது குழப்பத்தை அமைதிப்படுத்தியது. அவன் ரெபெக்காளை நம்பினான். அவள் உடனிருப்பதே தனக்குப் போதும் என்று திடீரென்று உணர்ந்தான். அவன் மீதான அவளுடைய அன்பை நம்பினான். மேலும் அவள் தன்னிடம் பொய் பேசமாட்டாள் என்றும் அறிந்திருந்தான். உயர்நிலைப் பள்ளியில் அவர்களது இளமைப்பருவத்தில், அவன் அவளைப் பார்த்த அக்கணத்திலிருந்து, அவனது இருதயம் மற்றும் ஒவ்வொரு சிந்தனையையும் அவள் ஆட்கொண்டிருந்தாள். உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் கூச்ச சுபாவமுடையவனாக லெவ் காணப்பட்டான். மேலும் பள்ளி பருவத்தில் அறிமுகமானவர்களுக்கு இடையே நிகழும் மேலோட்டமான உரையாடலைத் தாண்டி, அவனால் அவளுடன் பேச முடியாமல் இருந்தது. ஆனால் சில வருடங்களுக்குப் பின்பு, அவர்கள் எபிரெயப் பல்கலைக்கழகத்தில் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டு, பிரிக்க முடியாதவர்களாய் மாறினார்கள். அவர்கள் இருபத்து மூன்றாவது வயதில் திருமணம் செய்துகொண்டனர். அவர்களுக்குத் திருமணமான அடுத்த வருடத்தில் ஆலன் பிறந்தான். அவன் மரித்தபோது அவர்களுக்குத் திருமணமாகி பன்னிரண்டு வருடங்களாகி இருந்தன. ரெபெக்காள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான் ஆனால் அவள் கூறிய சில முரண்பட்ட கருத்துகள் அவனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் தனது மனைவியின்றி வாழ்வதைக்குறித்து லெவ்வால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

***

**"நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்."**
**(வெளிப்படுத்தல் 22:2)**

# அத்தியாயம் - 2

ஆலன் காத்துக்கொண்டிருந்த மேஜையில் ரெபெக்காளும், லெவ்வும் அமர்ந்தார்கள். சற்று முன்பு அவர்கள் இருவரும் தனியாகச் சென்று பேசியது போன்றதொரு நிகழ்வே நடவாததுபோல, ரெபெக்காள் தனது பேச்சினைத் தொடர்ந்தாள்.

"தேவ மனுஷர்களைப் பற்றி நான் கூறினேனல்லவா, உண்மையில் அவர்களது அலுவலகத்தில் அதிகமானோர் உள்ளனர், தோராவில் உள்ள அனைத்து விசுவாசமுள்ள ஆண்களும், பெண்களும் இதில் அடங்குவர், அவர்கள் அனைவரும் உயிர்த் தெழுப்பப்பட்டுள்ளனர். முற்பிதாக்களென்று அழைக்கப்படும் அவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, சாராள், தெபோராள் முதலானோர் ஆவார்கள்; இப்பொழுது அவர்கள் அனைவரும் ஜீவனோடு உள்ளனர். அவர்கள் இப்போது இஸ்ரயேலின் பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள். அநேக நாடுகள் ஏற்கெனவே அவர்களது அதிகாரத்திற்குக் கீழாக வருவதற்குக் கேட்டுக்கொண்டுள்ளனர். விரைவில் முழு உலகமும் அவர்களுடைய நீதியான கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்" என்று ரெபெக்காள் விவரித்தாள்.

ரெபெக்காள் தன் கரங்களை லெவ்வின் கரங்களின் மேல் வைத்து மென்மையாக அழுத்தினாள்.

"உங்களை மீண்டும் ஜீவனோடு நாங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால், நீங்கள் திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளைச்

செய்யும்படி தேவ மனிதர்கள் எங்களிடம் அறிவுறுத்தினார்கள். தேவையான ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும்போது, நீங்கள் உயிர்த்தெழுப்பப்படுவீர்கள் என்று தாவீது ராஜா கூறினார். தேவனுடைய அன்பான முன்னேற்பாட்டின் காரணத்தினால், இன்று நீங்கள் எங்களுடன் இருக்கின்றீர்கள். இவையனைத்தும் நம்புவதற்குக் கடினமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இவையனைத்தும் உண்மை. லெவ், நீங்கள் இங்கு இருக்கின்றீர்கள்! அவர்கள் எங்களுக்கு வாக்களித்தபடி இன்று காலையில் நீங்கள் உயிர்த்தெழுப்பப்பட்டுள்ளீர்கள். நானும், ஆலனும் உங்கள் படுக்கை அறையிலிருந்து நீங்கள் வெளியே வர காத்திருந்தோம். அநேகர் உயிர்த்தெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்றாள்.

லெவ் மேசையையேப் பார்த்துக் கொண்டிருந்தான். ரெபெக்காளின் இதமான தொடுதலினால் ஆறுதல் அடைந்தான். மிகவும் பழக்கமற்ற, நம்பமுடியாத சூழ்நிலையில் பரிச்சயமான உணர்வை உணர்ந்தான். அவன் மரித்துவிட்டதை நம்ப முடிந்தது ஆனால் மீண்டும் தான் ஜீவனுடன் எப்படி இருக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ள அவனால் முடியவில்லை. எந்த நொடிப்பொழுதிலும் எல்லாம் மறைந்துவிடுமோ என்றும், தான் திரும்பவும் போர்க்களத்தில் விழிக்க வேண்டுமோ என்றும் பயந்தான்.

லெவ் மேஜையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பழக்கிண்ணத்தின் மீது தனது பார்வையைத் திருப்பினான். ஆலன் மாம்பழம் போல் இருந்த ஒரு பழத்தை எடுத்துக் கடித்தான், லெவ்வும் அவ்வாறே செய்தான். அதன் தோல் ஆரஞ்சு நிறமாகவும், அதன் சுவை தேன்போல, தனித்தன்மையுடையதாய் இருந்தது; ஆரஞ்சு மற்றும் மாம்பழம் சேர்ந்த கலவையின் புத்துணர்வைத் தந்தது. இப்பழத்தினைக் குறித்த ஓர் உரையாடலை மேற்கொள்ளும்படி லெவ் முயற்சி செய்தான்.

"இந்தப் பழம் மரபணு மாற்றப்பட்ட, ஆய்வகச் சிறப்புத் தன்மை வாய்ந்தது என்றுதானே சொல்லப் போகிறீர்கள்" என்று நகைச்சுவையாக லெவ் கூறினான்.

"இல்லை, அப்பா. நீங்கள் ஒருவேளை இதை நம்பமாட்டீர்கள் ஆனால் நம் முற்பிதாக்கள் இப்பழத்தின் விதையை ஏதேன் தோட்டத்திலிருந்து கொண்டு வந்தார்கள். இந்த விதைகள் மண்பாண்டங்களில் 6000 வருஷங்களுக்கும் மேலாக மிகவும் பாதுகாப்பாகச் சேமிக்கப்பட்டு வந்துள்ளன. முற்பிதாக்கள், இஸ்ரயேலுக்குத் திரும்பிவந்தபோது முதலாவதாக, இவ்விதைகளை நாற்றுகளாக வளர்த்து, பின்பு அவற்றை மரங்களாக்கினர். தேவன், ஏதேன் தோட்டத்தில், கிழக்கே நாட்டிய அதே மரங்கள் மீண்டும் இஸ்ரயேலில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. விரைவில் அவைகள் பூமியெங்கும் வளரும்" என்று ஆலன் மிகவும் உறுதியாகக் கூறினான்.

"இந்த மரங்களின் பழங்களில் ஒரு சிறப்பு உயிர்த்தன்மை இருக்கின்றது. ஆதாமையும், ஏவாளையும் தேவன் ஏதேனில் இருந்து விரட்டியது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா. ஒருவேளை அவர்கள் ஏதேனிலிருந்து வெளியேற்றப்படாமல் இருந்திருந்தால், ஆதாம் ஜீவ விருட்சத்தின் கனியைப் பறித்துப் புசித்து என்றென்றும் உயிரோடிருந்திருக்கலாம்" என்று ரெபெக்காள் கூறினாள்.

பள்ளியில் சிறுவயதிலிருந்தே லெவ் வேதவாக்கிய மேற்கோள்களைக் கேட்டதேயில்லை. "நாம் சாப்பிடுகிற இந்தப் பழம் ஏதேனின் ஜீவ விருட்சத்தின் கனியாய் இருக்கிறது, இவற்றை நாம் புசித்தால் என்றென்றும் ஜீவனோடு இருப்போம் என்று கூறுகிறாயா?" என்று லெவ் சந்தேகத்துடன் வினவினான்.

ரெபெக்காள் தலையை ஆட்டினாள், "ஆமாம் லெவ், ஆனால் இப்பொழுதே எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள முயற்சிக்காதீர்கள்;

நீங்கள் விரைவில் இப்பழத்தின் பலன்களை அனுபவிப்பீர்கள். நாங்கள் அதைச் சாப்பிட ஆரம்பித்ததிலிருந்து, எங்களது ஆற்றல், வலிமை மற்றும் மூளைத்திறன் மேம்பட்டுள்ளது. வயதாகும் செயல்முறை படிப்படியாக மாற்றப்படுகிறது. இனி கண்ணாடிகள், பல் மருத்துவர்கள் அல்லது மருத்துவர்களின் தேவை இருப்பதில்லை. பூரணமான உணவைக் கொண்டு போஷிக்கப்படுகையில், மனித உடலானது பரிபூரணத்திற்குத் திரும்பத் தொடங்குகின்றது" என்றாள்.

"மீன் துண்டுகளால் ஸ்டஃப் செய்யப்பட்ட சாண்ட்விச், எனது காலை உணவில் இல்லாததைக் கண்டு நான் ஏமாற்றம் அடைந்ததை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் ஏதேனிலிருந்து கிடைத்த இந்தப் பழம் இதுவரை நான் சாப்பிட்ட பழங்களிலேயே மிகவும் ருசியாக உள்ளது." லெவ் சற்று நேராக அமர்ந்தவாறு, "ஆனால் 'என்றென்றும் ஜீவனோடு வாழலாம்' என்ற உன்னுடைய கதையைக் குறித்து சந்தேகிக்க உரிமை உண்டு" என்றான்.

ஆலன் உரையாடலைத் தொடர்ந்தவனாக: "அப்பா, நீங்கள் எப்போதாவது ஏன் தேவன், ஏதேனில் உள்ள ஜீவ விருட்சத்தை அழிக்காமல், அவர் அதை தூதர்கள் மூலமாகப் பாதுகாத்தார் என்று யோசித்துப் பார்த்ததுண்டா?" என்று கேட்டான்.

தேவன், ஏதேனில் தோட்டத்தை நாட்டியபோது அவர் அதை மீண்டும் நடவு செய்ய விரும்பவில்லை. ஜீவ விருட்சத்தைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது என்று கூறி ரெபெக்காள் உரையாடலை முடித்தாள்.

"அப்படியானால் ஏதேனைப் பாதுகாக்கும் கேரூபீன்களும், பல நூற்றாண்டுகளாக ஏதேன் மரங்களின் விதைகளைப் பாதுகாப்பதில் ஈடுபட்டிருந்ததாக நீங்கள் சொல்கிறீர்கள் தானே? இப்போது நீங்கள் முற்பிதாக்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறவர்கள்

உயிர்தெழுப்பப்பட்டு ஏதேனின் விதைகளை கேரூபீன்களிடமிருந்து பெற்று, அதை எல்லா இடங்களிலும் நடவு செய்துள்ளார்கள் என்றும், நாம் அந்தக் கனியைப் புசித்தால் என்றென்றும் ஜீவனுடன் இருக்கலாம் என்றும் கூறுகின்றீர்களா?" என்று கேட்ட லெவ்வின் வார்த்தைகளில் சந்தேகம் இருந்தது.

தனது மனம் விழிப்புடன் இருப்பதைக் கண்டு, லெவ் விநோதமாக உணர்ந்தான். அவனுடைய அறிவாற்றலால், அவர்கள் கூறிய காரியங்களை எளிமையாக ஒன்றிணைத்துப் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் இந்தப் புதிய யோசனைகள் அர்த்தமுள்ளவைகள்தான் என்பதில் அவனுக்கு உறுதியாக இருக்க முடியவில்லை. தனக்கு சிந்திக்க நேரம் கிடைக்கத்தக்கதாக, இவ்விஷயத்திலிருந்து தன்னை திசை திருப்பினான்.

"சரி, நாம் 'எழுப்பப்பட்டதாக' என் மனம் உணர்கிறது. ஆனால் எனது பழைய சிதைந்த உடல் எங்கே? கடைசியாக என் நினைவில் இருந்த உடல் போன்று எனது இந்தப் புதிய உடல் இல்லையே" என்று லெவ் கேட்டான்.

"அது நாங்கள் புதைத்த இடத்தில் உள்ளது, அப்பா. நாங்கள் உங்களைப் புதைத்த இடத்தையும், கல்லறையையும் மற்றொரு நாள் காண்பிக்கிறோம். வேதவாக்கியம் என்ன கூறுகிறது என்றால் ஒவ்வொருவருக்கும் தேவன் புதிய மேனியைத் தருகிறார். அதனால் நீங்கள் குறைவற்ற (ஊனமற்ற) புதிய ஆரோக்கியமான உடலைப் பெற்றிருக்கின்றீர்கள். உங்களுடைய மரபணு அமைப்பு அப்படியே இருக்கும். லெவ் ஆரோன் என்ற உங்களது அடையாளம் தேவன் உங்களுக்குக் கொடுத்த புதிய உடலில் மீண்டும் இயங்கும்" என்று ஆலன் கூறினான்.

"ஆஹா! நான் நிறையவற்றை இன்னும் புரிந்துகொள்ள வேண்டும்போல் உள்ளதே" என்று எண்ணிய லெவ் தனது குறைவின்

நிமித்தம் வருந்தினான். அவனுக்குப் புரியாத பல விஷயங்கள் இருந்தன. ரெபெக்காள் மற்றும் ஆலனுக்கு அதிகம் தெரிகிறது என்றும், தனக்கு ஒன்றும் தெரியவில்லை என்றும் உணர்ந்தான். அவனுக்கு அவனுடைய கடந்த காலம் பற்றித் தெரிந்திருந்தது ஆனால் நிகழ்காலம் இன்னும் ஒரு பெரும் மர்மமாகவே இருந்தது. வாழ்விற்கான வருமானத்தை எப்படிப் பெற முடியும்? பழங்கள் மட்டுமே போதுமானதாக இருக்குமா? போன்ற பல கேள்விகள் அவனைப் பாதுகாப்பற்றவனாக உணரச் செய்தன.

ரெபெக்காளுடன் தனியாக அறையில் இருந்தபோது பேசிய சம்பாஷனைதான் அவனுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. திருமண உறவு பழைய உலகத்தில் இருந்தததுபோல இனியும் இருக்கப்போவதில்லை என்ற கருத்தின் ஆழத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனாலும் அவர்களுடைய உறவில் ஏதோ வித்தியாசம் இருப்பதுபோல் அவன் உணர்ந்தான். ‘வித்தியாசம்’ என்ற வார்த்தையினையும், அதன் அனைத்து தாக்கத்தினையும் எண்ணிப்பார்த்தபோது, அவனது உடல் சிலிர்த்தது. அவனுடைய மகன் ஆலனும் கூட அவனுடைய தேவை இல்லாத அளவிற்கு, ஒரு மனிதனாக வளர்ந்துவிட்டான். இப்போது தனது மகன் தன்னைச் சார்ந்து இருப்பதைக்காட்டிலும் தான் ஆலனை மிகவும் சார்ந்து இருப்பதாக உணர்ந்தான். தான் எதையும் புரிந்துகொள்ளமுடியாமல் குழப்பத்தில் இருக்கும்போது, அனைத்தையும் அறிந்தவனாக ஆலன் தெளிவாக இருப்பதாக உணர்ந்தான். இந்தப் புதிய உலகத்தில் அவர்களுடைய ஸ்தானம் முற்றிலுமாக தலைகீழாக மாறியிருந்தது. லெவ் இதைக் கொஞ்சம் கூட விரும்பவில்லை.

அவர்கள் காலை முழுவதும் பேசினார்கள். அவனுடைய மரணத்திற்குப் பிறகு எப்படி ரெபெக்காளும், ஆலனும் சமாளித்தார்கள் என்பதைப் பற்றியும், எருசலேமிற்கு எதிராக நடந்த யுத்தத்திற்கு பிறகு

எப்படித் திடீரென்று எல்லாம் முற்றிலும் மாறிப்போனது என்பதைப் பற்றியும் அவர்களிடமிருந்து லெவ் அறிந்து கொண்டான்.

"தீர்க்கதரிசிகளின் நாட்களில் நடந்த போர்களில் செய்ததைப் போன்றே, இப்போதும் கர்த்தர் தலையிட்டு இஸ்ரயேலுக்காகப் போரிட்டார். அதிசயிக்கத்தக்க விதத்தில் எதிரிகள் அழிக்கப்பட்டனர், ஆனாலும் உங்கள் சகோதரரே உங்களுக்காக இந்த விவரங்களைக் கூறும்படி விட்டுவிடுகின்றேன்" என்று ரெபெக்காள் மெதுவாகக் கூறினாள். இஸ்ரயேலை ஆக்கிரமித்த படைகளுக்கு என்ன செய்வது என்பது குறித்து ஜேக்கிற்கும், லெவ்விற்கும் இடையே முந்தைய உலகில் கடுமையான வாக்குவாதம் இருந்ததை அவள் அறிந்திருந்தாள், அதைப்பற்றி அவர்கள் பேசுவது சிறந்தது என்றும் அவள் கருதினாள்.

"ஜேக், ரேச்சல் மற்றும் அவர்களுடைய மகள் ஆனியும் விரைவில் இங்கு வருவார்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

தன் சகோதரனின் பெயரைச் சொன்னதும், லெவ் சற்று அசௌகரியமாக உணர்ந்தான். அவர்கள் இருவரும் கடினமாக வாதிட்டிருந்தார்கள். வாதாடுவது அவர்களுடைய பழக்கமாக இருந்தது. வெற்றியோ அல்லது தோல்வியோ முடிவு வரையிலும் மிகவும் தைரியமாகப் போராட வேண்டும் என்று லெவ் நம்பினான். ஜேக், போரில் தைரியத்தைக் காண்பிப்பதில் அக்கறைக் காட்டவில்லை, மாறாக கர்த்தரின் பலத்த கரத்தைச் சார்ந்து இருப்பதற்கான தைரியத்தைக் கண்டடைவதில் நோக்கமாக இருந்தான். எசேக்கியேல் 38-ஆம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனத்தில், அவர்களைத் தாக்க அணிதிரண்டு வந்த "கோகுவை" தேவன் எவ்வாறு அழிப்பார் என்று மீண்டும் மீண்டும் ஜேக் குறிப்பிட்டபோது லெவ் எரிச்சலடைந்ததை நினைவுகூர்ந்தான்.

லெவ் அப்போதும் ஜேக் சொல்வது சரி என்று நம்பவில்லை, இப்போதும் அதை நம்ப விரும்பவில்லை. ஆனால் நிஜத்தில் பார்த்தால்,

ஜேக் எதிர்பார்த்ததுதான் நடந்திருந்தது என்று லெவ்வுக்குத் தோன்றியது. இந்த உலகம் முன்பு இருத்ததைவிட ஒரு சிறந்த இடமாகவும், அழகான இடமாகவும் தோன்றியது. லெவ் சற்று சங்கடமாக உணர்ந்தான். அவன் பழைய உலகில் தன்னுடைய சிந்தனையில், தேவனை முற்றிலுமாக அகற்றிவிட்டிருந்ததை உணர்ந்தான். இந்தப் பழைய சிந்திக்கும் முறையானது இப்போதைய அனுபவத்திற்கு சவாலாக இருந்ததையும் உணர்ந்தான். பழைய உலகின் சிந்தையோடு இந்தப் புதிய உலகில் இருந்தான், அவன் புதிய வழிமுறைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவும் இல்லை. அவன் தன்னுடைய எண்ணங்களைத் தனக்குள்ளேயே வைத்துக்கொள்ள முடிவு செய்தான்.

கதவை நோக்கி நடந்தவளாக, ரெபெக்காள்: "நாம் சற்று வெளியே நடந்து செல்லலாம் என்றாள். நாங்கள் உங்கள் எஸ்டேட்டை சுற்றிக் காண்பிக்கிறோம்." லெவ்வும், ஆலனும் வெளியே அவளைப் பின் தொடர்ந்தனர். "இந்த வீடு தற்காலிகமானதுதான் - நீங்கள் வேண்டுமானால் சாலையோரத்தின் முடிவில் உள்ள இடத்தில் மாற்ற விரும்பினால் மாற்றிக் கொள்ளலாம். இந்த நிலம் உங்களுடையது - நீங்கள் நித்திய காலமும் இங்கேயே வாழ்ந்து கொள்ளலாம்."

லெவ் சுற்றிப் பார்த்தான். ஆனால் அவனால் நிலத்தின் எல்லைக் குறிகள் எதையும் அறிய முடியவில்லை. "நாம் எங்கே இருக்கின்றோம் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே...." என்று குழம்பினான்.

ஆலன் சிரித்தபடி, "நாம் இப்போது தெற்கு இஸ்ரயேலில், பெயெர்சபாவிற்கு அருகே இருக்கிறோம் என்று கூறினான். ஒரு காலத்தில் இது நெகர் பாலைவனமாக இருந்தது. இப்போது இங்கு மழை அடிக்கடி பெய்கிறது. நீங்கள் இப்போது பார்க்கிறபடி அனைத்தும் மிகச் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கின்றது" என்று கூறினான்.

ஆலன் கூறிய அனைத்தும் நிச்சயமான உண்மையாக இருந்தது. அவர்கள் பசுமையான பூண்டுகள் மற்றும் மலர்கள் நிறைந்த தோட்டத்தின் வழியாக நடந்து வந்தார்கள். பச்சை புல் திட்டுக்கள் அவர்களின் கால்களுக்குக் கீழே கம்பளம் போல் வளர்ந்து இருந்தது. எங்குமே களைகள் இல்லாததை, லெவ் வியப்போடு பார்த்தான்.

"எப்படி இதை நீங்கள் களைகளற்றதாக வைத்திருக்கின்றீர்கள்?" என்று லெவ் ஆச்சரியமாகக் கேட்டான்.

"அப்பா, நாம் இப்போது புதிய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உண்மைக்கு நீங்கள் பழகிக்கொள்ள வேண்டும். பூமி மீது தேவன் கொடுத்த சாபம் நீக்கப்பட்டுவிட்டது" என்று ஆலன் பதிலளித்தான்.

தோராவிலிருந்த வார்த்தைகள், எதிர்பாராவிதமாக லெவ்வின் ஞாபகத்திற்கு வந்தது. மேலும் அவனது நினைவாற்றல் அவனை ஆச்சரியப்படுத்தியது, ஆர்வத்துடன் அவற்றை மெதுவாக தனக்குத்தானே திரும்பத் திரும்ப அசை போட்டுக்கொண்டான்: "***உன்னிமித்தம் பூமியானது சபிக்கப்பட்டிருக்கும் நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய்.***"

"நாம் பழைய நாட்கள் போன்று களைக் கொல்லிகளைப் பயன்படுத்தத் தேவையில்லை, அவைகள் நம் உணவு சங்கிலியமைப்பில் கொஞ்சம் கொஞ்சமாக விஷத்தைச் சேர்த்துள்ளன. கர்த்தர் பூமியிலிருந்து சாபத்தை எடுத்துப்போட்டபோது, களைகள் படிப்படியாக மறைந்து போயின" என்று ஆலன் கூறினான்.

லெவ்வுக்கு இந்தப் புதிய முன்னேற்றம் பிடித்திருந்தது. ஏனெனில் அவன் களையெடுக்கும் வேலையை வெறுத்தவனாய் இருந்தான். "இனி யாரும் களையெடுக்க வேண்டியதில்லை என்று சொல்கிறீர்களா?" என்று அவன் உற்சாகத்துடன் வினவினான்.

"உங்களுக்குப் புரிந்துவிட்டது அப்பா!" தேசங்கள் முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வருவதால், சாபமானது நீங்கிவிட்டது. மழை அதிகரித்துள்ளது, "*வனாந்தரத்தில் தண்ணீர் ஊற்று உடைத்துப் புறப்பட்டு, பாலைவனத்தில் ஓடைகளும் இருக்கும்.*" தாவீது இராஜா கூறி இருந்ததுபோல "*பூமி அதிக பலனைக் கொடுக்கும்... நமது அறுவடை அற்புதமாயிருக்கும்*" என்று ஆலன் கூறினான்.

*ஏசாயாவின்* 35-ஆம் அதிகாரத்திலிருந்து ஒரு தீர்க்கதரிசனத்தையும், *சங்கீத புஸ்தகத்திலிருந்து* ஒரு தீர்க்கதரிசனத்தையும் ஆலன் குறிப்பிடுகின்றான் என்பதை லெவ் உணர்ந்தான். அவனது குழந்தைப் பருவத்திற்குப் பிறகு கேட்டிராத வேதவசனங்களை, இப்புதிய சிந்தை நினைவுக்குக் கொண்டு வருவதைக் கண்டு லெவ் மீண்டும் ஆச்சரியப்பட்டான்.

அவர்கள் தோட்டத்தைச் சுற்றி நடந்து செல்லும்போது, ஒரே மாதிரியான இடைவெளியில் நடப்பட்டிருந்த பழங்கள் தரும் சிறிய மரங்களின் தோப்பை லெவ் கவனித்தான். சில ஏதேனின் பழங்களாலும், மற்றவை பூக்களாலும், இன்னும் சில சிறிய பச்சை நிறப் பழங்களாலும் நிறைந்திருந்தன.

ஆலன் சிறிய மரங்களின் தோப்பைச் சுட்டிக்காட்டினான்.

"இந்த மரங்கள் தனித்தன்மை வாய்ந்தவை, அவற்றில் பெரும்பாலானவை வெவ்வேறு மாதங்களில் பழங்களைத் தருகின்றன. இதனால் ஒவ்வொரு மாதமும் நமது ஊட்டச்சத்து தேவைகளுக்கு ஏற்ப ஒரு புதிய அறுவடை செய்யப்படுகின்றது. மேலும் நமக்கு 'ராஃபா பழம்' என்று அழைக்கப்படும் பழத்தை இவைகள் தருகின்றன; 'ராஃபா' என்றால் 'குணமடைதல்' என்று பொருள்படும் என்றான். பின்பு நீண்ட இலைகளால் பரந்து விரிந்திருந்த குறுகிய கிளைகளில் மென்மையான

இலைகள் மற்றும் நறுமணம் நிறைந்த பழங்களால் நிரம்பியிருந்த, வெள்ளியைப் போன்ற தோற்றமளிக்கும் வழவழப்பான மரப்பட்டையைக் கொண்ட ஒரு அழகிய மரத்தில் ஆலன் தனது கைகளை வைத்தவாறு, இந்த 'ஜீவ விருட்சம்' ஏதேன் பழத்தை வருஷம் முழுவதும் தருகின்றது என்றான்; நாங்கள் இதன் பழத்தை 'ஓலாம்' என்று அழைக்கிறோம்; ஏனெனில் அதன் எபிரேய வார்த்தையின் அர்த்தம் 'நித்தியத்திற்கும்' என்பதாகும். அதன் பழம் உயிர் சக்தியைப் பெறுவதற்கான நிலையான ஆதாரமாயுள்ளது என்றான். மேலும் எப்போதும் இவை நம்முடைய தேவைக்கு அதிகமாக இருக்கின்றன. வித்தியாசமாகச் சாப்பிட வேண்டும் என்று நாம் விருப்பப்பட்டால் நாம் மற்ற பழங்களையும், காய்கறிகளையும் சாப்பிடுவோம், 'ஓலாம்' பழத்தை ஒவ்வொரு நாளும் மற்றும் 'ராஃபா' பழத்தை அதன் பருவகாலத்தின் ஒவ்வொரு நாளிலும் சாப்பிடலாம். மேலும் பன்னிரண்டு மரங்களின் இலைகள், இங்குப் பிரபலமாக இருக்கும் தேநீர் தயாரிக்கப் பயன்படுகின்றன. "***அந்த விருட்சத்தின் இலைகள், ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்" (வெளிப்படுத்தல்22:2)***. மரங்களைக் கிளை நறுக்கும்போது, நாம் வெட்டிய கிளைகளின் இலைகளைச் சேகரித்தால் அதுவே நமக்குத் தேநீர் தயாரிப்பதற்கு ஏராளமாக இருக்கும்" என்று ஆலன் கூறினான்.

"வியர்வையும், கடின உழைப்பும் நீங்கிவிட்டது. நாம் முன்பு செய்ததைப் போன்று சமைக்க அதிக நேரத்தைச் செலவிடத் தேவையில்லை. இறைச்சி மற்றும் மீன்களுக்கான உங்களுடைய ஆசை சில வாரங்களில் மறைந்துவிடும். சில நேரங்களில் நாம் ஏதேனின் ரொட்டி மற்றும் அவ்வப்போது ஏதேனின் கேக் மற்றும் மாவால் செய்யப்பட்ட அடைகளைச் சாப்பிடுவோம்" என்று கூறி ரெபெக்காள் புன்னகைத்தாள்.

ரெபெக்காளுக்கு இருந்த இனிப்பின் மீதான விருப்பத்தையும், இறைச்சி மீதான அவளது ஏக்கத்தினையும் லெவ் நினைவு கூர்ந்தான். இந்தப் புதிய உணவு முறைக்கு அவள் மிகவும் மகிழ்ச்சியுடன் தன்னைப் பழக்கிக் கொண்டதைப் பார்க்கும்போது அவனுக்கு சுவாரஸ்யமாக இருந்தது.

"அப்பா, வாழ்க்கை சுவாரஸ்யமாக உள்ளது! இனி யாரையும் காயப்படுத்தவோ, அழிக்கவோ எதுவுமே இல்லை. நம் வளங்கள் அனைத்தும், நாம் நேசிப்பவர்கள் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வரும்போது அவர்களுக்காக ஆயத்தப்படுத்தும்படி கட்டுமான வேலைகளுக்கும், விருட்சங்கள் நடுவதற்கும் செலவிடப்படுகின்றன. இவ்வுலகத்தில் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. அதனால் நம்மை சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையை நாம் பார்த்துக்கொள்ளமுடியும். எந்தவொரு வளமும், போர் அல்லது ஆயுதங்களுக்காக வீணடிக்கப்படுவதில்லை" என்று ஆலன் கூறினான்.

ரெபெக்காள் அவர்களை ஒரு வளைவான பாதையில் அழைத்துச் சென்றாள், அது இப்போது அவர்களை வீட்டிற்கு வழிநடத்தியது. ஜேக், ரேச்சல் மற்றும் ஆனி விரைவில் இங்கு வந்துவிடுவார்கள். எனவே நாம் வீட்டிற்கு விரைவாகத் திரும்புவது நல்லது என்றாள்.

தன் மனைவி மற்றும் மகனைப் பின்தொடர்ந்து லெவ் வீட்டிற்குள் நுழைந்து பெருமூச்சு விட்டான். ஒருபுறம் அவன் துடிப்புடனும், ஜீவனுடனும் இருந்தாலும் அதேசமயத்தில் மறுபுறம் குழப்பத்தையும், சந்தேகத்தையும் உணர்ந்தான். குழந்தைப் பருவத்தில் கற்றவைகள், முன்பு அர்த்தமற்றதாகவும் புதிராகவும் காணப்பட்டாலும், இப்போது அவைகள் ஒவ்வொன்றாக பொருந்தி தெளிவடையத் தொடங்கியது. வேதவசனங்கள் லெவ்வின் மனதில் வேலை செய்து கொண்டிருந்தன.

மேலும் அவன் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளின் நிறைவேற்றத்தைக் காணத் தொடங்கினான். ஆனால் இந்தப் புதிய ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்வதிலிருந்து ஏதோ ஒன்று லெவ்வுக்குத் தடையாய் இருப்பதாகத் தோன்றியது.

## ஜேக்

ரெபெக்காள் அவர்களின் வருகையைக் குறிப்பிட்ட தருணத்திலிருந்து ஜேக் மற்றும் ரேச்சலைப் பார்க்க லெவ் ஆவலுடன் காத்திருந்தான். ஆனாலும் அவனுக்குள் ஒரு தவிப்பினை உணர்ந்தான். ரெபெக்காளும், ஆலனும் வெளியில் உரையாடுவதைத் தொடர்ந்தனர். லெவ் சமையலறை மேஜையின் மீது அமர்ந்து கொண்டு தன் எண்ணங்களில் மூழ்கினான். தான் மரிக்கும்போது ஒரு குழந்தையாக இருந்த தன் சகோதரனின் மகளான ஆனியைச் சந்திக்க லெவ் ஆவலுடன் காத்திருந்தான். சில நேரங்களில் நெருக்கமாகவும், பல நேரங்களில் கடுமையானவனாகவும், எல்லா நேரங்களிலும் பதட்டமுள்ளவனாகவும் (tension) இருந்த அவன், தன் சகோதரனுடனான தன்னுடைய உறவைப் பற்றிச் சிந்தித்தான். ஜேக் தேவனை நாடினான், லெவ் தன் இஷ்டப்படி சுதந்திரமாக இருப்பதை விரும்பினான். அவர்களின் கடைசி சந்திப்பை நினைத்து லெவ் வெட்கப்பட்டான்.

“இதுபோன்ற தாக்குதலை நாம் எதிர்கொள்ளும்போது ஜெபிப்பதும், தேவனைத் தேடுவதும் உனக்கு வேண்டுமானால் எளிமையானதாக இருக்கும். நீ ஜெபித்துக் கொண்டே இரு, நான் சாகிறேன். இது தானே உனக்கு வேண்டும்?” என்றே லெவ் கடைசியாக ஜேக்கிடம் கூறியிருந்தான்.

அன்று லெவ்வின் வார்த்தைகள் கோபத்தில் வந்தன. அவனால் அந்த வார்த்தைகளைத் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது. தன்

சகோதரனின் முகத்தில் தெரிந்த வலி ஜேக்கைக் கவலைக்குள்ளாக்கியது. இஸ்ரயேல் சமாதானத்தோடு மகிழ்ந்திருந்த காலக்கட்டத்தில், ஒருவேளை இராணுவத்தில் சேர்வதற்கான கட்டாயம் இல்லாதிருப்பினும், சற்றும் தயங்காமல் ஜேக் இராணுவத்தில் சேர்ந்திருப்பான் என்று லெவ் தன் இருதயத்தில் அறிந்திருந்தான். இருப்பினும், அது தேவனின் திட்டத்தில் இல்லை. ஆனால் கடும் வாக்குவாதத்தின் போது, ஜேக் ஒரு கோழை என்று லெவ் கூறி இருந்தான். ஜேக்கின் ஆவிக்குரிய ஒழுக்கத்திற்காக, பல சந்தர்ப்பங்களில் அவனை சிறுமைப்படுத்தியதையும் லெவ் நினைவுகூர்ந்தான். போட்டி மனப்பான்மையினால் அவர்களுக்கிடையே உண்டான இடைவெளியைக் காட்டிலும், லெவ் பேசிய கடுமையான வார்த்தைகளால் உண்டான இடைவெளி அதிகமாகக் காணப்பட்டது, விரைவில் லெவ் மீண்டும் தனது சகோதரனை எதிர்கொள்ளப் போகிறான்.

ஜேக் மற்றும் ரேச்சலைப் பற்றி லெவ் நினைவுகூர்ந்தான். அவர்கள் முதல் வகுப்பிலிருந்தே சிறுவயது காதலர்களாக இருந்தனர். ஜேக் கலகலப்பற்றவனாகவும், கல்வியின் மேல் ஆர்வமுள்ளவனாகவும், ஆழ்ந்த சிந்தனையை உடையவனாகவும், மெலிந்த ஒல்லியான உருவம் கொண்டவனாகவும், தோராவைக் கற்றறிந்த அறிஞனாகவும் இருந்தான். ரேச்சல் சுறுசுறுப்பான, பொன்னிறத் தோற்றம் கொண்ட, அதிகம் பேசக் கூடிய, மக்களோடு கலந்துரையாடுவதில் ஆர்வம் கொண்ட, நகைச்சுவை உணர்வுள்ள, கலை மற்றும் கைவினைகளில் சிறந்து விளங்கியவளாக இருந்தாள். இரண்டு எதிர் பண்புகள் ஈர்க்கும் என்பதற்கு அவர்கள் வாழும் நிருபங்களாக இருந்தனர்.

அவள் அனுபவித்திருந்த கஷ்டங்களை, அவளுடைய மகிழ்ச்சியான நடத்தைகளிலிருந்து யாரும் யூகித்திருக்க மாட்டார்கள்.

ஜேக்கின் வாழ்வில் வந்த சந்தோஷமாக ரேச்சல் இருந்தாள். ரேச்சலினுடைய உலகில் தூண் போலவும், ஊக்கம் அளிப்பவனாகவும் ஜேக் இருந்தான்.

ரேச்சலின் பிறந்த வீட்டின் ஜீவியம் முழுக்க பிரச்சனைகளால் நிறைந்திருந்தது. ரேச்சலின் தாயார் சில்வியா, ஒரு ஆக்ரோஷமான சண்டையிடுகிற பெண், தனது கணவர் இர்விங்கை செல்வம் மற்றும் அந்தஸ்துக்காக தனது பேராசைகளால் கொலை செய்தாள். லெவ்வினால் நடைமுறைக்கு ஒவ்வாதவைகள் என்று கருதப்பட்ட தோரா கொள்கைகள் உள்ள வேறொரு உலகத்திற்கு, ரேச்சலின் வாழ்க்கையை ஜேக் கொண்டு வந்துவிட்டான். கலை மற்றும் நாடகத்தில் ஈடுபாடுள்ளவளாகிய ரேச்சல் மிகச்சரியான இல்லத்தரசி, ஜேக்கின் வாழ்க்கையில் பிரகாசத்தையும், புன்னகையையும் சேர்த்தவளாவாள்.

தனது சகோதரனை மீண்டும் பார்க்கப் போவதை நினைக்கும் போது அவன் ஒரு பயத்தை உணர்ந்தாலும், தான் அவர்கள் அனைவருடனும் இருக்கப்போவதையும், தான் என்றென்றும் இழந்து விட்டதாக எண்ணிய குடும்பத்தின் ஒரு பகுதியுடன் மீண்டும் இணையப் போவதையும் ஆவலோடு லெவ் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

***

**"எருசலேமின் குடிகள் பெலனானவர்கள், ஏனெனில் சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் ஆகும்." (சகரியா 12:4,5)**

# அத்தியாயம் - 3

"அவர்கள் இங்கு வந்து விட்டார்கள்" என்று ஆலன் அறிவித்தான். லெவ் எழுந்து அவர்களைச் சந்திக்க ஓடினான். லெவ், ஜேக்கை இறுக்கமாகத் தழுவினான், பின்னர் உற்சாகமான ரேச்சலையும், பின்னர் ஆனியையும் தழுவினான்.

ஜேக், லெவ்வின் முதுகில் தட்டிக்கொடுத்து, "லெவ், நாங்கள் உனது வரவிற்காக பல மாதங்களாக காத்திருந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தோம்! என் மூத்த சகோதரன் திரும்பி வருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!" என்றான்.

துடிப்போடும், உற்சாகத்தோடும் ஜேக் தனது உணர்ச்சிமிக்க உரையாடலை வேகமாகத் தொடர்ந்தான்: "ஓய், நாம் ஏன் இங்கே நிற்கிறோம்? ரேச்சல் உங்களுக்காக "உயிர்த்தெழுதலின் கேக்கை" செய்துள்ளாள். வாருங்கள் நாம் அனைவரும் கொண்டாடுவோம்!"

லெவ் பேச்சற்றிருந்தான். அவர்கள் சமையலறைக்குச் சென்று, பெரிய மேஜையைச் சுற்றி அமர்ந்தனர். பூக்கள் மற்றும் தேநீரின் இனிமையான மணம் அறையை நிரப்பி இருந்தது. தான் ஒரு தீவிர காபி பிரியனாய் இருந்தபோதிலும், காபி அல்லது தேநீர் இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு தனக்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்று லெவ் யோசித்தான். எனினும் லெவ் அதனை பொருட்படுத்தவில்லை. எப்படியிருந்தாலும் இந்தத் தேநீர் அவன் இதுவரை ருசித்திருந்த தேநீரை விட வித்தியாசமானதாகவும், காபியைப் போலவே உணர்வுகளைத் தூண்டுவதாகவும், முக்கிய

உறுப்புகளை சுறுசுறுப்பாக்குவதாகவும் இருந்தது. அவன் ருசியான தேநீரை நன்றியுடன் குடித்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு மன அமைதியை மீண்டும் பெற்றான்.

"என்ன ஓர் அழகான கேக்! வானவில் போல உள்ளதே!" என்று லெவ் பாராட்டினான்.

வெவ்வேறு பழங்களிலிருந்து உருவாக்கப்பட்ட கேக்கின் ஒவ்வொரு அடுக்கும், வசீகரிக்கிற நிறங்களைக் கொண்டிருந்தது. ரெபெக்காள் கேக்கை பெரிய பகுதிகளாக வெட்டுவதை லெவ் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ரெபெக்காள்ள்ள்... கேக் மிகவும் பெரிய துண்டுகளாக இருக்கிறதே! ம்...ம், கடந்த கால உலகில் உனக்கு இனிப்பின் மீது இருந்த ஆசை இப்பொழுது இந்தக் கேக்கைப் பார்த்ததும் எட்டிப்பார்க்கின்றதோ?" என்று லெவ் கிண்டல் செய்தான். ஏற்ற இறக்கமான உணர்ச்சிகளின் பின்னணியிலும், தனது நகைச்சுவைத் திறனைக் கண்டு லெவ் ஆச்சரியப்பட்டான்.

"லெவ், நீங்கள் மரித்தோரிலிருந்து ஒரு முறை மட்டுமே எழுப்பப்படுகின்றீர்கள்" என்று ரெபெக்காளுக்கு ஆதரவாக ரேச்சல் புன்னகையுடன் கூறினாள். அனைவரும் சிரித்தனர்.

அறைக்குள் நுழைந்ததிலிருந்து, தன்னை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த இளம் பெண்ணை லெவ் அப்போதுதான் கவனித்தான். அவர்களின் கண்கள் சந்தித்தபோது ஆனி பேசினாள்:

"லெவ் மாமா, நீங்கள் என் அப்பாவைப் போலவே இருக்கின்றீர்கள். நீங்கள் சகோதரர்கள் என்று என்னால் பார்த்தவுடன் சொல்ல முடிகிறது. அப்பா உங்களைப் பற்றி என்னிடம் முழுவதும் கூறியுள்ளார். இன்று உங்களை இங்கே பார்ப்பது ஒரு கனவு போன்று உள்ளது" என்று ஆனி கூறினாள்.

"இது உண்மையா என்று எனக்கு இன்னும் தெரியவில்லை" என்று லெவ் கூறினான்.

ஆனி தலையசைத்து, போர்க்களத்தில் கொல்லப்பட்ட பின்னர், திடீரென்று வேறொரு உலகில் ஜீவனுடன் இருப்பதை ஒருவர் காணும்போது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்ய முயன்றாள். தனக்குப் பிடித்த தனது மாமாவிற்காக அனுதாபம் கொண்டாள். அவள் தனது மாமாவை மீண்டும் அணைத்துக்கொள்ள நாற்காலியில் இருந்து சாய்ந்தாள்.

"லெவ் மாமா, நீங்கள் உண்மையாகவே எங்களுடன் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் புதிய வீடு உங்களுக்குப் பிடித்திருக்கின்றதா? நாங்கள் அனைவரும் உங்களுக்காக இதைக் கட்டினோம். இத்தருணத்திற்காக நாங்கள் பல மாதங்களாக எதிர்பார்த்திருந்தோம்!" என்று ஆனி தன் நாற்காலியில் நேராக அமர்ந்தபடி கூறினாள்.

ஆனியின் உண்மையான அக்கறையை லெவ் உணர்ந்து, கண்ணீரை அடக்க முடியாமல் போராடினான்.

"நான் அனைத்திற்கும் உங்களுக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேன்? அனைத்தும் அருமையாக உள்ளன. நான் கண்ணைச் சிமிட்டினால், எங்கே நீங்கள் எல்லோரும் என்னைவிட்டு மறைந்து விடுவீர்களோ என்றும், போர்க்களத்தில் இருந்த நிலையில் மீண்டும் இருப்பேனோ என்றும் நான் அஞ்சுகின்றேன்" என்று லெவ் கூறினான்.

## எருசலேமுக்கான போர்

லெவ் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, மேசையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"இந்த உலகத்திலிருந்து என் ஜீவன் பிரிகையில் நான் அதிர்ச்சியாக இருந்தேன், இன்னும் அதிர்ச்சியில்தான் இருக்கிறேன்.

கடைசியாக எனக்கு நினைவில் உள்ள விஷயம் எனது கை சிதைந்து வீசப்பட்டதுதான், பின்னர் இடையில் எதுவும் நடக்கவில்லை என்பது போல, இப்போது நான் நேசிக்கும் நபர்களுடன் இங்கே அமர்ந்திருக்கிறேன். எனது உணர்வுகளை என்னால் வெளிப்படுத்த முடியவில்லை” என்று லெவ் கூறினான்.

சிறிது நேரம் மௌனம் நிலவினது, லெவ் செயலற்று இருந்தான். அவன் தனது தேநீர் கோப்பையை கண் சிமிட்டாமல் பார்த்தபடி, கடைசியாக அதில் இருந்ததைக் குடித்தான். அவனுடைய உணர்ச்சி, சமநிலையை அடைய தேநீர் மீண்டுமாக உதவினதால், அவனால் மறுபடியும் பேச முடிந்தது. ஏனெனில் தேநீர் அவனது உணர்வுகள் அனைத்தையும் தட்டி எழுப்பும் ஊக்கியாக செயல்பட்டது.

“சரி, நாங்கள் தோற்கடிக்கப்பட்ட பிறகு போர்க்களத்தில் என்ன நடந்தது என்று சொல்லுங்கள். என்னைப் போன்றேதான் உங்களுக்கும் நேரிடப்போகிறது என்று நான் அப்போது நினைத்தேன்” என்று லெவ் கூறினான்.

எதிரிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தது, லெவ்விற்கு நினைவில் இருந்தது. எதிரியின் முன்மொழியப்பட்ட திட்டத்தை இப்பொழுது ஜேக் திரும்பக் கூறியதைக் கேட்டபோது லெவ் நம்பிக்கையை இழந்தான்.

“நமக்கு மிகவும் பிரியமான நகரமான எருசலேமின் மீது, எதிரிகள் நியூட்ரான் குண்டுகளைப் பயன்படுத்தலாம் என்ற வதந்தி பரவிக்கொண்டிருந்தது. எதிரிகள், புனித இடங்களைச் சேதப்படுத்தாது விட்டுவிடுவார்கள் என்றும், குண்டுவீச்சினால் ஏற்படும் கதிர்வீச்சினால் மக்களை இழக்க வேண்டியிருக்கும் என்றும், அனைத்து மக்களும் மரித்த பின் எருசலேமுக்குள் நுழைய எதிரிகள் திட்டமிட்டிருந்தனர் என்றும் வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன” என்பதை ஜேக் நினைவுப்படுத்தினான்.

மீண்டும் அவர்கள் மத்தியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. குடும்பமாய் மகிழ்ச்சியாய் இருந்த தருணத்தின்போது ஏற்பட்ட இந்த உரையாடலின் தீவிரத்தன்மையை தணிக்க லெவ் முயன்றான்.

"மிகவும் துக்கமான விஷயங்களைப் பேசியதற்கு மன்னிக்கவும். நாம் வானவில் நிறக்கேக்கை சாப்பிடலாமா" என்று லெவ் கேட்டான்.

உணவினை ஆசீர்வதிக்க வேண்டி ஜேக் ஜெபம் ஏறெடுத்தான். ஜேக், தேவனை ஆழமாக மற்றும் தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்திருப்பதை லெவ் முதல் முறையாக உணர்ந்தான். அவன் எப்போதும் தனது சகோதரனின் மதத்தின் மீதான தேவபக்தியை உணர்ந்திருந்தான். ஆனால் இப்போது அவனால் மதத்திற்குப் பின்னால் இருந்த உறவை உணர முடிந்தது. இது லெவ்விற்கு ஒரு வெறுமையை உணர வைத்தது மற்றும் தான் ஒரு வெளிப்புறமான மத வாழ்க்கையை மட்டுமே வாழ்ந்ததற்காக கொஞ்சம் வெட்கமாகவும் இருந்தது. உண்மையில் அவன் தேவனை அறிந்திருக்கவில்லை, இப்போதும் என்ன செய்வதென்று புரியாது இருந்தான். லெவ்வைப் பொறுத்தமட்டில் யூத நம்பிக்கை அவனுக்கு ஒரு மரியாதைக்குரிய பாரம்பரியமாக மட்டுமே இருந்தது. ஆனால் இன்றைய நாளின் நிகழ்வுகள், அவனது கடந்தகால முன்னுரிமைகளை நகைப்புக்கு உள்ளாக்கின. அவன் ஒரு மேலோட்டமான மத வாழ்க்கையை வாழ்ந்திருந்த போதும், தேவன் அவன் மீது இரக்கம் காட்டியே இருந்துள்ளார். லெவ் அதற்கு தகுதியற்றவனாக தன்னை உணர்ந்தான்.

அவர்கள் உணவருந்தும்போதும், உரையாடல் சலனமில்லாமல் தொடர்ந்தது. லெவ், முற்பிதாக்களின் ஆட்சி முறைக்குக் கீழான வாழ்க்கையைப் பற்றிய தகவல்களை, அவர்களுடைய சம்பாஷணை யிலிருந்து சிறிது சிறிதாகக் கிரகித்துக்கொண்டான். அவர்களின் ஆட்சிமுறை தனித்தன்மையுடன் இருப்பதை அவனால் புரிந்துகொள்ள

முடிந்தது. நிச்சயமாக இதுபோன்ற உயர் பண்புள்ளவர்கள், சண்டையிடும் அரசியல்வாதிகள் செய்ததைவிட காரியங்களை சிறப்பாக நிர்வகிப்பார்கள் என்று நினைத்தான்.

"இந்தக் கேக் அற்புதமாக இருக்கிறது, இது போன்ற கேக்கை நான் ஒருபோதும் சுவைத்தது இல்லை!" என்று லெவ் தனது வாயில் பாதி கேக்கை வைத்துக்கொண்டு வாய்க்குள்ளேயே பேசினான்.

உணவு உண்ணும்போது, தான் வழக்கமாகக் கொண்டிருக்கும் நாகரிகமான பழக்கங்களைச் சற்று மறந்து போனவனாய்த் தனித்துவமான சுவையுள்ள இந்தக் கேக்கைப் பற்றி வாய்க்குள்ளேயே பேசியதை உணர்ந்தபோது அவனது முகம் சிவந்தது.

லெவ்வின் குழந்தைத்தனமான நடத்தையைக் கண்டு ரேச்சல் புன்னகைத்தாள். அவனது நடத்தையிலிருந்து, அவனது உள்ளக் கொந்தளிப்பை அவள் உணர்ந்தாள். அவளது இருதயம் அன்புடன் அவனுக்காக அனுதாபம் கொண்டது.

"முன்பெல்லாம் நாம் கேக் செய்யும்போது பயன்படுத்தின பொருட்களைக்காட்டிலும், இப்போது நம்மிடம் வித்தியாசமான பல்வேறு பொருட்கள் உள்ளன. இந்தக் கேக்கில் உள்ள மாவு, உலர்ந்த ஏதேன் பழங்களான ராஃபா மற்றும் ஓலாம் பழங்களைச் சேர்த்து தயாரிக்கப்படுகிறது. ஆரோக்கியமான உணவு சுவையாக இருக்க முடியாது என்று யார் சொன்னார்கள்? வாழ்க்கை இப்போது ஆரோக்கியமாகவும், எளிமையாகவும் இருக்கிறது. நமக்குத் தேவையானதை மட்டுமே நாம் உற்பத்தி செய்கிறோம். மேலும் இங்கு இலாப நோக்கத்திற்கான வணிக நிறுவனங்கள் எதுவும் இல்லை. இலாப நோக்கத்தின் இடத்தை அன்பானது ஆக்கிரமித்துவிட்டது மற்றும் இப்போது நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் முக்கியமான சவால் என்னவென்றால், உயிர்த்தெழுந்து வரக்கூடிய பில்லியன்

கணக்கான ஜனங்களுக்குத் தேவையானவைகளை எவ்வாறு தயார்செய்வது என்பதே ஆகும். தங்கள் தாயகத்திற்குத் திரும்பும் யூதர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளை நம் தேசம் செய்துள்ளது. ஆனால் இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான வைகளை ஏற்பாடு செய்வது என்பது நிச்சயமாக ஒரு பெரிய அளவிலான திட்டமாகும். அது நம் கற்பனைக்கு அப்பாற்பட்டது!" என்று அவர்கள் லெவ்விற்கு விளக்கினார்கள்.

மீண்டுமாக உரையாடல் இடையில் நிறுத்தப்பட்டது. இறுதிப் போரைப் பற்றின தனது கேள்விகளைக் கேட்க இது ஒரு நல்ல தருணம் என்று லெவ் உணர்ந்தான்.

"எங்கள் முதன்மை பாதுகாப்புப்படை அழிக்கப்பட்ட பிறகு என்ன நடந்தது?" என்று லெவ் கேட்டான்.

ஜேக்கின் முகம் தீவிரமாக மாறியது. "அது ஒரு பெரிய கதை லெவ். உங்களது தோல்வியின் செய்தி உடனடியாக எங்களுக்கு வந்தடைந்தது. இஸ்ரயேல் முழுவதும் பரவியிருந்த பல சிறிய குழுக்களில் உங்களது குழுவும் ஒன்று. எதிரிகள், முதன்மை பாதுகாப்புப்படையை அழித்துவிட்டு, பிறகு எருசலேமைத் தங்களிடம் சரணடையச் செய்யும்படி இஸ்ரயேலுக்கு இறுதி எச்சரிக்கையை கொடுக்கலாம் என்று திட்டமிட்டார்கள். உங்கள் முதன்மை பாதுகாப்புப் படை வீழ்ச்சி அடைந்தபோது, பல இஸ்ரயேலியர்கள் ஒன்றிணைந்து எருசலேம் நகரின் மேற்குப் பகுதியில் எதிர் தாக்குதலை அதிகரிக்க முடிவு செய்தனர். எதிரிகள் நகரத்தின் பாதியில் தாக்குதலை எதிர்கொண்டனர்" என்று ஜேக் கூறினான்.

***"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன். நகரம் பிடிக்கப்படும், வீடுகள் கொள்ளையாகும், ஸ்திரீகள் அவமானப்படுவார்கள் நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைபட்டுப்***

**போவார்கள் மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டு போவதில்லை" (சகரியா14:2)** என்ற சகரியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை ரேச்சல் மிகுந்த உணர்ச்சியுடன் பேசினாள்.

இந்த வார்த்தைகள் சித்தரித்த காட்சிகளைக் கற்பனை செய்தபோது, லெவ் திகைத்தான். படையெடுப்பாளர்கள் ஜனங்களை வெட்டி வீழ்த்துவதையும், அவர்களின் வீடுகளைக் கொள்ளையடிப்ப தையும், பெண்களைப் பலாத்காரம் செய்வதையும் அவன் கற்பனையில் கண்டான். தனது கற்பனையில், அழுகுரலின் சத்தத்தை அவனால் கேட்க முடிந்தது. மேலும் அவன் தன்னுடைய இருதயத்தில் அப்போது "தேவன் எங்கே போனார்?" என்றும் யோசித்தான்.

"எதிரிகள் நகரத்தின் மேற்குப் பகுதியில் தாக்குதலில் உயிரோடு மீந்திருந்தவர்களை மெகிதோவில் உள்ள அவர்களின் தலைமையிடத்திற்குக் கொண்டுச்சென்றனர். எருசலேமின் கிழக்குப் பகுதியில் பிடித்து வைக்கப்பட்டிருந்த நாங்கள், எதிரிகள் திரும்பி வரும்போது ஒன்று சரணடைய வேண்டும் அல்லது நியூட்ரான் குண்டுகளை எதிர்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருந்தோம்." குரலில் எவ்வித தடுமாற்றமுமின்றி ஜேக் தனது பேச்சினைத் தொடர்ந்தான், லெவ்வின் மனதில் அதனை பின்னணியாகக் கொண்ட காட்சிகள் ஓடின.

"நாங்கள் அனைவரும் சரணடைவதற்கு நியாயமான வாய்ப்பை வழங்கியதாக எதிரிகள் கூறலாம். எங்களில் சிலர் பழைய நகரத்தின் மதில்களுக்குள் இருக்க முடிவு செய்தோம். நாங்கள் எங்கள் வாழ்க்கையைத் தேவனின் கைகளில் ஒப்படைத்தோம். அவர் விரும்பியதை நாங்கள் ஏற்கத் தயாராக இருந்தோம்."

லெவ் கண்களை மூடி ஆண்களும், பெண்களும் சேர்ந்த ஒரு குழுவினர் தங்கள் விசுவாசத்தின் வல்லமையால் மரணத்தை ஏற்கத் தயாராக இருப்பது போன்ற ஒரு காட்சியை கற்பனைபண்ணிப்

பார்த்தான். ஒருபுறம் இந்த மக்களைக் குறித்து வியப்படைந்து, மறுபுறம் அவர்கள் இருந்த உதவியற்ற நிலையைக் குறித்துக் கூனிக்குறுகி காணப்பட்டு, இப்படியான இருவித உணர்வுகளால் சூழப்பட்டிருந்தான்.

கண்மூடித்தனமான வலிமை எப்போதுமே அவனது அணுகு முறையாகவும், தீர்வாகவும் இருந்துவந்துள்ளபடியால், இப்பொழுது தான் உணர்ச்சிவசப்பட்டதினிமித்தம் தன் மீது ஏற்பட்ட எரிச்சலினால், ஜேக் பேசிக் கொண்டிருக்கும்போதே இடையில் லெவ் குறுக்கிட்டான்.

"அவர்கள் உங்களை கதிர்வீச்சால் கொல்வதை விட அவர்களோடு போரிட்டு இறப்பது சிறந்ததாய் இருந்திருக்கும் அல்லவா?" என்று ஜேக்கிடம், லெவ் வினவினான்.

ஜேக் கவலையுடன் சிரித்தான். அவன் தனது சகோதரனின் சுதந்திரமாகச் செயல்படும் பிடிவாதமான நிலையை நினைவுகூர்ந்தான்.

"நீ மாறவே இல்லை, லெவ். நான் சொல்வதை முதலில் கேள். எதிரிகள் மீண்டும் தொடர்ந்து தாக்குவதற்காக ஒரு குழுவை ஒன்றிணைப்பதற்காக மற்றொரு நாள் எடுத்துக்கொண்டனர். இஸ்ரயேலுக்கு எதிராக இதுவரையிலும் ஒருபோதும் ஒரு வலிமையான இராணுவம் கூட்டப்பட்டதில்லை. ஆனால் எதிரிகளுக்கான வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்தபோதிலும், அவர்கள் பதற்றமாகவும், சஞ்சலத்தோடும் இருந்தனர்."

## இஸ்ரயேலை ஆதரித்த கிறிஸ்தவர்களின் ஒரு சிறு குழு

"கிறிஸ்தவர்களில் ஒரு சிறு குழுவினர், புனித பூமியை ஆக்கிரமிப்பதை எதிர்த்து பலமுறை எதிரிகளை எச்சரித்து இருந்திருக்கிறார்கள். மத வெறி பிடித்தவர்கள் என்று இந்தச்

சிறுகுழுவினர் முத்திரை குத்தப்பட்டனர், மேலும் அவர்களை ஒருவராலும் அமைதிப்படுத்த முடியவில்லை. அவர்கள் எசேக்கியேல் 38-ஆம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனத்தைச் சுட்டிக்காட்டினர். எருசலேமுக்கு எதிராக வரும் படைகளுக்கு முழுமையான நிர்மூலம் காத்திருப்பதாக அரசியல் மற்றும் மதத் தலைவர்களை எச்சரித்தனர். அன்று காலை யூதேயாவைப் பாதுகாத்துக் கொண்டிருந்த வீரர்களுக்கு எதிராக எதிரிகள் வரத் தொடங்கினார்கள்...” என்று ஜேக் விவரித்தான்.

லெவ் தனது இருக்கையில் சாய்ந்து அமர்ந்தவாறு, தனது சகோதரனின் வார்த்தைகளைக் கற்பனை பண்ணிப் பார்த்தான். அடர்த்தியான மேகங்களுடனும், மூடுபனியுடனும், எங்குமே தென்றலின் சுவாசம் இல்லாமலும் விடிந்த அந்த நாளை அப்படியே லெவ் நினைத்துப்பார்த்தான். விடியலின் காலைவேளையில், இவர்கள் எதிர்பாராதிருக்கையில் எதிரிகள் தங்களது தாக்குதலைத் தொடங்கினார்கள், குண்டுகளால் ஏற்பட்ட தாக்குதலால் காற்று வெப்பமடைந்து, அடர்த்தியாக மாறுவதையும் உணர்ந்தான். திடீரென்று எதிரிகளின் தகவல் தொடர்பு அமைப்புகள் செயலிழந்தன. அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட பீதியையும் லெவ் உணர்ந்தான்.

“குண்டுவீச்சினால் ஏற்பட்ட புகைமூட்டத்தினால் ஒருவரை ஒருவர் பார்ப்பது சாத்தியமற்றதாயிருந்தது. எதிரிகளின் தகவல் தொடர்புகள் முற்றிலும் தோல்வியடைந்ததால் அவர்களால் தங்கள் படைகளைத் திரும்ப அழைக்க முடியவில்லை. தகவல் தொடர்புகள் ஏன் நிறுத்தப்பட்டது என்பது குறித்து போர்த்தளபதிகள் அறியாதிருந்தனர். இஸ்ரயேலர்கள் தங்கள் தகவல் தொடர்புகளை நாசமாக்க சில இரகசிய ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக யூகித்தனர்” என்று ஜேக் தொடர்ந்தான்.

படையெடுக்கும் இராணுவத்தின் பெருந்திரளான வீரர்களை லெவ் கற்பனைசெய்தான், சிலர் அணிவகுத்துச் சென்றனர்,

மற்றவர்கள் பீரங்கி வண்டிகளையும் மற்றும் டிரக் வண்டிகளையும் மெகிதோவை மூடியிருந்த மூடுபனியின் வழியாக ஓட்டி வந்தார்கள். மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வை எதிரியின் படை வீரர்கள் உணர்ந்ததால், அவர்களுடைய தலைமுடிகள் கூச்செறிந்து நின்றதில், எதிரிகளுக்கிருந்த மிகுந்த பயத்தை லெவ் உணர்ந்தான். சில ஆண்கள் நிலை தடுமாறுவதையும், சிலர் பின்னிட்டுத் திரும்புவதையும் அவன் கண்டான். ஆனால் எதிரிப் படையின் பெருந்திரள் முன்னோக்கி நகர்ந்தனர். அவர்கள் இஸ்ரேலிய தற்காப்புப்படைகளை ஒழித்து, முடிவில் எருசலேமை அவர்களுக்கான பரிசாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் முன்னேறினர்.

"திடீரென எதிரிப்படைகள் மீது மிகவும் வலிமையான மற்றும் கொடிய தீக்குழம்பை உண்டாக்கும் குண்டு வெடித்தது" என்று கூறியவாறு ஜேக் தனது பேச்சினைத் தொடர்ந்தான்.

ஆயுதங்கள் தாங்கியிருந்த வண்டிகள் மோதியதால் உண்டான குழப்பத்தின் காரணமான தொடர் நிகழ்வுகளை லெவ் காட்சியாகக் கற்பனை பண்ணிப் பார்த்தான். பீரங்கி வண்டிகளும் மற்றும் டிரக் வண்டிகளும் மோதிக் கவிழ்ந்தன. ஹெலிக்காப்டர்களும் மற்றும் விமானங்களும் முழு வேகத்துடன் பூமியை நோக்கி நொறுங்கி விழுந்தன. கடற்படைக் கப்பல்களின் கருவிகள் செயலிழந்ததால், எதிரிகள் எதிர்தாக்குதல் நடத்தாது இருந்ததையும் லெவ் கற்பனையில் பார்த்தான். பின்னர் கடற்படையை இயக்கிய ஒரு குழுவினர் செயலிழந்து காணப்பட்டனர். எரியும் ரப்பரின் கடுமையான வாசனையையும் மற்றும் அதன் வெப்பத்தையும் லெவ் உணர்ந்தான்.

சகரியா தீர்க்கதரிசியின் வார்த்தைகள்: "***தாவீதின் வம்சத்தின் மகிமையும், எருசலேம் குடிகளின் மகிமையையும், யூதாவுக்கு எதிராகத் தங்களை பெருமைப்படுத்தாதபடிக்கு, கர்த்தர் முதலில் யூதாவின் கூடாரங்களைக் காப்பாற்றுவார்***" என்ற வசனத்தை தான் அடையாளம் கண்டு கொண்டதைக்குறித்து லெவ் ஆச்சரியப்பட்டான். அந்தப்

பரிசுத்தமான வார்த்தைகளை அவன் கூறியபோது ஜேக்கின் முகம் பிரகாசமாக மாறியதை லெவ் கவனித்தான். இந்த நிகழ்வு லெவ்வின் கவனத்தை ஈர்த்தது, அதுவே லெவ்வை திகிலடையவும் செய்தது.

"தேவன் முதலில் யூதாவின் கூடாரங்களைக் காப்பாற்றினார். ஆனால் நகரத்தின் மேற்குப் பகுதிக்கு எதிரான எதிரிகளின் இராணுவத் தாக்குதல், பாதி நகரத்தைக் கைப்பற்றிய பின்னரும்கூட, அந்த மோசமான காலை வரை, அதாவது பரிசுத்த தேசம் முழுவதும் பரவியிருக்கும் இஸ்ரேலியப் படைகளை எதிரிகள் அணுகும் வரை, தேவன் காத்திருந்தார். எருசலேமை கடைசியாக வெற்றிகொள்ள எதிரி திட்டமிட்டான். ஆனால் யூதேயாவின் மலைகளில் தோற்கடிக்கப்பட்டனர்."

அறையில் இருந்த அனைவரும் அமைதியாக இருந்தனர். லெவ் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் கேள்வி ஒன்றைக் கேட்டான்.

"ஜேக், இந்த அழிவுகரமான நிகழ்வுக்கான இந்தப் படையெடுப்பிற்கு நிதியளித்த அனைத்து நாடுகளிலும் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டன?"

எதிரிகள், தங்கள் படைகளுடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் இழந்தபோது, ஏதோ மோசமான தவறு நடந்துவிட்டதாக தலைவர்கள் சந்தேகித்தார்கள் என்று ஜேக் கூறினான்.

"எருசலேமைக் கட்டுப்படுத்தாவிட்டால், அர்மகெதோன் வெடிக்கும் என்று சபைகள் தேசியத் தலைவர்களை வற்புறுத்தி இருந்த காரியங்களே இன்னும் விஷயங்களை மோசமாக்கியது. படையெடுக்கும் எதிரி இராணுவத்தின் மோசமான தோல்வி குறித்த செய்திகள் நாடுகளை அடைந்தபோது, பேரழிவைத் தூண்டியதற்கு உதவியதற்காக ஒருங்கிணைந்த மத அமைப்பின் மீது மக்கள் ஆத்திரமடைந்தனர். இது பிரெஞ்சு புரட்சியின் நாட்களுக்கு மிகவும் ஒத்ததாக இருந்தது. ஆனால் இந்த முறை உலகளாவிய அளவில் மாறியது. தேவாலயத்தின் பாரம்பரியமும், நம்பிக்கையும்

கேள்விக்குள்ளாக்கப்பட்டு, பயனற்றவை என்று முத்திரை குத்தப்பட்டன. தேவாலயங்கள் எரிக்கப்பட்டன, பாதிரியார்கள் மற்றும் ஊழியக்காரர்கள் ஒளிந்து கொள்ள இடமின்றி வேட்டையாடப்பட்டனர். அர்மகெதோனிலிருந்து உலகைக் காப்பாற்ற மதத் தலைவர்கள் ஆசீர்வதித்து அனுப்பிய இராணுவம், கர்த்தரின் நியாயத்தீர்ப்புகளை விரைந்து துரிதப்படுத்தியது என்பதை அப்போது அனைவரும் தெளிவாகக் காண முடிந்தது."

"இஸ்ரயேலுக்கு ஆதரவாக நின்ற அந்த கிறிஸ்தவர்களுக்கு என்ன ஆயிற்று?" எண்ணிக்கையில் சொற்பமாய் இருந்தாலும், மனஉறுதியுடன் முன்வந்து பேசியவர்களின் வலிமையால் தன்னையும் அறியாமல் லெவ் கவர்ந்திழுக்கப்பட்டான்.

"கிறிஸ்தவர்களடங்கிய அந்தச் சிறிய குழு அமைதியாக இருக்க மறுத்துவிட்டனர், எனக்கு நினைவிருக்கிறபடி, அவர்கள் உலகிற்கு முன்னின்று, இஸ்ரயேலை ஆக்கிரமிப்பதற்கான உலகத்தின் திட்டத்தைக் கைவிடுமாறு கூறினர். படையெடுத்துவரும் எதிரி படைகள், இஸ்ரயேலுக்குள் நுழைவதற்கு முன்பு, இஸ்ரயேல் அரசாங்கம் இந்தக் கிறிஸ்தவர்களின் சார்பாக பரிந்து பேசியது. இந்தக் கிறிஸ்தவர்கள், அரசாங்களுடன் எந்த வகையிலும் அரசியல் சார்ந்து தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை. அரசாங்கத்திற்கும், இந்தக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை இஸ்ரயேல் தெளிவுபடுத்தியது" என்று ஜேக் விவரித்தான்.

லெவ் தனது வயிற்றில் ஓர் இறுக்கத்தை உணர்ந்தான். "அப்படியென்றால் இஸ்ரயேலுக்கு ஆதரவாக நின்ற அந்தக் கிறிஸ்தவர்களுக்கு என்ன ஆனது?" என்ற தனது கேள்வியை மீண்டும் கேட்டான்.

"அவர்கள் அரசாங்கத் தலைவர்களால் துன்புறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டனர். கலகக்கார கும்பல்கள் வன்முறையில் இறங்கினபோது, உண்மையுள்ள கிறிஸ்தவர்களையும், தங்கள்

இஷ்டப்படி மதத்தைப் பயன்படுத்தினவர்களையும், யார் ஒருவரையும் விட்டுவைக்கவில்லை. உலகம் முழுவதும் பீதி பரவியது, மதம் எதிரியாகப் பார்க்கப்பட்டது. ஏனெனில் இந்தப் படையெடுப்பை ஆசீர்வதித்த தேவாலயங்கள் நிச்சயமாக தவறாக வழிநடத்தப்பட்டன என்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரிந்தது. இஸ்ரயேலை விடுவித்து, பின்னர் உலகம் முழுவதையும் ஆசீர்வதிக்கும் தேவனின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் விசுவாசிகளின் குழு ஒருபோதும் அவர்களின் நம்பிக்கையிலிருந்து பின் வாங்கவில்லை. அவர்கள் கலகக்கார கும்பல்களின் கைகளில் அகப்பட்டு மடிந்தனர்" என்று ஜேக் விவரித்தான்.

தங்கள் விசுவாசத்தினால் உண்டான பலத்தினால், மரணத்தை ஏற்கத் தயாரான ஆண்களும், பெண்களும் அடங்கிய குழுவினரைப் பற்றின காட்சியின் கற்பனைக்குள் லெவ் மீண்டும் கடந்துபோனான். ஆனால் இம்முறை இந்த ஆண்களும், பெண்களும் தனது சொந்த ஜனங்களாலேயே துன்புறுத்தப்பட்டனர். ஆனால் விசுவாசிகள் அடங்கின இச்சிறு கூட்டத்தாரோ, தனது ஜனங்களின் சார்பாக தங்கள் ஜீவனைப் பணயம் வைத்தார்கள். லெவ் குழப்பத்தில் தலையைக் குலுக்கினான். ஆனால் அவர்கள் மீது அவன் கொண்டிருந்த மரியாதையை அவனால் மறுக்க முடியவில்லை.

லெவ் தனது மனதில் எழுந்த முரண்பாடுகளை சீர்தூக்கிப் பார்த்தான்: விசுவாசத்திற்காக ஜீவனை ஒப்புக்கொடுத்துவிடும் காரியமானது ஒருவகைப் போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் பயமே எதிரியாகவும், எதிர்த்துப் போராடும் ஆயுதம், விசுவாசமாகவும் இருந்தது. யார் ஒருவருடைய வற்புறுத்தலும் இன்றி இந்த விசுவாசமுள்ள மக்கள் செயல்பட்டனர். மேலும் தானும் இப்படி ஒரு நிஜமான போரில் எதிரிகள் முன்பு சொற்பமானவர்களாகக் காணப்பட்டது போலவே, எண்ணிக்கையில் சொற்பமான இவர்களும் மரணத்திற்கு வழிநடத்தின தங்களது போரினை எதிர்கொள்ளவும் ஆயத்தமாயிருந்தார்கள்.

முழங்கைகளை முழங்கால்களில் வைத்தவாறும், தனது கைகள் தலையினை தாங்கிப் பிடித்தவாறும் முன்னே சாய்ந்த வண்ணம் லெவ் தரையினை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். இஸ்ரயேலியர்களின் தரப்பில் இருந்து எந்தவிதமான எதிர்த் தாக்குதலும் இல்லாமலேயே, பெரும்பான்மையான எதிரிப்படையினர் இஸ்ரேலிய மண்ணில் இறந்ததையும், அந்த நாளில் நடந்த படுகொலைகளையும் அவனது சகோதரன் விவரிப்பதை லெவ் கேட்டுக்கொண்டிருந்தான்.

"பிற தேசங்கள், நமது தேசம் மற்றும் நமது மக்கள் மீதான விரோதப் போக்கிலிருந்து குணமடைந்து வரும் செயல்பாட்டில் இருக்கின்றன. தேவனுடைய சிந்தையில் இஸ்ரயேலுக்கு ஒரு நோக்கம் வைத்திருந்ததை அவர்கள் காணத் தொடங்கிவிட்டனர். இஸ்ரயேலானது, மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த உலகைக் குணப்படுத்துவதற்கான ஒரு துவக்க இடமாகும். தேவன் நமக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துகொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதையும், தேவனை நேசிக்கும் அனைவரையும் நமது சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறோம் என்பதையும் பிற தேசத்தார் காண்கிறார்கள்" என்று ஜேக் தொடர்ந்தான்.

லெவ் இன்னமும் தரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். போரில் ஏற்பட்ட பேரழிவும், விசுவாசிகளுக்கு இருந்த நம்பிக்கை குறித்தும் அவனது மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. இந்தப் போரினால் ஏற்பட்ட வலி மற்றும் குழப்பம் ஆகியவை எல்லா மக்களுக்கும் இறுதி ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்திருக்கின்றதை லெவ்வின் மனம் கண்டது.

## முற்பிதாக்களின் வருகை

"இறுதிப் போருக்குப் பிறகு விரைவில் மற்ற வியத்தகு நிகழ்வுகள் நடந்தன. முற்காலங்களில் தேவனைப் பிரியப்படுத்திய புருஷர்களும்,

ஸ்திரிகளும் மீண்டும் இஸ்ரயேலில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் புதிய பூமியின் ஒளிபரப்பில் (NEB - NewEarth Broadcasting) தோன்றினர், இது உண்மையில் மக்களைத் திடுக்கிடச் செய்தது." இந்த முற்பிதாக்களே முதலில் உயிர்த்தெழுப்பப்பட்டவர்களாக இருந்தனர் என்று ஜேக் கூறினான்.

லெவ்வின் மனதில் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருந்ததை அறையில் இருந்த அனைவரும் அறிந்தனர். தேவனுடைய நோக்கங்களின் அகலத்தையும் மற்றும் முழுக்காட்சியையும் லெவ் காண வேண்டும் என்ற விருப்பத்துடன் அவர்கள் அமைதியாக உரையாடலைத் தொடர்ந்தனர்.

"சிலர் முற்பிதாக்களை மோசடிக்காரர்கள் என்று நிராகரிக்க முயன்றனர். ஆனால் அவர்களின் புத்திசாலித்தனமான விளக்கக்காட்சிகளும் மற்றும் இஸ்ரயேலில் அவர்களின் தலைமையில் வெளிப்பட்ட ஞானமும் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. தங்களிடம் ஏதேனின் விதைகள் மற்றும் ஏதேனின் பழங்கள் இருப்பதைக் கூறியபோது உலகமே அவர்களைக் கண்டு சிரித்தது. ஆனால் "ஜீவவிருட்சம்" மக்கள் மீது ஏற்படுத்தும் விளைவுகள் குறித்து ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகளை நாடுகள் கண்டபோது, விரைவில் பல நாடுகள் ஏதேன் பழங்களைப் பெற்றுக்கொள்வதற்காக போட்டியிட ஆரம்பித்தனர். பணத்தாலோ அல்லது பாராட்டுக்களாலோ, முற்பிதாக்களை விலைக்கு வாங்க முடியவில்லை. ஒவ்வொரு தேசமும் அவர்களின் தலைமையின் கீழ் வருவதே, பழத்தை பெறுவதற்கான ஒரே வழியாக இருந்தது" என்று ரேச்சல் விவரித்தாள்.

"அதிகாரத்தில் உள்ளவர்கள், முதலில் இஸ்ரயேலின் தலைமையின் கீழ் வர விரும்பவில்லை. ஆனால் குணமடைவதற்கான ஏராளமான காரியங்கள் இஸ்ரயேலில் இருப்பதால், இஸ்ரயேல் ஒரு ஜீவனுள்ள சாட்சியாக உலகிற்கு இருந்தது." ***சகரியா* 8:23**-ஆம் வசனத்தின் தீர்க்கதரிசனம் நினைவாகியது. "***அந்நாட்களில் பலவித***

***பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர், ஒரு யூதனுடைய வஸ்திரத் தொங்கலைப் பிடித்துக் கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடே கூடப் போவோம்***" என்ற வசனத்தை ஆலன் கூறினான்.

"அனைத்து நாடுகளுமே இப்போதும் இஸ்ரயேலின் உதவியை நாடவில்லை; அப்படி உதவியை நாடாத நாடுகள் வறட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இதில் விநோதம் என்னவெனில் அதிகம் கல்வியறிவு உள்ள ஜனங்களில் சிலருக்கு முற்பிதாக்களையும், அவர்களால் பிரதிபலிக்கப்படும் மேசியாவையும் ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது" என்று ஆனியும் கூறினாள்.

"மேசியா" என்று குறிப்படப்பட்டபோது, லெவ் நிமிர்ந்தமர்ந்து தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து, "மேசியாவா?" என்று கேட்டான்.

"ஆம், லெவ் மாமா. மேசியாவாகிய இயேசுதான்" என்று ஆனி பதிலளித்தாள். அவள் பதிலை எளிதாக, மென்மையான தொனியில், அன்போடு சொன்னாள்.

லெவ் பெருமூச்சு விட்டான். ஒரு யூதனாக அவன் இயேசுவின் பெயரைத் தவிர்க்க கற்பிக்கப்பட்டிருந்தான். ஆனால் அறையில் இருந்த யாரும் இந்தப் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கவில்லை.

"எதிரிப் படைகள் அழிக்கப்பட்டபோது நமது சார்பாக தலையிட்டவர், நம் மேசியாவாக மட்டுமே இருக்க முடியும் என்பதை நாங்கள் அறிந்தோம். 'நான் உங்கள் சகோதரன் யோசேப்பு' என்று யோசேப்பு தன்னை வெளிப்படுத்தியதைப் போலவே, இயேசு தம்மை நமக்கு வெளிப்படுத்தினார். தேவனை நம்பியவர்களின் புரிதல் திடீரென்று பரந்து விரிந்தது. '***ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து***

***தூக்கிப்பார்கள்***' என்ற சகரியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது" என்று ரேச்சல் கூறினாள்.

இத்தகைய வெளிச்சத்தையும் மற்றும் அன்பினையும் கண்டு லெவ் அதிர்ந்துபோனான். மேலும் இழிவாய்க் கருதி ஒதுக்கப்படும்படி கற்பிக்கப்பட்ட ஒருவருக்காக துக்கப்பட வேண்டும் என்ற கருத்தானது லெவ்வை அதிர்ந்துபோகப் பண்ணியது.

"இன்று இஸ்ரயேலில் வசிப்பவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் அதிகாரத்தின்கீழ் உள்ளனர். மில்லியன் கணக்கானவர்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்கு உயர்த்தப்படுவதைப் பார்க்கும்போது, அவருடைய வல்லமை எல்லா இடங்களிலும் உள்ளது என்பது நமக்கு உறுதியாகின்றது. லெவ், நீங்கள் ஜீவனோடு இருப்பதே அதற்கான முதல்தரமான சாட்சியாகும். கிறிஸ்துவின் வல்லமைதான், உங்களை மீண்டும் எங்களிடம் கொண்டுவந்தது. குணப்படுத்துவதும், மன்னிப்பதும் அவருடைய வல்லமையினால் உண்டாகின்றது. அவர் எரிந்து கொண்டே இருக்கும் எரி-நரகம் மற்றும் கந்தகம் போன்று போதகர்களால் கற்பிக்கப்பட்ட கிறிஸ்து அல்ல. ஆனால் அவர் நமது மக்களையும், எல்லா தேசங்களையும் ஆசீர்வதித்து, ஒப்புரவாக்க வந்த மேசியாவாகிய இயேசு. அவர் நம்மை விடுவித்தது நம்மை ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பதற்காக அல்ல, மாறாக நமக்கு விடுதலை அளிப்பதற்காகவே" என்று ஜேக் மேலும் விளக்கினான்.

லெவ் மீண்டும் தனது நாற்காலியில் சாய்ந்து, சோர்வடைந்த தனது கண்களை மூடிக் கொண்டான். கடந்த காலத்தில் இயேசுவை நடத்தின முறைகளை ஏனோ லெவ்வின் மனதினால் ஒருபோதும் அங்கீகரிக்க முடியாமல்தான் இருந்தது. இயேசு நிச்சயமாக மரணத்திற்கேதுவாக எதையும் செய்யவில்லை, சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுவதற்கு ஏதுவான ஒன்றையும் கொஞ்சம்

கூட அவர் செய்யவில்லை என்ற இந்த எண்ணம், அவனுக்குள் இக்காரியத்தில் இருந்த அநீதியை உணர்த்தியது. இந்தக் கொடூரமான மற்றும் இழிவான மரணத்திற்கு இயேசு அடிபணிந்தார் என்ற எண்ணமானது இயேசுவை ஒரு பேரரசராக உணரவைத்தது. இந்த மனிதன் ஏன் இறந்தார் அல்லது எது அவரை இஸ்ரயேலின் இரட்சகராக மாற்றியது என்பதை லெவ்வால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஒரு சோகம் தன் இருதயத்திற்குள் நுழைவதை உணர்ந்தான். இந்தத் துக்கம் அவனிடம் குற்ற உணர்வை ஏற்படுத்துவதற்காக அல்ல, மாறாக அவனை விடுவிக்கக்கூடிய, ஒரு நன்றியை உணர ஏற்படுத்துவதற்காக என்று அவன் உணர்ந்தான். இயேசுவின் மரணத்தைக் கேட்டபோதெல்லாம் அவன் ஓர் அசௌகரியத்தை உணர்ந்திருந்தான். ஆனால் ஏதோவொரு விதத்தில் இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் அனைவரும் மீண்டும் வாழ வழிவகுத்தது என்பதை உணரத் தொடங்கினான். ரெபெக்காளின் இதமான தொடுதலை உணர்ந்தான். லெவ்வின் இருதயத்திற்குள் நடந்த போராட்டத்தை அவள் உணர்ந்து அமைதியாக இருந்தாள். ஜேக், ரேச்சல், ஆனி மற்றும் ஆலன் ஒவ்வொருவரும் அமைதியாக எழுந்து நின்று போய் வருகிறோம் என்று கூறிய போது லெவ் அவர்களைக் குழப்பத்துடன் பார்த்தான்.

"நாளை பார்ப்போம், மாமா" என்று ஆனி உறுதியளித்தாள்.

லெவ் பதிலளிப்பதற்கு மிகவும் சோர்வாக உணர்ந்தான். அறையின் மூலையில் சாய்வாக இருக்கும் சோபா நாற்காலியில் அமர ரெபெக்காள் அவனுக்கு உதவினாள், அவனுக்கு நேரமும், ஓய்வும் தேவை என்பதை உணர்ந்து அவள் அவனைத் தனியாக விட்டுவிட்டாள்.

***

**"*கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*" (*சங்கீதம்* 34:8)**

# அத்தியாயம் - 4

லெவ் மீண்டும் தனது குடும்பத்தினருடன் மேசையில் அமர்ந்திருந்தான். அவன் மன அமைதியுடன் இருந்தான். ஆனால் புதிய பூமியில் உள்ள மேசியாவையும், விசுவாசிகளையும் மற்றும் இன்னும் உயிர்த்தெழுப்பப்பட வேண்டிய பில்லியன்கணக்கான ஜனங்களையும் பற்றின தகவல்களை எதிர்கொள்ள லெவ் தயாராக இல்லை. இப்போது அறிந்து கொண்டவைகளே லெவ்விற்கு ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு இருந்ததால் அவனது மன அமைதி குலைந்தது. ஆனால் இன்னும் பல விஷயங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வமாக இருந்தான். உரையாடலை மேலோட்டமாக வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தில், லெவ் மற்றொரு கேள்வியைத் தொடங்கினான்.

"இந்த மாற்றங்கள் அனைத்தும் உங்களுக்கு எப்படி இருந்தது?" என்று லெவ் கேட்டான்.

"ஆமாம், இந்தப் புதிய வாழ்க்கை சற்று வித்தியாசமாகத்தான் எங்களுக்கும் இருந்தது. நாம் பழைய உலகில் இருளான நாட்களில் வாழ்ந்தோம்.ஆனால் இப்போது புதிய பூமியில் வாழ்கிறோம். இருண்ட காலங்களில் வாழ்ந்தது, இப்போது புதிய பூமி எப்படி உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள உதவுகிறது" என்று ரேச்சல் கூறினாள்.

ஜேக் குறுக்கிட்டு: "ஆனால் பழைய உலகில், நம்பிக்கையற்ற காலங்களில் நம் தேசம் வரைபடத்திலிருந்து அழிக்கப்பட்டுவிடும் என்று எங்களுக்குத் தோன்றிய போதும்கூட, நாங்கள் இருவரும் தீர்க்கதரிசனங்களை நம்பினோம். ரேச்சலும், நானும் பழைய எருசலேமின் மேற்குச் சுவற்றில் பிராத்தனை செய்யச் சென்றது எனது நினைவுகளில் மதிப்புமிக்க ஒன்றாயிருக்கின்றது" என்றான்.

அவர்களின் நம்பிக்கை உண்மையானது என்பதை லெவ் உணர்ந்தான், திரும்பவும் இப்போது இங்கே உண்மையான சான்றுகளையும் லெவ் கண்டான். தனது சகோதரனாகிய ஜேக்கின் விசுவாசம் குறித்த தன்னுடைய கோபமான மற்றும் அவமதிக்கும் வார்த்தைகளை நினைவுபடுத்திப் பார்த்தபோது லெவ் சங்கடமாக உணர்ந்தான். மன்னிப்பு கேட்பது என்பது அவனுக்கு பழக்கப்படாத ஒன்றாக இருந்தபோதிலும், தன்னைக் கட்டாயப்படுத்திக் கொண்டு ஜேக்கிடம் மன்னிப்பு கேட்டதில் லெவ்வின் முகம் சிவந்தது.

"நான்....உனது விசுவாசத்தைக் குறித்து அப்போது பேசியவற்றால், இப்போது உன்னுடன் பேச எனக்கு தகுதியில்லை, ஜேக். நான் உன்னைவிட சிறந்தவன் என்பதை எப்பொழுதும் எனக்கு நானே நிரூபிக்க நான் முயற்சித்தது போல் தோன்றுகிறது." லெவ் ஆழமாக மூச்சை உள்ளிழுத்து பெருமூச்சு விட்டு "நான்...நான்.... உண்மையில் எனது செயலுக்காக வருந்துகிறேன்" என்று கூறினான்.

"உன்னுடைய மன்னிப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். உன்னை விடவும் நான் சிறந்தவன் என்பதை எனக்கு நானே நிரூபிக்க முயன்றதில் எனக்கும் பங்கு உண்டு. மேலும் நான் மேலானவன் என்ற எனது மனப்பான்மைக்கும், அது உனக்குள் ஏற்படுத்திய தாக்கத்திற்கும் நான் வருந்துகிறேன் என்று கூறி ஜேக் புன்னகைத்தான். விசுவாசத்தைப் பொறுத்தவரை, அதைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கும், அதற்குக் காலமும் அனுபவமும் தேவை. ஆனால் முன்பு மனித கண்களுக்குத் தெரியாத விஷயங்களுக்கு, இப்போது நம்மைச் சுற்றி உயிருள்ள சான்றுகள் உள்ளன. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம் கண்முன்னே நிறைவேற்றப்படுகின்றது" என்று ஜேக் விளக்கினான்.

மன்னிப்பு கேட்ட உடனேயே அதனை ஏற்றுக்கொண்டு, தன் சகோதரன் பதிலளித்ததைக் கண்டு லெவ் மகிழ்ச்சி அடைந்தான்.

தனது இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த சுமை தூக்கி எறியப்பட்டதைப்போல உணர்ந்தான். ஆனால் இன்னும் அவர்களுடைய வாழ்க்கையில் விளங்கின விசுவாசத்தை அவனால் தொடர்புபடுத்திப் பார்க்க முடியவில்லை. லெவ் மீண்டும் பெருமூச்சு விட்டான்.

ரேச்சல் உரையாடலின் திசையை மாற்றினாள்.

## லெவ்வின் புதிய வீடு

"லெவ், புதிய வீட்டை உங்களுக்குக் காட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாங்கள் உங்களை வீட்டைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்கிறோம், அப்போதுதான் உங்களுக்கு என்ன தேவை என்பதை உங்களால் அறிய முடியும்" என்று ரெபெக்காள் கூறினாள்.

அவன் உயிர்த்தெழுந்து வந்த படுக்கையறையிலிருந்து சுற்றிப்பார்க்கத் தொடங்கினார்கள். அந்த அறை பிரகாசமாகவும், காற்றோட்டமாகவும் இருந்தது. அந்த அறையில் ஒரு பெரிய படுக்கை, பல அடுக்குகள் கொண்ட இழுப்பறைகள், ஒரு மேஜை மற்றும் கணினிப் பகுதி ஆகியவைகள் இருந்தன. அங்கிருந்த ஒரு பெரிய நகரும் கண்ணாடி-ஜன்னல் அமைப்பைக் கொண்ட கதவு, தோட்டத்திற்கு வழிநடத்தியது. வெளியே இருந்தவற்றைக் காணும்படி வடிவமைக்கப்பட்டிருந்த இந்த அமைப்பை லெவ் விரும்பினான், கிட்டத்தட்ட ஒவ்வொரு ஜன்னல்களிலிருந்தும் அவனால் தோட்டத்தைக் காண முடிந்தது.

"உங்களுக்குத் தேவையான அனைத்து ஆடைகளும், இழுப்பறைகள் (drawers/அலமாரி) கொண்ட உள் அறையில் இருக்கிறது" என்று ரெபெக்காள் கூறினாள்.

லெவ் ஒரு டிராயரைத் திறந்து சட்டைகளை ஆச்சரியத்துடன் பார்த்தான். சிறு கட்டங்களுள்ள சட்டையை டிராயரிலிருந்து எடுத்து "இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று வினவினான்.

"இவைகளெல்லாம் புதியதாக இருந்தாலும் நான் வழக்கமாக அணியும் சட்டை, பேன்ட் மற்றும் டென்னிஸ் ஷூக்கள் போன்ற என் உடைகளின் வடிவமைப்பிலேயே உள்ளதே!" என்றான்.

"மக்கள் தாங்கள் வழக்கமாக இருப்பதைப் போலவே, இப்புதிய சூழலை உணர உதவுவதற்கான யுக்திகளில் இதுவும் ஒன்றாகும். மக்களுக்குப் பழக்கப்பட்ட சில விஷயங்களை மக்களுக்கு வழங்க முயற்சிக்கிறோம். எனவே உங்களுக்குப் பிடித்த சில ஆடைகளை உங்களுக்காக நான் தேர்வு செய்தேன். உங்கள் பழைய காலணிகளைப் போன்ற டென்னிஸ் காலணிகளைக்கூட தேர்ந்தெடுத்தேன்" என்று கூறி ரெபெக்காள் சிரித்தாள்.

லெவ் தனது காலணிகளைப் பார்த்தான். அவன் சட்டையை டிராயரில் எடுத்த இடத்தில் திரும்பி வைத்தபடி எழுந்து நின்று சிரித்தான். இத்தகைய நுணுக்கமான விவரங்களுக்கும் கவனம் அளிக்கப்பட்டது அவனுக்கு விநோதமாக இருந்தது. மேலும் அவன் உயிர்த்தெழுதலில் திரும்பி வருவதற்கான ஏற்பாட்டில் எடுக்கப்பட்டிருந்த முன்யோசனை மற்றும் முயற்சியால் ஈர்க்கப்பட்டான். அவனது கவனம் அவனது புதிய வீட்டைச் சுற்றிப் பார்க்கத் திரும்பியது.

உள்ளறை பெரியதாகவும், ஒளிஊடுருவக்கூடிய மேற்கூரையுடனும் இருந்தது. அனைத்துக் கூரைகளும் சூரிய ஒளியைப் போன்ற ஒளியை வெளிப்படுத்தின. மேலும் அதன் சுவிட்சுகள் ஒளியை மங்கலாக்கக்கூடிய வசதியோடு இருந்தன. குளியலறை பெரியதாக இருந்தது. லெவ் கண்ணாடியில் தன்னை உற்றுப் பார்த்தான்.

அவன் தனது பிம்பத்தை மிகவும் அருகில் பார்த்துப் புன்னகைத்தான். அவனைப் பற்றி அவன் எப்படி நினைவில் வைத்திருந்தானோ அவை அனைத்தும் அதேபோல் இருந்தன ஆனால் அவனது பற்கள் நேராக இருந்தன. மேலும் முன்பு இருந்த ஞானப்பல்

இல்லாமல்போன இடத்தில் இருந்த இடைவெளி இப்போது இல்லாதிருந்ததை அவன் கண்டான். அவன் இந்தக் கண்டுபிடிப்பில் முற்றிலும் மூழ்கியவனாக, தன் வாயினை அகலமாகத் திறந்தபடி கண்ணாடியின் முன்பாக நின்று கொண்டு, தலையினை முன்னும் பின்னுமாகச் சாய்த்து பார்த்துக் கொண்டிருந்ததில் தன்னைச் சுற்றி இருந்தவர்களை மறந்து போனான். எந்தவிதமான அடைக்கும் பொருட்களும் இல்லாமலேயே அவனது பற்களுக்கு இடையில் இருந்த இடைவெளி போய்விட்டதை உறுதி செய்தான்.

"நீங்கள் மிகவும் அழகாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படு கிறீர்கள் தானே லெவ்?" என்று நகைச்சுவையாக ரேச்சல் கேட்டாள்.

லெவ், திடுக்கிட்டு தலையசைத்து சற்று கூச்சத்துடன் பார்த்தான்.

"என்னுடைய நெற்றியில் தழும்புகளே இல்லை." இந்த வார்த்தைகளைப் பேசும்போது தன் வாழ்க்கையில் நடந்த ஒரு கசப்பான சம்பவம் அவன் நினைவிற்கு வந்ததில் ஒரு மாதிரியாக லெவ் உணர்ந்தான், உடனடியாகத் தன்னை திசை திருப்பினான். "நான் எப்போதும் விரும்பும் வசீகரிக்கும் திரையுலக நட்சத்திரப் புன்னகை இப்போது என்னிடம் உள்ளது" என்று லெவ் நகைச்சுவையாகக் கூறினான்.

"அப்பா உங்கள் புன்னகை முன்பை விட அழகாக இருக்கிறது" என்று ஆலன் கூறினான்.

லெவ் மீண்டும் கண்ணாடியைப் பார்த்தபோது எல்லோரும் தன்னைப் பார்த்து சிரிப்பதைக் கண்டான். "நீங்கள் அனைவருமே வசீகரிக்கும் திரையுலக நட்சத்திரப் புன்னகையை பெற்றிருக்கிறீர்கள்" என்று லெவ் கிண்டல் செய்தான்.

"லெவ் மாமா, மோசமான பற்கள் அல்லது எந்தவிதமான குறைபாடுகளோடும் இஸ்ரயேலில் இப்போது நீங்கள் யாரையும் காண

முடியாது. தோல் பிரச்சனைகள் இல்லாத ஒரு பருவவயது இளைஞனாக இருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள் இது ஒரு பெரிய விஷயம்" என்று கூறி ஆனியும் சம்பாஷனையில் கலந்துகொண்டாள்.

லெவ் தனது கவனத்தை ஆனி இடமாய்த் திரும்பினான். "சொல்லு ஆனி, நீ எங்கு பள்ளிக்குச் செல்கிறாய்?" என்று லெவ் வினவினான்.

"பள்ளிகள் முன்பு இருந்ததைப்போல் இல்லை. அனைத்துப் படிப்புகளையும் தொலைக்காட்சியில் காணலாம். நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் எந்தவொரு பாடத்தையும் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்துக்கொள்ளலாம். முற்பிதாக்களே பெரும்பாலான வகுப்புகளைக் கற்பிக்கிறார்கள். அவர்கள் உண்மையில் நல்ல ஆசிரியர்கள். ஒவ்வொரு நிகழ்வைப் பற்றிய உண்மையையும் வெளிப்படுத்துவதற்காக, வரலாறு மீண்டுமாகத் தொகுத்து எடுத்துக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு பாடமும் சுவாரஸ்சியமானது" என்று ஆனி விளக்கினாள்.

## ஒரு புதிய அகராதி

"அகராதிகள்கூட மாறி வருகிறது. சொற்கள் அடங்கிய பெரிய தொகுதியானது இப்போது "தொன்மையானவை" என்று கருதப்படுகின்றது, ஏனெனில் அப்பெயர்கள் எல்லாம் இனி நம் உலகில் ஒரு பகுதியாக இருப்பதில்லை. மருத்துவர்கள், செவிலியர்கள், பல் மருத்துவர்கள், மனநலநிபுணர்கள், வழக்கறிஞர்கள், அமைச்சர்கள், நீதிமன்றங்கள், நீதிபதிகள், நீதித்துறை விசாரணைக் குழு, காவல்துறை, சிறைச்சாலைகள், பூட்டும் முறைகள் (locks), மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், சக்கரநாற்காலிகள், கட்டும் பட்டைகள் (bandages) போன்ற சொற்களும் - மேலும் கேட்கும் கருவிகள், பிரம்புகள், கண்ணாடிகள், வலி நிவாரணிகள் மற்றும் மருந்துகள் போன்ற வார்த்தைகளால் இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்" என்று ஜேக் கூறினான்.

"படைகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், பீரங்கிகள், போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், ராக்கெட் ஏவுகணைகள், கடற்படைகள், நீர்மூழ்கிக்குண்டுகள், அணுகுண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள் மற்றும் நியூட்ரான் குண்டுகள், விஷவாயு, கிருமிகள் போன்ற சொற்களை வழக்கத்திலிருந்து மறைந்த சொற்களாகப் பட்டியலிடலாம்...... பழைய உலகத்தின் செல்வத்தில் கால் பகுதியிலிருந்து மூன்றில் ஒரு பங்கு, ஜீவனை அழிப்பதற்கான கருவிகளை உண்டாக்குவதற்காகச் செலவழிக்கப்பட்டது. இதைப் போன்ற செலவுகளுக்கு இனி அவசியமில்லை! வயதானவர்கள் இளமையாக மாறுகிறார்கள், அரசியல்வாதிகள் யாரும் இங்கு இல்லை. மக்கள் பேராசையோடு வாழ்வதற்குப் பதிலாக அன்போடு வாழ்கிறார்கள்" என்று ரேச்சல் கூறினான்.

"இவைகளை எல்லாம் நம்புவதற்கு நான் இவைகளை என் கண்களால் பார்க்க வேண்டும். இந்த மாற்றங்களை என்னால் கற்பனைகூட செய்துபார்க்க முடியவில்லை" என்று கூறியவாறே உள் முற்றத்திற்கு வழிநடத்திய பிரெஞ்சு கதவுகளையும், இரண்டு படுக்கைகளையும் கொண்ட விருந்தினர் அறைக்குள் அனைவரோடுகூட நுழைந்தான்.

அவர்கள் அனைவரும் வீட்டின் பின்புறமாக இருந்த பூக்கள் மற்றும் அனைத்து வகையான தாவரங்களும், சிறிய அளவில் காய்கறிகளும் நிறைந்திருந்த ஒரு பெரிய பழத்தோட்டத்திற்குச் சென்றனர். செழித்து வளர்ந்திருந்த தாவரங்கள் லெவ்விற்கு அடர்ந்த காட்டை நினைப்பூட்டியது. மேலும் ஆழ் பச்சை நிறத்தைக் கொண்ட கீரைகள் மற்றும் அங்கிருந்த பல வண்ணங்கள் அவனது கண்களைக் கூசச் செய்தன. அவன் தன்னைச் சுற்றி இருந்த அழகினால் கவரப்பட்டு அங்கு போடப்பட்டிருந்த மர பெஞ்சுகளில் ஒன்றில் அமர்ந்தான். மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து கொண்டனர்.

"இந்த இடம் ஒரு சிறிய சொர்க்கம் போலுள்ளது, இல்லையா?" என்று லெவ் கூறினான்.

"இந்தச் சிறிய சொர்க்கம் இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் குழந்தைகளுக்கும் இனிமேல் கிடைக்கும். இதைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன் லெவ்" என்று ஜேக் கூறினான்.

"ஆமாம், சரி" என்று தனக்குத்தானே நினைத்துக்கொண்டான். தான் புதிய பூமியில் இருப்பதன் யதார்த்தத்தையே அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தப் புதிய பூமியில் தங்களுடன் இணையப் போகும் மற்றவர்களைப் பற்றியும் சிந்திப்பதென்பது கற்பனை செய்ய முடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது என்று லெவ் நினைத்தான்.

யோசிக்க முடியாத அளவில் இருந்த காரியங்களிலிருந்து தன் மனதைத் திசைதிருப்புவதற்காக "சரி மின்சார மீட்டர் எங்கே?" என்று லெவ் கேட்டான்.

"இனிமேல் மின்சார மீட்டர்கள் தேவையில்லை, பேட்டரிகளால் இப்போது கிட்டத்தட்ட 100% செயல்திறனில் ஆற்றலை சேமிக்க முடியும். ஒளி மற்றும் வெப்பத்திற்கான மின்சாரம், சூரிய மின்கலங்களால் வழங்கப்படுகிறது" என்றான் ஆலன்.

அப்படியென்றால் "இவைகள் வேலைகளை எளிதாக்குகிறது என்று நினைக்கிறேன்!" என்று லெவ் கூறினான்.

"நிச்சயமாகச் செய்கிறது. வாழ்க்கை எளிதாக இருக்கிறது, முன்பிருந்த வாழ்க்கையைவிட மிகவும் சுலபமாகவும் இருக்கிறது. மக்கள் தங்களுக்கு விருப்பமான வேலைகளைத் தேர்வு செய்கிறார்கள், அதுவும் பகுதி நேர பொழுதுபோக்காக இவைகளைச் செய்கின்றனர். சுற்றிப்பார்ப்பதற்கு நிறைய இடங்களும், சந்திப்பதற்கு

நிறைய மக்களும் இருக்கிறார்கள். ஆனால் அனைத்தையும்விட மிகவும் சவாலான பணி என்னவென்றால், இன்னும் உயிர்த்தெழுப் பப்படாத பில்லியன் கணக்கானவர்களுக்குத் தேவையான இருப்பிடம் மற்றும் உணவுகளைத் தயார்ப்படுத்த வேண்டியுள்ளதுதான்" என்றான் ஆலன்.

லெவ்விற்கு ஒருமாதிரியாக இருந்தது. "பில்லியன் கணக்கானவர்களா......" இது எப்படி உண்மையாக இருக்க முடியும்? என்று சிந்தித்தான்.

"அப்படியென்றால் இந்த உயிர்த்தெழுப்பும் காரியம் எப்படி நடைபெறும்?" என்று லெவ் சத்தமாக கேள்வி எழுப்பினான்.

லெவ்வின் வெளிப்படையான அவநம்பிக்கையின்மையைக் குறித்து ஜேக் கவலையடையவில்லை.

"நமது மனித குடும்பத்தின் விஷயத்தில் ஒரு தொடர்ச்சியினைப் பெறுவதே குறிக்கோள் ஆகும். நம் அனைவருக்கும் மறுஜென்மம் அளிப்பதில் கிறிஸ்து பங்கு வகிக்கிறார். "பிந்தினோர் முந்தினோர் ஆவார்" என்ற கூற்றை நீ கேள்விப்பட்டிருப்பாய். கடைசியாக மரித்தவர்கள் முதலாவதாக ஜீவனுக்குத் திரும்புவார்கள். முதலில் உன்னுடைய தலைமுறையினர் அனைவரும் எழுப்பப்படுகின்றனர் - பின்னர் இரண்டாவது தலைமுறையினர், பின்னர் மூன்றாவது எழுப்பப்படுகின்றனர். மேலும் நாம் இன்னும் பின்னால் செல்லும்போது, இவை அதிகரித்துக் கொண்டே போகும். குறைவான மற்றும் குறைந்த நபர்களுக்கான ஏற்பாடுகளைச் செய்ய அதிகமான மக்கள் இருப்பார்கள். நாம் ஆதாம் மற்றும் ஏவாளிடம் வரும்போது, முதல் பெற்றோருக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பாக்கியத்தை முழு உலகமும் பெற்றிருக்கும். அப்போது அது ஒரு கொண்டாட்டமாக இருக்கும்!" என்று ஜேக் கூறினான்.

ஜேக் பேசினவைகளைக் கேட்டபோது அத்தருணத்திற்குக் கொண்டாட்டம் என்ற வார்த்தையைவிட, குழப்பம் என்ற வார்த்தையே மிகப் பொருத்தமாக இருக்கும் என்று லெவ் எண்ணினான். லெவ் தனது குரலில் அவநம்பிக்கையை மறைக்கவில்லை.

## கர்த்தரின் வழிகள் சமமானவை

"அப்படியானால் மரித்தவர்களை மீண்டும் ஜீவனோடு பெறுவதற்குச், சந்ததியினர் இல்லாத மக்களின் நிலை என்ன ஆகும்? சோதோம் மற்றும் கொமோராவின் நிலை என்ன? நிணச்சுரப்பி கொள்ளை நோயால் (புபோனிக்) அழிக்கப்பட்ட நகரங்களின் நிலைமை என்ன? அவர்களுக்காக யார் ஏற்பாடுகளைச் செய்வது?" என்று லெவ் சவால் விடுத்தான்.

"சக மனிதனை உண்மையிலேயே நேசிப்பவர்கள், மரித்த தலைமுறையினரை மீண்டும் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளில் ஒன்றிணைவார்கள். இது ஒரு வகையான பரீட்சையாக இருக்கும். நீங்கள் விரும்புவோருக்காக ஆயத்தங்களைச் செய்வது எளிதானது. ஆனால் உங்களுக்குத் தெரியாத நபர்களுக்காக அல்லது ஹிட்லர் மற்றும் நீரோ போன்றவர்களுக்காக ஆயத்தங்களைச் செய்வது எளிதான காரியமல்ல" என்று ரெபெக்காள் விளக்கினாள்.

"ஹிட்லருக்காக நான் எதையும் செய்ய மாட்டேன்" என்று லெவ் தீவிரத்தோடு பதிலளித்தான். அந்த மனிதன் உயிர்தெழுப்பப்படுவதை நினைத்தபோது அவன் உடல் நடுங்கியது. மேலும் இந்தச் செயல்முறைக்கு உதவ விரும்பும் எவரையும் நினைத்தபோது வெறுப்பினையே உணர்ந்தான். "அவரைப் போன்றவர்கள் உயிர்த்தெழ தகுதியற்றவர்கள்" என்று லெவ் கூறினான்.

"கர்த்தரின் வழிகள் சமமானது, என்பதனை நினைவில் கொள்ளுங்கள் லெவ்" என்ற ரேச்சலின் குரல் பொறுமையாக ஒரே சீராக இருந்தது. "கடந்த காலத்தில் தங்களது செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தற்போது தங்களை மாற்றுவதற்கான உண்மையான முயற்சியை அவரவர் மேற்கொண்டால், யாரும் மீண்டு வருவதற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. மேசியா அவர்களுக்கு உதவுவார், அவருடைய உதவியை ஏற்றுக்கொள்ளும் எவருக்கும் மனித பரிபூரண நிலையைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். சிலருக்கு இது மிகவும் கடினமாக இருக்கும். சிலரின் இருதயத்தில் வெறுப்பும், கோபமும் அந்த அளவிற்கு இருப்பதால், அவர்கள் தங்களை இந்தப் புதிய உலகத்தின் நடைமுறைக்கு பொருத்திக்கொள்வது கடினமாக இருக்கும். மேலும் இன்னமும் மக்களைக் காயப்படுத்த விரும்பலாம். சிலர் தங்களுக்கு முன்னால் இருக்கும் வாய்ப்பிற்கு ஒருபோதும் இசையக்கூடாது என்று முடிவு செய்யலாம்" என்று ரேச்சல் கூறினாள்.

லெவ் தன் தலையை அசைத்து தன் மறுப்பைத் தெரிவித்தான். அவன் மீண்டும் மேசியாவின் விஷயத்தைப் பற்றி பேசுவதைத் தவிர்த்து, ஹிட்லர் போன்றவர்கள் எழுப்பப்படுவது குறித்த விசித்திரமான கருத்தைக் குறித்து விமர்சித்தான். "இது எனக்கு மிகவும் பாதுகாப்பான அல்லது நம்பிக்கைக்குரிய உலகம் போல் தெரியவில்லை! ஒரு கோபக்காரன் தன் சத்துருவிற்குத் தீங்கு விளைவிப்பதை யார் தடுக்க முடியும்?" என்று லெவ் கேள்வியெழுப்பினான்.

"வன்முறை இங்கு அனுமதிக்கப்படுவதில்லை. நீதியைச் செயல்படுத்த வல்லமையுள்ள ஆவிக்குரிய படைகள் எல்லா இடங்களிலும் உள்ளன. இவர்களின் செயல்பாடுகள் உடனுக்குடனும், திறம்படவும் காணப்படும். இவை எவ்வாறு செயல்படுகிறது என்பதை

நீங்கள் விரைவில் காண்பீர்கள்" என்று ரெபெக்காள் அவனுக்கு உறுதியளித்தாள்.

புதிய பூமியின் இந்த அம்சங்களானது லெவ்விற்கு சிறிதும் திருப்தி அளிக்கவில்லை. அவன் தொடர்ந்து குழப்பத்தில் காணப்பட்டதால், அவன் புதிய பூமியின் இந்த ஏற்பாடுகள் காரணமான பின்விளைவுகள் குறித்தும், எப்படி இந்த உலகம் பாதுகாப்பான ஒன்றாக இருக்கமுடியும் என்பதைக் குறித்தும், அவன் இன்னும் வேறே கேள்விகளைக் கேட்க வேண்டும் என்று இருந்தான். ஆனால் அவன் வீட்டிலிருந்த அச்சிறிய கூட்டத்தினர் சம்பாஷனையை முடிக்க விரும்பினதாகத் தோன்றியது. லெவ் தவிர மற்ற அனைவரும் எழும்பிவிட்டார்கள்.

## புதிய பூமயின் ஒளிபரப்பு (New Earth Broadcasting – NEB)

"இன்றிரவு நம் முற்பிதாக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்க்க வீட்டின் வரவேற்பறைக்குச் செல்வோம்" என்று ரேச்சல் அறிவித்தாள்.

அனைவரும் அமர்ந்திருந்த அறைக்குள் கடைசியாக லெவ் நுழைந்தான். ஆலன் ஒரு பொத்தானை (button) அழுத்த, ஒரு முழு-அளவிலான திரை சுவரில் ஒளிர்ந்தது. வியக்கத்தக்க அழகுடனும், வலுவான மற்றும் சுறுசுறுப்பான ஆற்றலுடனும் இருந்த பல ஆண்களும் பெண்களும் ஒரு வட்டமேஜை கலந்துரையாடலில் கூடியிருந்தனர். அவர்களின் பேச்சு அதிகார தோரணையில் இருந்தது, அதேசமயம் மென்மையாகவும், புத்திசாலித்தனமாகவும் இருந்தது. அவர்களின் உரையாடலால் லெவ் வசீகரிக்கப்பட்டான். அவன் ஒரு நாற்காலியை எடுத்து அதில் அமர்ந்து மெய்மறந்து கவனிக்க ஆரம்பித்தான்.

"ஓ! இவர்கள் தானா அந்த முற்பிதாக்கள்" என்று லெவ் தனக்குள்ளே முணுமுணுத்தான்.

ஈசாக்கு, ஒரு சிறந்த ஒருங்கிணைப்பாளர் என்பதை எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் சீர்த்திருத்தலை விரைந்து செய்வதற்கான வேலைகளைப் பற்றி பேசினார். மற்றவர்களைக் கவரும் ஆளுமைத்திறன் கொண்டவராக தாவீது இருந்தார். மேலும் இரண்டு நாடுகள் - கானா மற்றும் எத்தியோப்பியா - கர்த்தரின் ஆசீர்வாதம் அவர்களுக்கு வரத் தொடங்குவதற்காக அதிகாரப்பூர்வமாக இஸ்ரயேலுடைய அதிகாரத்தின் கீழ் இருக்க விரும்பி அவர்கள் கேட்டுக்கொண்டதாக அவர் அறிவித்தார். கர்த்தரைத் தேடக் கற்றுக்கொள்ளும் புதிய நாடுகளில் தாவீது ஒரு சக்தி வாய்ந்த செல்வாக்கு கொண்டிருப்பதை லெவ்வால் காண முடிந்தது.

ஏதேனின் மரங்கள் மற்றும் தாவரங்கள் இரு நாடுகளுக்கும் கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என்று சிம்சோன் அறிவித்தார். இந்த மனிதனின் தசைகளைக் கவனித்தவாறு லெவ் தனக்குத்தானே சிரித்தான். "இவர் ஏதேனின் மரங்களைக் கொண்டுசெல்லப் பயன்படுத்தும் மரப்பெட்டிகளில் அரை டன் பெட்டிகளைத் தன் கைகளாலேயே ஏற்றி விடுவார் போல" என்று லெவ் யோசித்தான்.

நியாயாதிபதிகளின் நாட்களில் படைத்தளபதியாக இருந்த பாராக், நில ஒதுக்கீடுகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பில் இருந்தார். அவர் கானா மற்றும் எத்தியோப்பியா மக்களுக்குத் தேவையான நில மானியங்களுக்குறிய முன்னேற்பாடுகளை, நிலமதிப்பீடு செய்பவர்கள் (சர்வேயர்கள்) வழங்குவார்கள் என்று விளக்கினார். இந்தப் புதிய திட்டத்தில் நிலமதிப்பீடு செய்பவர்கள் (சர்வேயர்கள்), இட ஒதுக்கீடுகளை நிர்ணயித்த பிற்பாடு ஏதேனின் மரங்களை நடவு செய்வதற்கே முதல் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற தன்னுடைய கருத்தினை ராகாப் அன்புடன் தெரிவித்தார்.

ஆபிரகாமும், சாராளும் ஒவ்வொரு தேசத்துக்குறிய கட்டமைப்புக்கான திட்டங்களை மதிப்பாய்வு செய்தனர். சாராள்,

பூங்காக்கள் மற்றும் வனப்பாதுகாப்பு பற்றிய படங்களைக் காட்டினார், தேவையான சில தொழிற்சாலைகளைத் தக்கவைப்பதற்காக இயங்கும் சிறிய மையங்களுடன்தான் பெரும்பாலான நகரங்கள் ஒன்றிணைக்கப் படும் என்று விளக்கினார். அதனிமித்தமாக நெரிசலான நகரங்களில் இனி மக்கள் கூட்டம் இருக்காது.

விலங்குகள் இராஜ்யத்துடன் இணைந்து பணியாற்ற தன்னார்வலர்கள் தேவை என்பதை ஆபிரகாம் தனது பார்வையாளர்களுக்கு நினைவுபடுத்தினார்.

புதிய பூமியின் மென்மையான முறைமைகளுக்கு ஏற்ப விலங்குகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கான பாடங்கள், திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் காலை எட்டு மணிக்கும், பிற்பகல் ஒரு மணிக்கும், மாலை எட்டு மணிக்கும் ஒளிபரப்பப்படும். தன்னார்வத் தொண்டு செய்ய விரும்புவோர் 1-800-விலங்குகள் என்ற தொடர்பு எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்று ஆபிரகாம் அறிவித்தார்.

இதுவரை இருந்தவர்களிலேயே ஆபிரகாம் மிகச் சிறந்த நிர்வாக அதிகாரியாக லெவ்வைக் கவர்ந்தார். நிகழ்ச்சி விரைவிலேயே முடிவிற்கு வந்தபோது லெவ் வருத்தமடைந்தான். மேலும் ஆபிரகாம் தனது இறுதி அறிவிப்பை வெளியிட்டார்: இந்த வட்டாரத்தில் நாளை உயிர்த்தெழத்திட்டமிடப்பட்டுள்ள நபர்களின் பட்டியல் மாலை செய்திகளில் அறிவிக்கப்படும். உயிர்த்தெழுந்து வருபவர்களுக்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்ய விரும்புபவர்கள் ஆபிரகாமையும், அவரது உதவியாளர்களையும் 1-800-RESURRE என்ற தொடர்பு எண்ணில் தொடர்புகொள்ளலாம். எதிர்பாராத ஓர் ஆர்வம் தன்னை ஆட்கொள்வதை லெவ் உணர்ந்தான். இந்தப் புதிய பூமியின் வழிமுறைகளை அவன் நம்பவில்லை, ஆனாலும் இந்த "உயிர்த்தெழுதல்" வேலை தொடர்புடைய ஏதோ ஒன்றினால் அவன்

ஈர்க்கப்பட்டதுபோல் உணர்ந்தான். அதாவது அவனுக்கு நிறைவேற்றுவதற்கு ஏதோ ஒரு திட்டம் இருப்பதைப்போல இருந்தது. லெவ் தெளிந்த சிந்தையுடன் எண்ணைக் குறித்துக் கொண்டான்.

## குற்றங்களை அறிக்கைசெய்தல்

"அடுத்த நிகழ்ச்சி, 'குற்றங்களை அறிக்கையிடும் நிகழ்ச்சியாகும்' என்று ரெபெக்காள் அறிவித்தாள். இது ஒவ்வொரு இரவும் 8.00மணி முதல் 9.00மணி வரை நடைபெறும். இந்த நிகழ்ச்சியில், முற்பிதாக்களில் ஒருவர், உயிர்தெழுப்பப்பட்ட மக்களிடையேயான தீவிர விவாதங்களுக்கு நடுவராகச் செயல்படுகின்றார். மேலும் பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களுக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களின் ஒப்புக்கொள்ளுதலையும், மனஸ்தாபப்படுதலையும் முற்பிதாக்கள் எப்படி கையாளுகிறார்கள் என்பதனை இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பார்க்கிறோம். ஜனங்களின் முன் நேர்மையாக இருக்க விரும்புவோருக்கு இது ஒரு நல்ல நிகழ்ச்சியாகும் மற்றும் நமது சொந்த வாழ்க்கை சூழ்நிலைகளுக்கு அவர்களின் உதாரணங்களைப் பார்ப்பது நமக்கும் நல்லது" என்று ரெபெக்காள் விவரித்தாள்.

உயிர்த்தெழுந்து வந்தவர்களில் ஒருவரான சாமிக்கும் (Sammy) மற்றும் அவரது வாழ்க்கை சம்பந்தப்பட்ட பல்வேறு நபர்களுக்கிடையேயும் நடந்த விவாதங்களை யாக்கோபு மத்தியஸ்தம் செய்ததைப் பார்த்தபோது, அடுத்த ஒரு மணி நேரம் விரைவாக முடிந்தது. சாமி நான்கு முறை திருமணம் செய்து கொண்டவர், மேலும் பன்னிரண்டு மகன்களைப் பெற்றவர், இவர்கள் அனைவருமே அநேக காரியங்களில் மோதல்களோடும் மற்றும் பொறாமையோடும் இருந்தனர். அவரின் முதல் இரண்டு மனைவிகளான லிண்டா மற்றும்

நாஒெட் இருவரின் மூலமும் எட்டு மகன்கள் இருந்தனர், இருவரும் விவாகரத்து கோரி இருந்தனர். அவரது மூன்றாவது மனைவி ஈவா பெருங்குடல் புற்றுநோயால் இறக்கும்போது, ஈவாவின் இரண்டு மகன்களும் சிறியவர்களாய் இருந்தனர். ஷோஷோனா, ஈவாவின் இளைய சகோதரி, இன்னுமாக சாமியின் நான்காவது மனைவியானார், அவர்களுக்கும் இரண்டு மகன்கள் இருந்தனர்.

சாமி முந்தைய வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் மற்றும் மோதல்களால் பெருங்கவலை கொண்டிருந்தார். நான்கு மனைவிகள் மற்றும் பன்னிரண்டு மகன்களுடனான தனது கடந்தகால அனுபவங்களில் காணப்பட்ட கலகம், போட்டி மற்றும் அவருடைய சொந்தக் குடும்பத்தினரிடையே இருந்த மனக்கசப்பு குணமடைய வேண்டும் என்ற காரணத்திற்காக சாமி யாக்கோபை அணுகி இருந்தார். சாமியின் குடும்பத்தினர்களுடைய தவறுகளை அவர்கள் ஒப்புக்கொள்ளும் விஷயத்திலும், மன்னிப்புகோரும் விஷயத்திலும், மற்றும் ஒப்புரவாகுவதற்கான விஷயத்திலும் முற்பிதாவாகிய யாக்கோபால் அந்தக் குடும்பத்திற்கு ஞானமான அறிவுரைகளை அளித்து வழிநடத்த முடிந்தது.

லெவ்விற்கு இந்த நிகழ்ச்சி மிகவும் சுவாரஸ்யமானதாக இருந்தது. இந்த நிகழ்ச்சியானது அவன் அனுமானித்திருந்த சிக்கலான உணர்ச்சிகள் மற்றும் மோதல்கள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையின் ஒளியை அவனுக்குக் கொடுத்தது. அவர்கள் நிகழ்ச்சியைப் பற்றி விவாதித்தனர், விரைவில் அனைவரும் லெவ்வின் வீட்டிலிருந்து புறப்பட வேண்டிய நேரம் வந்தது.

"கவலைப்பட வேண்டாம், லெவ் மாமா, நாங்கள் அனைவரும் இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில்தான் இருக்கிறோம்" என்று ஆனி

மாமாவைத் தழுவியபடி கூறினாள். ஜேக், ரேச்சல் மற்றும் ஆலன் ஆகியோர் லெவ்வைத் தழுவி, பின்னர் தங்கள் வீடுகளுக்குத் தங்கள் சைக்கிள்களில் செல்வதற்காகக் கதவைத் திறந்து வெளியே வந்தனர்.

எல்லோருக்கும் கடைசியாக ரெபெக்காள் வெளியேறினாள். அவள் புன்னகைத்து, லெவ்வை அணைத்துக் கொண்டாள். ஆனால் லெவ் அவளைப் போக விடவில்லை.

"என்னுடன் இரு, ரெபெக்காள். நான் உன்னுடன் நிறைய பேச விரும்புகிறேன். அநேக காரியங்கள் எனக்குப் புரியவில்லை. நீ இங்கேயே இருந்தால் என் சிந்தையைத் தெளிவாக்க முடியும், மேலும்...." என்று லெவ் கெஞ்சினான்.

ரெபெக்காள் தன்னை விலக்கி, லெவ்வின் உதடுகளுக்கு மேல் விரலை வைத்தாள்.

"ஷ்ஷ்ஹ், கொஞ்சம் அமைதியாக இருங்கள் லெவ், நான் உங்களுடன் தங்க விரும்புகிறேன். ஆனால் என்னால் முடியாது. நாளை நாம் ஒன்றாக நேரம் செலவிடும் வரை கண்டிப்பாகக் காத்திருக்க வேண்டும். நான் உங்களைக் காதலிக்கிறேன்...." என்று ரெபெக்காள் மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

என்ன நடந்தது என்று லெவ் உணர்வதற்குள், ரெபெக்காள் அவன் கன்னத்தில் முத்தமிட்டு விரைவாக கதவுக்கு வெளியே சென்றாள், ஒருகணம் அவளது குறும்புத்தனத்தையும், அதே கணத்தில் அவளால் நிராகரிக்கப்பட்டதையும் உணர்ந்தான். தன் அருகில் ரெபெக்காள் இருக்க வேண்டும் என்று ஏங்கினான். அவன் தன்னுடைய அமைதியான வீட்டில் சுற்றித் திரிந்து, தனக்குத் தானே பேசத் தொடங்கினான்.

"இந்தப் புதிய பூமி, ரெபெக்காளை எனக்குத் திருப்பிக் கொடுத்தது, ஆனாலும் அவளை என்னிடம் இருந்து விலக்கிவைக்கிறது.

இந்தப் புதிய பூமி என் மகனையும், என் சகோதரனையும், ரேச்சலையும் எனக்குத் திருப்பிக்கொடுத்துள்ளது. என் கையையும் திரும்பக்கொடுத்துள்ளது" என்று எண்ணியவாறே லெவ் குளியலறையைக் கடந்தான். அவன் கண்ணாடியில் தன் தோற்றத்தைப் பார்த்தான். "இந்தப் புதிய பூமி எனக்கு நேரான பற்களையும், அதிகமானவற்றை நினைவில் கொள்ளக்கூடிய நினைவாற்றலையும் கொடுத்துள்ளது" என்று சிந்தித்தவாறே லெவ் தனது படுக்கையறையை அடைந்தான். "தன்னால் யோசித்துப் பார்க்க முடியாத ஞாபகங்களையும், தன்னால் கேட்பதற்குத் தைரியமற்ற கேள்விகளையும் இந்தப் புதிய பூமி கொடுக்கிறது" என்று லெவ் எண்ணினான்.

லெவ் தனது படுக்கையில் முகம் குப்புறவிழுந்து தனக்குத்தானே அமைதியாகப் பின்வருமாறு பேசிக் கொண்டு இருந்தான்:

"எனது பழைய வாழ்க்கையில் நடந்த சில விஷயங்களை நான் வெறுக்கின்றேன். ஆனால் கர்த்தாவே, நீர் எனக்கு ஒரு புதிய வாழ்க்கையை அளித்துள்ளீர். நீர் எனக்கு ஜீவன் கொடுத்திருக்கிறீர். என்ன சொல்வது அல்லது என்ன யோசிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் உமக்கு எதையும் கொடுத்ததில்லை, நீர் எல்லாவற்றையும் எனக்குக் கொடுத்துள்ளீர்" என்று லெவ் தன் உள்ளத்திலிருந்து ஜெபித்தான்.

லெவ்வின் மனம், அன்றைய தினத்தில் நடந்த கலந்துரையாடல் களையும், அவன் நேசித்த குடும்பத்தினருடன் இருந்தபோது உண்டான மகிழ்ச்சியையும் எண்ணிப்பார்த்தது. எதிர்பாராமல் மீண்டும் அவன் நினைவில் வந்த வேதவாக்கியங்களை எண்ணி, லெவ் ஆறுதலடைந்தான்.

"கர்த்தாவே, ஒருவேளை நீர் முன்பே என்னுடன் இருந்து, என்ன நடக்கப்போகிறது என்பதற்கான குறிப்புகளையும் எனக்குக் கொடுத்திருப்பீர், ஆனால் நான்தான் கேட்டிருக்கமாட்டேன்...." என்று லெவ் தன்னைக் குறித்து சுயபரிசோதனை செய்தான்.

பழைய உலகத்தில், மேசியா எனும் பெயரைக் கேட்கும்போதே லெவ்விற்கு எதிர்க்கும் உணர்வுகளும் மற்றும் அவனுடைய மக்களின் பாரம்பரியங்களுமே நினைவுக்கு வந்தது. ஆனால் தற்பொழுதோ, "மேசியா" என்ற வார்த்தையானது சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு என்ற மனிதனின் படத்தை அவனது சிந்தைக்குத் தெளிவாகக் கொண்டுவந்தது. மேசியாவை ஏற்க மறுத்த உணர்வும், அதனால் உண்டான வருத்தமும் அவனுக்குள் போரிட்டன. முன்பு ஒரு தருணத்தில் தனது இருதயத்தை ஆட்கொண்ட அதே விநோதமான சுத்திகரிக்கும் ஒரு துக்கத்தை, இப்போதும் லெவ்வினால் உணர முடிந்தது.

யூதர்களின் நம்பிக்கையின் மையமாக மேசியா இருந்தார் என்பதை லெவ் அறிந்திருந்தான். மேலும் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய தங்களது மேசியாவை யூதர்கள் நிராகரித்தார்கள் என்பதை லெவ் உணரத்தொடங்கினான். இந்தப் புதிய உலகத்தில் கிடைத்த இரண்டாவது தருணத்தில், லெவ் பிடிவாதமாக இருக்கப்போவதில்லை. அவரை ஏற்றுக்கொள்வதற்கும், கீழ்ப்படிவதற்கும் தயாராக இருந்தான். மேசியாவின் வல்லமையின் சான்றுகள் எல்லா இடங்களிலும் வெளிப்பட்டன. பின்பு லெவ் ஆழ்ந்த உறக்கத்திற்குள் சென்றான்.

***

***"சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா 2:3)***

# அத்தியாயம் - 5

அடுத்த நாளின் பொழுது விடிந்தபோது, இயல்பாகவே விழித்துக் கொண்டதை உணர்ந்து லெவ் தனக்குள்ளே ஆச்சரியப்பட்டான். முன்பெல்லாம் அலாரத்தினை அணைத்துவிட்டு தூங்குவதில் வல்லவன் என்று பெயர் பெற்றிருந்த லெவ் ஆரோன் விரைவாகப் படுக்கையில் இருந்து எழுந்தான். பின்பு குளித்துவிட்டு, தனது தோட்டத்திற்கு வெளியே நடந்துசென்றான். அவனது முந்தைய வாழ்க்கையின் எந்தவொரு காலைப்பொழுதையும் விட, இந்த நாளில் 7 மணிக்கு முன்பாகவே நிறைய காரியங்களை அவன் வெற்றிகரமாக முடித்திருந்ததை நினைத்தபோது அவனுக்கே சிரிப்பு வந்தது. அவன் தனது சொந்த தோட்டத்தில் இருந்து பழங்களையும், காய்கறிகளையும் சேகரித்ததில் மகிழ்ந்தான். மேலும் லெவ் சுவையான எளிய காலை உணவினை ருசித்தான்.

லெவ் தனது வீட்டை விட்டு வெளியேறி, முந்தைய நாளின் மாலையில் ரெபெக்காளும், ஆலனும் சென்ற அதே சாலையில் நடந்தான். பலர் அதே திசையில் நடந்து கொண்டிருந்தனர். உயிரோடு இருப்பதில் மகிழ்ச்சியுடனும், ஒரு புதிய நாளைப் பற்றிய மிகுந்த ஆர்வத்துடனும் லெவ் சுறுசுறுப்பாக நடந்தான். தனக்கு முன்னால் இருந்த அந்த நபர்களின் வேகத்திற்கு ஈடு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் திடீரென்று வந்தபோது லெவ் ஆச்சரியப்பட்டான். வழக்கமாக அவன் தனிமையில் இருப்பதையே விரும்புவான். ஆனால் இன்று அவர்களுடன் பேச வேண்டும் என்பதுபோல் உணர்ந்தான். லெவ் ஒரு சில அடிகள் முன்னேறி அவர்கள் அருகே வந்தான்.

“ஷாலோம்! நான் உங்களுடன் சேர்ந்துகொள்ளலாமா?” என்று மூச்சு வாங்கியபடி லெவ் கேட்டான்.

“ஷாலோம்! நிச்சயமாக... நாம் இதுவரை சந்தித்துக் கொண்டதில்லையே” என்றார்கள்.

“ஓ, ஆமாம்!- என் பெயர் லெவ் - லெவ் ஆரோன்.” லெவ் தனது புதிய நண்பர்களுடன் கை குலுக்கத் தன் கையை நீட்டினான்.

“லெவ் ஆரோன்.... நீங்கள் உயிர்த்தெழுந்து வருவீர்கள் என்று உங்கள் குடும்பத்தினர் கூறியதுபோல நீங்கள் வந்து விட்டீர்கள்” என்று ஒரு பெண் சொன்னாள்.

“ஆமாம்! சரியான நேரத்தில்தான்” என்று ஒரு இளைஞன் கூறினான்.

“நீங்கள் அந்தப் பக்கம் உள்ள சாலையில் தானே வசிக்கிறீர்கள்?” என்று அவர்களில் ஒருவர் கேட்டார்.

“உங்கள் குடும்பத்தினர் உங்களுக்கான வீட்டைக் கட்டுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம்” என்று இன்னொருவர் கூறினார். லெவ் தன்னைப்பற்றின பல தகவல்களை அவர்கள் கூறக் கேட்டான்.

“ரெபெக்காள் தானே உங்களது மனைவி மற்றும் ஆலன் தானே உங்களது மகன்... உங்கள் குடும்பம் நல்லதொரு குடும்பம்....” என்று கூறினார்கள்.

அவர்கள் எல்லோருடைய அக்கறையானது, தன்னைப்பற்றின அனைத்தையும் அவர்கள் தெரிந்திருப்பார்களோ என்ற சந்தேகத்தை லெவ்விற்குக் கொடுத்தது.

“என் காலணியின் அளவைக்கூட, நீங்கள் அறிந்திருப்பீர்கள் போல” என்று லெவ் சற்று எரிச்சலுடன் கூறினான்.

அவனைச் சூழ்ந்திருந்த மக்கள் சிரிப்பை அடக்க முடியாமல் நின்றார்கள். “இல்லை, உண்மையில் உங்கள் காலணியின் அளவு

எனக்குத் தெரியாது, நல்ல செய்திகள் இங்கே வேகமாகப் பரவுகிறது" என்று அந்த இளைஞன் பதிலளித்தான். பின்பு சற்று நிறுத்தி, "சரி, காலை வழிபாட்டில் நீங்கள் எங்களுடன் சேரப் போகிறீர்களா?" என்று கேள்வியாகவும், அழைப்பாகவும் அமையும் விதத்தில் கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன்...." என்று ஒன்றும் புரியாமலேயே லெவ் பதிலளித்தான். ஆர்வம், பரவசம் மற்றும் தயக்கம் போன்ற உணர்வுகளின் கலவையை அவன் உணர்ந்தான், இந்த உணர்ச்சிகளின் கலவைகள் பழக்கப்பட்ட ஒன்றாக அவனுக்கு மாறத் தொடங்கினது.

## முன்பு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவரான ஜான்

"ஹலோ லெவ், நான் ஜான்." அகலமான முகத்துடன், மெல்லிய பொன்னிற கேசத்துடன் ஓர் இளைஞன் லெவ்விடம் கை கொடுத்தான். லெவ்விற்கு ஏற்பட்ட அசௌகரியத்தை அவன் உணர்ந்தான். அந்த உணர்வைக் குறைக்க முடியும் என்ற நம்பிக்கையில் உற்சாகமான குரலில் அவன் பேசத் தொடங்கினான். "உண்மையில் நீங்களும், நானும் ஒருவருக்கொருவர் பரிச்சயமற்றவர்கள்தான் ஆனாலும் ஒன்றாக நடக்கிறோம்! நிச்சயமாகவே இப்படி நடப்பது ஒரு நல்ல உணர்வைத் தருகிறது. இந்த உணர்வினை இழக்க நான் விரும்பவில்லை" என்று ஜான் கூறினான்.

லெவ் தனது புருவங்களை உயர்த்தி, தன் நடையின் வேகத்திற்கு ஈடுகொடுத்து, தன் அருகே வந்து தன்னிடம் பேசிய மனிதனைப் பார்த்தான்.

"நீங்கள் லெவ்விற்கு ஒரு சிறிய அறிமுகத்தைக் கொடுத்தால், அவரால் உங்கள் உற்சாகத்தைப் புரிந்துகொள்ளமுடியும்" என்று இளம்பெண் ஒருவள் புன்னகையுடன் பரிந்துரைத்தாள்.

"நல்ல யோசனை, மார்ஷா, நன்றி" என்று கூறி ஜான், லெவ்வைப் பார்த்தான். நான் கூறுவது உங்களுக்கு நகைச்சுவையாகத் தோன்றும். ஆனால் நான் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் உண்மையானவைகளே. "பாலஸ்தீன கிளர்ச்சியில் என் முதுகெலும்பில் குண்டு துளைத்து காயமடைந்தேன். என்னுடைய கழுத்தில் இருந்து பாதம் வரை செயல்படமுடியாது அதனால் முடங்கினேன்" என்று ஜான் விவரித்தான்.

ஜான் கூறியதைக் கேட்டு, லெவ் தனது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான். மேலும் ஜான் தன்னோடு நட்போடு பழக முயற்சித்ததையும், தான் அவனிடம் கடுகடுப்பாக நடந்து கொண்டதையும் நினைத்து லெவ் வெட்கமடைந்தான்.

பழைய உலகில், கசப்பான மற்றும் கோபமான மனிதனாக தான் எப்படி இருந்தான் என்பதையும் ஜான் விவரித்தான். பக்கவாதத்தின் காரணமாக மற்றவர்களை முழுமையாக சார்ந்திருப்பதை அவமானமாகவும், இழிவானதாகவும் மற்றும் பெரும் சுமையாகவும் நினைத்தேன் என்றான்.

"அந்த நாட்கள் என் வாழ்க்கையின் இருண்ட நாட்களாக இருந்தன. இனி முற்றிலுமே பிரயோஜனமற்றவனாகவும், எப்போதுமே மற்றவர்களுக்குச் சுமையாகவும் நான் என்னைக் கண்டேன். என்னால் என் மூக்கைக்கூட சொரிய முடியவில்லை. என் வாழ்க்கையை முடித்துக்கொள்ள விரும்பினேன்" எனறு ஜான் கூறினான்.

"மனநோயாளி ஆகாமல் எப்படி இருந்தீர்கள்?" என்று லெவ் வினவினான்.

"ஒரு நாள் இந்த எண்ணம் என் உள்ளுணர்வில் தோன்றியது. என் உடலைப்போலவே என் குணமும் முடங்கிப் போய்விட்டது என்பதை உணர்ந்தேன். எனது உடல் இயக்கத்தையோ அல்லது ஒருங்கிணைப்பையோ

பெற என்னால் ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் என் சிந்தையை செயலிழக்கச் செய்திருந்த கோபம் மற்றும் எதிர்மறையான எண்ணங்களை ஏதாவது செய்ய வேண்டும் என்று உணர்ந்தேன். எனவே நான் குணலட்சணத்தினை வலிமை பெறச் செய்யும் பயிற்சியினை செய்யத் துவங்கினேன்'' என்று ஜான் பதிலளித்தான்.

''குணலட்சணத்தினை வலிமை பெறச் செய்யும் பயிற்சியா....?'' என்று லெவ் கேட்டான்.

''என்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் நல்லது அல்லது அழகான ஏதோ ஒன்றைத் தேடுவதன் மூலம், நான் என் பார்வையை மேம்படுத்தினேன். நகைச்சுவையான கதைகளின் நாடாக்களை (Tapes) உருவாக்கி மக்களைச் சென்றடைவதற்கான வழிகளைக் கண்டறிவதன் மூலம் எனது மனதின் கரங்களை நீட்டினேன். அதிலும் குறிப்பாக என்னைக் கவனித்துக் கொள்பவர்களிடத்தில் விடாமுயற்சியுடனும், பொறுமையுடனும் இருக்கும் எனது ஆற்றலை வளர்ப்பதன் மூலம் மனதிற்குப் பயிற்சியளித்தேன். உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும் என நினைக்கின்றேன். எனது கண்ணோட்டத்தை மாற்றியதன் மூலம், காலப்போக்கில் இவைகள் வேலை செய்தன. அவ்வப்போது நான் மனச்சோர்வு அடைந்து கொண்டுதான் இருந்தேன். ஆனால் என் மனநிலை படிப்படியாக மாறியது. மேலும் படிப்படியாக மீண்டும் என் வாழ்க்கை வாழத் தகுதியானதாக மாறியது'' என்று ஜான் விளக்கினான்.

''ஆஹா! என்று லெவ் சத்தமிட்டான், இந்த ஒரு வார்த்தையை மாத்திரமே லெவ்வால் சொல்லமுடிந்தது. கேட்கவே அற்புதமாக இருக்கிறது!'' என்று பிற்பாடு கூறினான்.

''சில ஆண்டுகளுக்குப் பிறகு நான் இரத்தப் புற்றுநோயால் இறந்து விட்டேன். பின்பு எனக்கு நினைவிலிருக்கும் காரியம், நான்

உயிர்த்தெழுந்த நாள்தான். நான் படுக்கையில் இருந்ததும், என் கால் விரல்கள் ஏன் அசைகின்றன என்று நான் ஆச்சரியப்பட்டதும்தான். இந்தப் புதிய உலகில் என்னுடைய புதிய வாழ்க்கையின் முதல் நாளில் நீங்கள் என்னைப் பார்த்திருக்க வேண்டும்!" என்று ஜான் கூறினான்.

அந்த இளைஞன்(ஜான்), அவனது தோட்டத்தைச் சுற்றி குதிப்பது, சத்தமிடுவது மற்றும் வெறுங்காலுடன் ஓடுவது போன்றவற்றை லெவ் கற்பனை செய்து பார்த்தான்.

"இங்கே பாருங்கள்" என்று ஜான் அமைதியாகக் கூறினான். பின்பு சில அடிகள் முன்னால் ஓடி, மூன்று முறை குட்டிக்கரணம் அடித்துச் சுழன்றான். பிறகு ஒரு காலை ஊன்றியபடியும், இரு கரங்களையும் இரு புறங்களில் நீட்டியபடியும், தன்னுடைய கண்களில் வெற்றிக் களிப்புடன் காட்சியளித்தான். "லெவ், கிறிஸ்துவின் வல்லமை நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்று ஜான் வினவினான்.

லெவ் அடக்க முடியாமல் சிரித்தான். ஜானின் குழந்தைத்தனமான நன்றியுணர்வையும், உற்சாகத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது; இருந்தாலும் அவனால் இவற்றை "கிறிஸ்துவின் வல்லமையோடு" தொடர்புபடுத்திப் பார்க்க முடியவில்லை.

ஜான் தன் கால்களைக்கொண்டு காண்பித்த வித்தையை நிறுத்திவிட்டு, சாதாரணமாக லெவ்வோடு இணைந்து நடக்கத் தொடங்கினான். "நாம் வழிபாட்டு ஆராதனை நடக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம்," என்று ஜான் கூறினான்.

## லெவ்வின் முதல் வழிபாட்டு ஆராதனை

அவர்கள் ஆராதனை ஸ்தலத்தை நெருங்கியதும் லெவ் கவனித்த முதல் விஷயம், நால்வர் குழுவால் இசைக்கப்பட்ட இசை,

மெய்மறக்கும் வகையில் காற்றை நிரப்பியிருந்தது. நாற்காலிகளிலும் மற்றும் பெஞ்சுகளிலும் கிட்டதட்ட நாற்பது பேர் அமர்ந்திருந்த ஒரு பெரிய முற்றத்திற்குள் அவர்கள் நுழைந்தார்கள். லெவ் மகிழ்ச்சியாக இருந்தான் மற்றும் ரெபெக்காளையும், ஆலனையும் கண்டதில் நிம்மதியடைந்து, அவர்களுக்கு நேர் பின்னால் அமர்ந்தான்.

ஆராதனை நடத்துபவர்கள் இருதயத்திலிருந்து பாடிய *சங்கீதம்* **145-**இன் வார்த்தைகளைத் தெளிவாகக் கேட்டான்.

***"கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர், அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின் மேலுமுள்ளது.***

***கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்தரிப்பார்கள்.***

***மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது இராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு;***

***உமது இராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக்குறித்துப் பேசுவார்கள்..."***

ஆராதனை நடத்துபவர்களின் வார்த்தைகளும், இசையும் லெவ்வைத் தொட்டன. மேலும் ஜேக், ரெபெக்காள் மற்றும் அவனது குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இந்தப் புதிய உலகத்தைக் குறித்து ஆர்வத்தோடு பகிர்ந்திருந்த விஷயங்கள் லெவ்வின் நினைவுக்கு வந்தது.

ஒருவர் எழுந்து *சங்கீதத்திலிருந்து* சில வசனங்களை வாசித்தார்.

***"கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.***

***"எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.***

*நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்."*

இந்த வார்த்தைகளை ஆராதனை நடத்துபவர் கூறியபோது, மனதை விழித்தெழப்பண்ணி, சரீரத்தை மீண்டும் புத்துயிர் அடையச் செய்து, வயதான செயல்முறையை மாற்றியமைக்கும் ஏதேனின் பழம்குறித்து அவனது குடும்பம் அவனிடம் கூறி இருந்தது லெவ்வின் ஞாபகத்திற்கு வந்தது. தேவனையும் மற்றும் முற்பிதாக்களையும் ஏற்றுக்கொண்ட தேசங்களுக்கு மாத்திரம் அந்தப் பழம் கிடைக்கும் என்று அவனது குடும்பம் அவனிடம் கூறி இருந்ததைக் குறித்தும் லெவ் நினைத்துப்பார்த்தான். அது தேவனிடமிருந்து வந்தது, அவர் தமது கையைத் திறந்து தமது மக்களின் வாஞ்சையைத் திருப்தியாக்குகின்றார் என்பதை லெவ் தொடர்புபடுத்திப் பார்த்தான்.

ஆராதனை நடத்துபவர், லெவ்வுக்கு அறிமுகமில்லாத இன்னும் சில வசனங்களைத் தொடர்ந்து வாசித்தார்.

"*மரித்தோர், தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது, அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்."*

"தேவகுமாரன்" என்ற வார்த்தையால் லெவ் தன்னை இறுக்கமாக உணர்ந்தான். மேலும் சபையார் மீண்டும் பாடலில் இணைந்தபோது அவன் தரையையே பார்த்துக்கொண்டிருந்தான்.

லெவ், ஆராதனை நடத்துபவர்களைக் கவனித்தான். அந்த இடம் கிறிஸ்துவை தங்களது மேசியாவாகப் பாடித் துதித்த யூத சகோதர சகோதரிகளால் நிறைந்திருந்தன. கிறிஸ்துவை அவர்கள் தேவனுடைய அன்புடனும் மற்றும் அனைத்து தேசங்களும் விரும்பியதை நிறைவேற்றுவதுடனும் தொடர்புபடுத்தினர், அது அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. மேசியாவைப் பற்றிய தங்களது முந்தைய

நாள் விவாதத்தில், "அவர் நமக்கு எதிராகக் குற்றம் சுமத்த நம்மை மீட்கவில்லை, மாறாக நம்மை விடுவிக்கவே மீட்டார்" என்ற ஜேக்கின் வார்த்தைகளை லெவ் நினைவு கூர்ந்தான்.

ஆர்வம், பரவசம், அங்கீகரிப்பு போன்ற பழக்கமான முப்பரிமாண உணர்வுகளையும் அதே சமயத்தில் உள்ளான எதிர்ப்பையும் லெவ் உணர்ந்தான். அவனுக்குள் இந்த உணர்வுகள் ஊசலாடத் தொடங்கின. லெவ் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான், மேசியாவின் மீதான முரண்பாடான எண்ணங்கள் மாறத் தொடங்கின. அவன் தனது இருதயத்தில் மேசியாவை ஏற்றுக்கொள்ளுவதையும் மற்றும் நன்றியுணர்வு அதிகரிப்பதையும் கண்டான். பழைய உலகில் மேசியாவின் உதவியின்றி, தனது விரக்தியிலிருந்து வெளியேறிய ஜானைப் பற்றி அவன் நினைத்தான். அவர் நேர்மறையான சிந்தனையைப் பயன்படுத்தி இருந்தாலும், அது ஜானின் பிரச்சனையை முழுவதுமாகத் தீர்க்கவில்லை. நிச்சயம் மேசியா மட்டுமே ஜானுக்கு விரக்தியின் ஆழத்திலிருந்தும், கடுந்துயரத்திலிருந்தும், இன்று அவர் காணும் தடையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க முடியும். அன்பும், சர்வவல்லமையும் உள்ள ஒருவரால் மட்டுமே இதுபோன்ற அற்புதமான காரியங்களைச் செய்யமுடியும். மேலும் "எனக்கு மேசியாவையும் மற்றும் இந்தப் புதிய வாழ்க்கையையும் புரிந்துகொள்ள உதவுங்கள்...." என்று லெவ் ஜெபித்தான்.

ஆராதனை முடிந்ததும், லெவ் எழுந்து குழப்பத்தோடே கதவை நோக்கி நடந்தான்.

"ஹாய், லெவ், நீங்கள் இங்கேயா இருக்கின்றீர்கள்! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்ற ரெபெக்காளின் குரல் அவனை மீண்டும் நிகழ்காலத்திற்குள் இழுத்தது.

"மறக்கமுடியாத - ஆராதனை, ஓ! - வித்தியாசமாக இருந்தது - எனக்குப் பிடித்திருந்தது - ஆனால் குழப்பமாகவும் இருக்கிறது" என்று லெவ் அவனது வார்த்தைகளில் தடுமாறினான்.

அவன் ரெபெக்காளின் கண்களில் தெரிந்த புரிந்து கொள்ளுதலைக் கண்டு ஆறுதல் அடைந்தான். "நீ ஏன் ஆராதனையைப் பற்றி என்னிடம் சொல்லவில்லை?" என்று லெவ் அவளிடம் கேட்டான்.

ரெபெக்காள் அவனுக்குப் பிரதியுத்திரமாக "எனக்கு நன்றாகத் தெரியும், அன்பே, நான் உங்களை இங்கே வரச் சொல்லியிருந்தால், நீங்கள் வருவதற்கு மறுத்திருப்பீர்கள். சாலையில் உள்ள உங்கள் அயலகத்தாரிடமிருந்து நீங்கள் அதைப்பற்றி கேள்விப்படுவீர்கள் என்று நான் உறுதியாக நம்பினேன்." லெவ் தனது மனைவி தன்னைப் பற்றி எவ்வளவு நன்றாய் அறிந்திருக்கிறாள் என்று எண்ணி புன்னகைத்தான்.

லெவ்விற்கு திடீர் திடீரென்று உணர்வுகள் மாறும்போதெல்லாம் அவனை அமைதிப்படுத்தும் அந்தத் தேநீரை நினைவு கூர்ந்தவனாக, "எனக்கு இப்போது அந்தத் தேநீர் தேவைப்படுகிறது" என்றான்.

"ஓ! நீங்கள் அந்தத் தேநீரை கவனித்துள்ளீர்களா? நாங்கள் அதை 'உயிர்த்தெழுதல் தேநீர்' என்று அழைக்கிறோம் - அந்தத் தேநீர் அனைவருக்கும் நல்லது என்றாலும் கூட, குறிப்பாக உயிர்த்தெழுப்பப் பட்டவர்களுக்கே நல்லது; அவர்கள் இந்தச் சூழ்நிலைக்கு ஒத்துப்போவதற்கு எடுத்துக்கொள்ளும் காலப்பகுதிகளில் உதவியாக இருக்கும். 'இந்தத் தேநீர், பன்னிரண்டு விதமான பழங்களைக் கொடுக்கிற மரங்களின் இலைகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது, இந்த மரங்கள் ஒவ்வொரு மாதமும் அதன் பழங்களைத் தருகின்றன: மேலும் அதன் இலைகள் தேசங்களைக் குணப்படுத்துவதற்கு உதவுகிறது.'

உயிர்த்தெழுதல் தேநீர் மற்றும் ஏதேனின் பழங்கள் இணைந்த கலவையானது உணர்ச்சிகளின் ஆற்றலை சமநிலைப்படுத்துவதில் சிறந்தது" என்று கூறி ரெபெக்காள் புன்னகைத்தாள்.

"வணக்கம், அப்பா!" என்று ஆலன் குறுக்கிட்டான். "ஆராதனை அருமையாக இருந்தது அல்லவா, அப்பா!" என்று கூறி அவன் தன் தந்தையை அணைத்தான்.

ஆராதனையில் தன் மகன் ஆர்வமாக இருப்பதைப் பார்த்து லெவ் மகிழ்ந்தான்.

"நாம் காலை உணவை உங்கள், வீட்டிலேயே உண்ணலாம். பின்னர் ஜேக் மற்றும் ரேச்சல் வந்தவுடன் நாம் அனைவரும் நீங்கள் அடிக்கடிச் செல்லும் பழைய இடங்களுக்குச் சென்று, அவைகள் எப்படி மாறிவிட்டன என்பதை நீங்கள் பார்க்கலாம்" என்று ரெபெக்காள் பரிந்துரைத்தாள்.

## எருசலேமிற்கு வருகை

லெவ், ரெபெக்காள் மற்றும் ஆலன் ஆகியோர் லெவ்வின் வீட்டில் தோட்டத்தினுள் இருந்த பெஞ்சில் அமர்ந்தபடி ஏதேனின் பழத்தைச் சாப்பிட்டனர். லெவ் தனது மனம் தெளிவடைவதையும், அவனது உடல் ஆற்றல் பெறுவதையும் உணர்ந்தான் - தன்னுடைய இயல்பான நன்கு பேசும் பழக்கத்தை மறுபடியும் பெறுவதை லெவ் உணர்ந்தான். "நீ சொல்வது சரிதான், ரெபெக்காள், இந்த ஏதேனின் பழத்தில் ஏதோ ஒன்று இருக்கிறது மற்றும் இது உடலியக்க அமைப்பினை சமநிலைப் படுத்துகின்றது. ஆதாமும், ஏவாளும் சாப்பிட்ட அதே உணவினை என் சொந்த தோட்டத்திலிருந்து நானும் சாப்பிடுவேன் என்று நினைக்கவில்லை" என்று கூறி லெவ் சிரித்தான். "என் முந்தைய

உணவினை நான் மறந்துவிடுவேன் என்று நீ சொன்னதும் சரிதான். சரி அது இருக்கட்டும்! நன்மை தீமை அறியத்தக்க மரம் எங்கே?'' என்று லெவ் கேட்டான்.

''அந்த மரம் உங்கள் தோட்டத்தில் இல்லை, அப்பா'' என்று ஆலன் பதிலளித்தான்.

''ஏன் இல்லை? எனக்கு ஏற்கெனவே தீமை பற்றி நிறைய தெரியும், நான் 'நன்மை' பற்றியும் நிறைய கற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டேன். அதனால் அந்த மரம் எனக்கு உதவாதா? அந்த மரம் ஏன் என் தோட்டத்தில் இல்லை?'' என்று லெவ் மறுபடியும் வினவினான்.

''காரியங்கள் இப்போதுள்ளபடி இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கின்றது, உங்களுடைய பிரச்சனை என்னவென்றால், நீங்கள் இப்போதே எல்லா பதில்களையும் தெரிந்துகொள்ள விரும்புகின்றீர்கள். அந்த மரம் தற்போது இல்லை. நீங்கள் விரைவில் அதைப்பற்றி அறிந்து கொள்வீர்கள்'' என்று ரெபெக்காள் கூறினாள்.

ஓ! அதுவும் ஓர் இரகசியமா? என்று லெவ் தனக்குள்ளே நினைத்துக்கொண்டான். உங்களுக்கு எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, அதே நேரத்தில் சிந்திக்க வைக்கும் வழிமுறையைத்தான் இந்தப் புதிய பூமியின் மக்கள் கையாளுவார்கள்.

சிறிது நேரத்தில் அழைப்பு மணி ஒலித்தது. லெவ் விரைந்து வாசலுக்குச் சென்று ஜேக் மற்றும் ரேச்சலை அணைத்து வரவேற்றான். அவன் தனது குடும்பத்தினரை வரவேற்பதில் சளைத்தவன் அல்ல என்பது தெரிந்தது. அவன் தனது இளைய சகோதரனைப் புதிய மரியாதையுடன் நடத்தினான். பழைய உலகத்தில் ஜேக் அந்தந்த பருவத்திற்கு உண்டான ஞானத்தோடு இருந்தான். ஆனால் இப்போது அவன் இன்னும் அனுபவமுள்ளவனாகவும், கனிவாகவும்,

அறிவாளியாகவும் காணப்படுகின்றான். ஜேக் ஒரு காலத்தில் லெவ்வைச் சார்ந்து இருந்தான். ஆனால் இப்போது லெவ்வுக்கு ஜேக் தேவைப்பட்டான். "இந்தப் புதிய வாழ்க்கையில் உறவுகள் மாற்றத்திற்கு உட்பட்டவை" என்று லெவ் தனக்குத்தானே நினைத்துக்கொண்டான்.

"சரி, இன்றைய திட்டம் என்ன, சகோதரனே?" லெவ் விளையாட்டாக ஜேக்கின் அடிவயிற்றில் மெதுவாக குத்தியபடியே கேட்டான்.

"எருசலேமுக்குச் செல்ல நமக்கு நேரம் இருக்கின்றது, முற்பிதாக்களில் ஒருவரைச் சந்திக்கும் அதிர்ஷ்டம்கூட நமக்கு இருக்கலாம். அதிக பார்வையாளர்கள் இல்லையென்றால், சிறிது நேரம் சந்தித்து பேசும்படியான வாய்ப்பினை வழக்கமாகத் தருவார்கள்" என்று ஜேக் பதிலளித்தான்.

"அங்கே செல்லும்போது வாய்ப்பு எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம். கடந்த சில நாட்களாக அவர்கள் மிகுதியான வேலையில் இருக்கிறார்கள், ஏனெனில் இரண்டு புதிய நாடுகள் கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழும் மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழும் வருவதற்குக் கேட்டுக்கொண்டுள்ளன" என்று ரேச்சல் கூறினாள்.

அவன் அடிக்கடி செய்வதைப்போல, மேசியாவைப் பற்றின காரியங்களை லெவ் புறக்கணித்தான், முற்பிதாக்களைக் குறித்துப் பேசுவதில் ஆர்வம் காட்டினான்.

"யாராவது ஒருவருக்கு நேரம் இருக்குமென்று நான் நம்புகிறேன்... அவர் நிச்சயம் தனிச்சிறப்பு வாய்ந்த நபராக இருப்பார் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன்" என்று லெவ் கூறிக் கொண்டிருக்கையிலேயே அக்குழு தங்களது இல்லத்திலிருந்து வெளியேறினர். "இவ்வீட்டினைப் பூட்டுவதிலுள்ள இரகசியம் என்ன?

பூட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லையே, மேலும் அதற்கான சாவியும் என்னிடம் இல்லை" என்று லெவ் கூறினான்.

"அப்பா, இந்தப் புதிய உலகில் யாரிடமும் பூட்டுகள் அல்லது சாவிகள் இருக்காது" என்று ஆலன் விளக்கினான். "இப்படித்தான் ஈக்கொல்லிகள் மற்றும் கொசுக்கொல்லி தெளிப்பான்கள் விஷயத்திலும் உள்ளது அப்பா, ஈக்கள், கொசுக்கள் மற்றும் ஜன்னல்களில் திரைச்சீலைகள்கூட இங்கு இல்லை என்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள். குற்றங்கள் இங்கு நடப்பதில்லை" என்று ஆலன் விளக்கினான்.

லெவ் தோளைக் குலுக்கினான், இந்த உலகில் திருடர்கள் இருக்க மாட்டார்கள் என்பதை இன்னமும் நம்ப முடியாதவனாக 'என்னவோ' என்று முணுமுணுத்து அலட்சியமாகக் கடந்து போனான்.

அவர்கள் நால்வரும் ஜேக்கின் சிறிய வேனில் ஏறி, பாதுகாப்பு பெல்டை அணிந்து கொண்டனர். வேன் சிறியதாக இருந்தபோதிலும் வசதியாக இருந்தது.

மோட்டார் சத்தமின்றி இருப்பதை லெவ் கவனித்தான். "புதிய உலகில் வேகத்திற்கான வரம்புகளோ அல்லது வேகத்தடைகளோ எதுவும் இல்லை என்று லெவ் எண்ணியவாறு இந்த வண்டி பறந்துவிடும் போல?" என்று அவன் கேட்டான்.

"முடியாது, லெவ். நாம் நமது வாகனங்களைக் குறைந்த வேகத்தில் இயக்குகிறோம். அவசரப்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அதனால் விபத்துகள் ஏற்படுவதற்கான அபாயங்கள் குறைந்துள்ளது. ஒவ்வொரு காரிலும் சென்சார்கள் உள்ளன, அதனால் ஏதாவது சாலையின் குறுக்கே வந்தால், வண்டி அதுவாகவே நின்றுவிடும்." ஜேக் தனது வேனின் முன்புறப்பகுதியை பழைய நண்பனைத் தட்டுவது போல மெல்லத் தட்டினான்.

"இந்தப் புதிய உலகில், யாரோ ஒருவர் எல்லாவற்றையும் பற்றிக் கருத்துடன் சிந்திக்கிறார் போல" என்று கூறி லெவ் புன்னகைத்தான்.

அவர்கள் இடைவிடாமல் தொடர்ந்து பிரயாணம் செய்து கொண்டே உரையாடலைத் தொடர்ந்தனர், சிறிது நேரம் கழித்து அவர்கள் ஒரு மலையின் உச்சியை அடைந்தனர், அங்கே இருந்து "பிரியமான நகரத்தினை" பார்க்க முடிந்தது. முழு நிலப்பரப்பும் பழத்தோட்டங்கள் மற்றும் சிறிய வீடுகளால் நிறைந்திருந்தது. அவர்கள் வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் அவ்வப்போது வழியில் சில பெரிய கட்டிடங்களைப் பார்த்தார்கள்.

"இவைகள் என்ன கட்டிடங்கள்?" என்று லெவ் பிரம்மித்துப் பார்த்துக் கேட்டான்.

"அவைகள் தொழிற்சாலைகள். எளிமையான மற்றும் மிகத் திறமையான முறைகளைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்க நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆடைகள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் அதிக அளவில் தேவைப்படும் பிற பொருட்களை நாங்கள் தயாரிக்கிறோம். பொருட்களின் தரம் உயர்ந்ததாய் இருக்கும் மற்றும் முற்றிலும் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. எதுவும் வீணாகாது" என்று ஜேக் பதிலளித்தான்.

"ஒவ்வொரு தேசமும் இஸ்ரயேலுடன் இணையும்போது, இதே நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எல்லா விஷயங்களும் பரவலாக்கப்பட்டுள்ளன. பெரிய நகரங்கள் பூங்காக்களாகவும் மற்றும் அடர்த்தியான மரங்கள் நிறைந்த சோலைகளாகவும் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் கலை, அருங்காட்சியகங்கள், சமூகத் தேவைகளுக்கான கண்காட்சிகள் மற்றும் கலாச்சார மையங்கள்

போன்ற சிறப்புத் தேவைகளுக்கு, மக்கள் சிறிய நகரங்களுக்குத்தான் செல்ல வேண்டும்" என்று ரேச்சல் கூறினாள்.

## என்னென்ன பொழுதுபோக்குகள்?

"பொழுதுபோக்குகளுக்காக மக்கள் என்ன செய்கிறார்கள்?" என்று லெவ் கேட்டான்.

"பழைய உலகத்தில் ஒரு சராசரி இல்லத்தரசி, தான் விழித்திருக்கும் நேரத்தில் கால் பகுதியை தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும், இளவயதுடையோர் ஒரு வாரத்தில் இருபது முதல் முப்பத்தைந்து மணிநேரங்கள் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் செலவழித்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா லெவ்? துரதிர்ஷ்டவசமாக நிறைய நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள் நேர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை" என்று ரேச்சல் பேசினாள்.

தான் பார்த்த நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்களை லெவ் நினைவுபடுத்திப் பார்த்தபோது ஒரு சங்கடத்தை உணர்ந்தான், மேலும் இந்தப் புதிய உலகில் அவை எப்படி முற்றிலும் பொருத்தமற்றதாக இருக்கும் என்று யோசித்தான். "நேரத்தை வீணடித்த கூட்டத்தாரில் நானும் ஒருவன் என்று நினைக்கிறேன். மேலும் நான் தொலைக்காட்சியில் எம்மாதிரியான விஷயங்களைப் பார்த்தேனென்று முற்பிதாக்களில் ஒருவரிடத்திலும் என்னால் கூற முடியாது" என்று லெவ் தன் நிலையை எடுத்துக்கூறினான்.

"இப்போது மக்கள் ஒரு நாளைக்கு மூன்று மணிநேரம் வேலை செய்கிறார்கள் - நம்முடைய எஞ்சிய நேரங்களெல்லாம் ஓய்வுதான். மக்கள் சேரக்கூடிய தன்னார்வத் திட்டங்கள் நிறைய உள்ளன. மேலும் மக்கள் தங்களது புதிய வாழ்க்கைக்குத் திரும்பிவருவதற்கு உதவுவதற்காக நாம் கற்றுக்கொள்ள நிறைய கைவித்தைகளும்,

அறிவுசார் தகவல்களும் உள்ளன. வீடுகள், மரச்சாமான்கள், ஆடைகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை மக்களை மீண்டும் வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும், பொழுதுபோகவில்லை என்று கூற வாய்ப்பே இல்லை” ஆலன் உற்சாகமாக பதிலளித்தான்.

“மேலும் ஏதேன் பழங்கள் மூலம் நமக்கு அற்புதமான நினைவாற்றல் திறன் உள்ளது. இன்னும் சில வருஷங்களுக்குள் நாம் பார்த்ததை அப்படியே நினைவில் வைத்திருக்கும் திறனை (photogrpaphic memory) நம்மால் பெற்றுக்கொள்ள முடியும். நாம் ஒவ்வொருவருமே ‘மேதை’ ஆக முடியும்” என்று ரெபெக்காள் கூறினாள்.

வாகனம் படிப்படியாக எருசலேமை நோக்கி முன்னேறியபோது, பரிசுத்த நகரத்தைக் காண முடிந்தது. 'என் நகரத்தின் மையத்தில் பழங்கால மதிற்சுவர் மாத்திரம் தனித்து நிற்கின்றதே' என்று லெவ் 'பொன்னான எருசலேம்' எனும் கவிதையின் வரிகளை உச்சரித்தான். “இந்தச் சமாதான நகரம் இன்னும் நம்முடையது” என்று லெவ் மென்மையாக வியப்பின் தொனியில் கூறினான்.

“உலகின் அனைத்து ஒருங்கிணைந்த சக்திகளாலும் இந்த நகரத்தை நம்மிடமிருந்து பறித்துக் கொள்ள முடியவில்லை. முழு உலகிற்குமான ஆசீர்வாதத்தைத் தொடங்குவதற்கான இடமாக, கர்த்தர் தமது சொந்த மகிமைக்காக பரிசுத்த நகரத்தை நமக்காகப் பாதுகாத்தார்” என்று ஜேக் தனது கருத்தினைத் தெரிவித்தான். முற்பிதாக்கள் தங்கியிருந்த கட்டிடங்களை அவன் கைசுட்டிக் காட்டினான். லெவ் சில கண்கவர் உயரமான கட்டிங்களை எதிர்பார்த்தான். ஆனால் அதற்குப் பதிலாக எளிமையான நன்கு பராமரிக்கப்பட்ட, மிக சாதாரணமான வீடுகளைக் கண்டான். போக்குவரத்து குறைவாக இருந்தது மற்றும் நடைபாதைகளில் மக்கள் கூட்டம் இல்லை.

பழைய உலகத்தில் இஸ்ரயேலில் இருந்த எருசலேமையும் மற்றும் அதன் அபாயகரமான நிலை பற்றியும் தெரிந்திருந்த லெவ் "இங்கு போலீஸ் பாதுகாப்பு இல்லையா? முற்பிதாக்கள் பயங்கரவாதத் தாக்குதல்களால் பாதிப்படையமாட்டார்களா?" என்ற கேள்வியை முன்வைத்தான்.

"அப்பா, எது உங்களை அவர்கள் பாதுகாப்பின்றி உள்ளார்கள் என்று எண்ணச் செய்தது? முற்பிதாக்களில் எவருக்கேனும் எதிராக தங்களின் ஒரு விரலையேனும் தூக்குபவர்கள் யாராக இருப்பினும் அவர்களின் நிலை வருத்தத்திற்குரியதாகி விடும் என்பதை நீங்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை. யாரையும் புண்படுத்துவதையோ அல்லது அழிப்பதையோ தடுக்கும் வல்லமைமிக்க ஆவிக்குரிய படைகள் இங்கு உள்ளன" என்று ஆலன் விளக்கினான்.

லெவ் எந்த பதிலும் சொல்லவில்லை.

அவர்கள் தகவல் மையத்தை நோக்கி வண்டியைச் செலுத்தி, அங்கே வண்டியை நிறுத்திவிட்டு, கட்டிடத்திற்குள் நுழைந்தனர். முற்பிதாக்களில் ஒருவரோடு சில நிமிடங்கள் பேச வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தினை வரவேற்பறையில் இருந்த பெண்ணிடம் ஜேக் கூறினான். அந்தப் பெண் தொலைபேசியில் பேசி விட்டு அவர்களைப் பார்த்து "நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. முற்பிதாவாகிய ஈசாக்கிற்கு நேரம் இருக்கின்றது, அவர் உங்களைச் சந்திக்க இன்னும் சில நிமிடங்களில் இங்கு வருவார்" என்று கூறி புன்னகைத்தாள்.

"அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர் தனது ஓய்வற்ற கால அட்டவணையில் இருந்து தெரியாத நபர்களைச் சந்திக்க நேரம் ஒதுக்குகிறார் என்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று லெவ் மற்றவர்களிடம் மென்மையான குரலில் பேசினான்.

“எதற்காக நீங்கள் என்னைச் சந்திக்க விரும்புகிறீர்கள்?” பின்னாலிருந்து ஒரு குரல் அவர்களிடம் பேசியது. ஈசாக்கு, ஐவர் கொண்ட அக்குழுவிடம் சென்று, ஒவ்வொருவருக்கும் அவரது வலக்கரத்தை அன்புடன் நீட்டி “ஷாலோம், நீங்கள் யார்? உங்களது பெயர்கள் என்னென்ன?” என்று கேட்டார். ஈசாக்கு ஒரு பிரபுவுக்குரிய வசீகரத்துடனும், கரு நிற தலைமுடியினையும் கொண்டவராக இருந்தார். அவரது புன்னகையைக் கண்டால் யார் ஒருவருக்குமே புன்னகை வரும்.

ஜேக் ஆவலோடு (சமயோஜித புத்தியில்) முன்வந்து பேச ஆரம்பித்தான். “என் பெயர் ஜேக்கப் ஆரோன், இவர் தற்பொழுது உயிர்த்தெழுப்பப்பட்ட எனது சகோதரன் லெவ். இவர்கள் என் முன்னாள் மனைவி ரேச்சல் மற்றும் லெவ்வின் முன்னாள் மனைவி ரெபெக்காள். இவர் லெவ் மற்றும் ரெபெக்காளின் மகனாவார். நாங்கள் நமது புதிய நாட்டை லெவ்விடம் காட்டி வருகின்றோம், நடந்தவைகள் எல்லாம் கற்பனையை விட மேலானவை என்று லெவ் நம்புவதற்கு நாங்கள் உதவ முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்”.

ஈசாக்கு புன்னகைத்தார், லெவ் உடனடியாக அமைதி அடைந்தான். “உங்களை இப்பொழுதும் மற்றும் எப்பொழுதும் இஸ்ரயேலுக்குள் வரவேற்கிறோம். எல்லா தேசங்களும் நமக்கு எதிராக வந்தபோது கடைசியாக கொல்லப்பட்டவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். நீங்கள் தைரியமாக போராடியுள்ளீர்கள். உங்களைப் போலவும், மற்ற முற்பிதாக்களைப் போலவும் நானும் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டேன்” என்றார்.

“நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், லெவ்,” என லெவ்வின் கண்களைக் கூர்ந்து நோக்கியபடி ஈசாக்கு தொடர்ந்தார்: “ஏனெனில் நானும் அவ்வாறே உணர்ந்தவனாய்

காணப்பட்டேன். கர்த்தர் தலையிட்டு நமக்கு விடுதலையை வழங்கினார். நான் இறக்கும்போது பலவீனமான, வயதான மனிதனாக இருந்தேன். உயிர்த்தெழுந்தபோது துடிப்புடனும், பரிபூரண சிந்தையுடனும், உடலுடனும் முழு ஆற்றல் நிறைந்தவனாக இருந்தேன்.''

''நாங்கள் திரும்பிவந்தபோது, உலகம் முழுவதுமாகக் குழப்பத்தில் இருந்தது. அத்தகைய நிலையில் எப்படி ஒழுங்கையும் அமைதியையும் கொண்டு வருவது என்பதை எங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. நாங்கள் அதை எங்கள் சொந்த முயற்சியில் நிறைவேற்றவில்லை. இப்புதிய உலகின் மாற்றங்களுக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பாளிகள் அல்ல என்பதை நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.''

''கிறிஸ்துவும் மற்றும் அவராலே அபிஷேகம் செய்யப்பட்டவர் களும் அதிகாரத்தில் உள்ளனர் மற்றும் முழுக்கட்டுப்பாடும் அவர்களிடத்தில் உள்ளது. மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதவதற்கு, நாங்கள் இப்போது தொடர்பில் இருப்பதுபோலவே அப்போதும் கிறிஸ்துவுடனும் மற்றும் அவரால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களுடனும் அனுதினமும் தொடர்பு கொண்டோம். கிறிஸ்துவே, நமது பிரியமான நகரத்திற்கு அமைதியை மீண்டும் கொண்டுவந்தவர் ஆவார். அந்நிகழ்வு மோரியா மலையில் ஈசாக்காகிய எனக்குப் பதிலாக, தேவன் ஆட்டுக்குட்டியை வழங்கிய அதிசயத்தைக் காட்டிலும் பெரியதொரு அதிசயமாகக் காணப்பட்டது. கிறிஸ்து, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ளவராய் இருந்தபோதிலும் எங்களுடனான அவரது தொடர்புகள் கனிவுடன் இருக்கின்றது, இந்த அணுகுமுறையே அவரே ''தேவ ஆட்டுக்குட்டி'' என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றது'' என்று ஈசாக்கு கூறினார்.

தேவனுடைய மனிதனான ஈசாக்கின் முன்னிலையில் லெவ் மதிமயங்கி நின்றான். "ஜீவனுள்ளோர் தேசத்திற்கு மீண்டும் திரும்பும்படி என்னை அனுமதித்ததற்காக நன்றி" என்று லெவ் கூறினான்.

"நாங்கள் செய்ததெல்லாம் நீங்கள் திரும்புவதற்கான திட்டமிடல் மட்டுமே. ஜீவனைக் கொடுக்கும் வல்லமை கிறிஸ்துவுக்கு மட்டுமே உண்டு. அவருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்" என்று ஈசாக்கு கூறினார்.

## ஒரு புதிய தன்னார்வலர்

லெவ் தான் விசித்திரமாக ஈர்க்கப்பட்டுள்ளதையும், சேவை செய்வதற்கான ஆர்வம் தனக்குள்ளாக எழும்புவதையும் உணர்ந்தான். "நான் எப்போது தன்னார்வ வேலைக்கு முன்மொழியலாம்? எனது தந்தை மற்றும் தாயின் உயிர்தெழுதலுக்கு நான் எப்போதிருந்து முன்னேற்பாட்டினைத் தொடங்கலாம்?" என்று லெவ் கேட்டான்.

"மே25-ஆம் தேதி திரு மற்றும் திருமதி ஆரோன்கள் (பெற்றோர்கள்) உயிர்த்தெழ உள்ளனர் என்று ஈசாக்கு கூறினார். அவர்களுக்கான வீடுகளைக் கட்டுவதற்கும், அவர்களுக்கான தோட்டங்களை வளர்ப்பதற்கும் உங்களுக்குப் போதுமான நேரம் உள்ளது. மீதியுள்ள நேரத்தை நீங்கள் மற்ற வேலைகளுக்குப் பயன்படுத்த விரும்பினால், தயங்காமல் செய்யுங்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தொலைக்காட்சியில் வரும் தகவல்களைப் பார்ப்பதுதான், அதன் மூலமாகத்தான் எப்படித் தொடர வேண்டும் என்பது பற்றிய விவரங்கள் உங்களுக்குத் தெரியும்."

"மருத்துவ விடுப்புகளுக்கு இங்கே அனுமதி இல்லை" என்று கூறி கண்களைச் சிமிட்டி ஈசாக்கு புன்னகைத்தார்.

அச்சிறு குழுவினரும் சிரித்தனர். ஈசாக்கு அவர்களின் கைகளைப் பற்றி குலுக்கினார். "தேவன்தாமே உங்களை ஆசீர்வதித்து

காத்துக் கொள்வார். ஷாலோம், என் நண்பர்களே" என்று கூறி ஈசாக்கு விடை பெற்றார்.

அவர்கள் ஒவ்வொருவரும் அவருக்குத் தங்கள் "நன்றியைத்" தெரிவித்தனர். பின்பு தான் வந்த வழியாகவே சென்று இவர்கள் பார்வையிலிருந்து ஈசாக்கு மறைந்தார்.

இந்தப் புதிய உலகில் தனக்கும் ஒரு பங்கு இருப்பதையும், இந்த மாபெரும் திரும்பக்கொடுத்தலின் திட்டத்தில் தன்னுடைய பங்களிப்பின் துவக்கமானது தனது தந்தை மற்றும் தாய்க்கான முன்னேற்பாடுகளைச் செய்வதிலிருந்து தொடங்குவதையும் அறிந்து லெவ் பரவசமடைந்தான்.

"ஆஹா! இது நம்பமுடியாததாக உள்ளது!" என்று அவர்கள் பேசிக்கொண்டே வண்டியை நோக்கி நடந்தனர். ரெபெக்காளின் குரல் உற்சாகத்தால் நிரம்பி இருந்தது. "ஈசாக்கு அற்புதமான மனிதர்! முற்பிதாக்களை நான் சந்தித்த மற்ற நேரங்களைப் போலவே இப்போதும் உற்சாகமானதாயுள்ளது! நாம் அவருக்குச் சமமானவர்கள் போல அவர் நம்முடன் பேசினார். அவர் பேசினால் நான் நாள் முழுவதும்கூட கேட்டுக் கொண்டிருப்பேன்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"எல்லாவற்றையும் பற்றின அவரது ஞாபகத்திறனைக் கவனித்தீர்களா? நமது தாய் மற்றும் தந்தையின் உயிர்த்தெழுப்புதலின் சரியான தேதியை அவர் நம்மிடம் கூறினார்" என்று ரெபெக்காள் ஆச்சரியப்பட்டாள்.

"போர்க்களத்தில் எனது அனுபவத்தையும் அவர் அறிந்திருந்தார்" என்று லெவ் கூறினான்.

உற்சாகமான உரையாடலில் ஜேக் இணைந்தான். "நாம் இப்போதுதான் ஒரு பரிபூரண மனித மனதின் வேலையைப்

பார்க்கிறோம். முற்பிதாக்கள் நம்மைவிட ஒரு மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்றிருக்கின்றனர் - அவர்கள் தங்கள் முந்தைய வாழ்க்கையில் தங்களது விசுவாசத்தை நிரூபித்ததால் சரீரத்திலும், சிந்தையிலும் பரிபூரணம் அடைந்தனர். கிறிஸ்துவின் கீழ் நம்முடைய தலைவர்களாகக் கர்த்தர் அவர்களைத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சரியம் இல்லை" என்று ஜேக் கூறினான்.

முற்பிதாக்களின் வாழ்க்கை மற்றும் அவர்கள் கடந்து வந்த அனைத்தையும் பற்றிப் பேசிக்கொண்டே, தங்களது வீட்டிற்குத் அழகிய இயற்கைக்காட்சிகள் உள்ள வழியில் திரும்பிவந்தனர். உயிரினங்களால் இப்போது புத்துயிர் பெற்ற சவக்கடலையும், மாசடாவின் செங்குத்தான பாறைகளையும், பிரம்மாண்டமான கற்பாறைகளையும், ஒருகாலத்தில் வறண்ட கரடுமுரடாகக் காணப்பட்ட நிலங்களுக்குப் பதிலாக மைல் கணக்கான தூரத்தில் பழத்தோட்டங்களையும், பூந்தோட்டங்களையும், ஆங்காகங்கே சிறு வீடுகளையும் கொண்ட இயற்கைக் காட்சிகளைப் பார்த்ததில் தன்னுடைய நினைவுகளைத் தொலைத்தவனாக லெவ் வண்டியின் பின் இருக்கையில் அமர்ந்து இருந்தான்.

லெவ் தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதிலும் மற்றும் தனது பெற்றோர்களின் வருகைக்குத் தேவையான முன்னேற்பாடுகளில் உள்ள தனது பங்கைச் செய்வதிலும் மிகுந்த ஆர்வத்துடிப்போடு இருந்தான். அவன் எவ்வளவு அதிகமாக அவர்களுக்குத் தேவையானவற்றை யோசித்தானோ அவ்வளவு அதிகமாக அவர்கள் உயிர்த்தெழுப்பப்பட்ட பின்பு தன்னால் அவர்களுடன் ஒத்திசைந்து இருக்கமுடியுமா என்பதைக் குறித்தும் சந்தேகப்பட்டான். இப்படி அவனுக்கு எழும்பின சந்தேகங்களானது சற்று முன்பு, ஈசாக்கைச் சந்தித்ததாலுண்டான மகிழ்ச்சியினால் ஜெயிக்கப்பட்டது. பழைய உலகில் முற்பிதாக்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் மற்றும்

அனுபவங்களைப் பார்க்கும்போது, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கையாளுவதில் எவ்வளவு தகுதியானயவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தபோது லெவ் அதிக அளவு ஆறுதலடைந்தான்.

அத்தகைய திறமையுள்ள மனிதர்கள் பொறுப்பேற்றால், அவன் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கும் பில்லியன் கணக்கானோரின் உயிர்த்தெழுதலுடன் இணைந்துவரும் தவிர்க்கமுடியாத சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு வந்தது. ஆனால் ஹிட்லர் போன்றவர்கள் உயிர்த்தெழுந்துள்ளனறா? அத்தகையவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவது நியாயமானது என்று யார்தான் எண்ணுவார்கள்? மேலும் புதிய உலகில் அத்தகையவர்கள் வன்முறையில் ஈடுபடுபவதைத் தடுக்க எத்தகைய கட்டுப்பாடுகள் கொடுக்கப்படும்? எப்போது மற்றும் எந்தச் சூழ்நிலையில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் கிடைக்கும்? போன்ற கேள்விகளும் லெவ்விற்குள் இருந்தன.

***

*"நெரிந்த நாணலை முறியாமலும்."* (ஏசாயா 42:3)

# அத்தியாயம் - 6

மறுநாள் காலையில், புதிதாகப் பிழிந்த ஆரஞ்சு சாறு, கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அத்திப்பழங்கள், பேரிச்சை மற்றும் ஏதேனின் பழம் இவைகள் அடங்கிய எளிய காலை உணவு கொடுத்த பலத்தினாலும், மேலும் காலை ஆராதனையினால் உண்டான எழுச்சியினாலும் லெவ், ரெபெக்காள், ஆலன், ஜேக் மற்றும் ரேச்சல் ஆகியோர் லெவ்வின் வீட்டிலிருந்து தொழிற்சாலைக்குக் கிளம்பினர்.

"தொழிற்சாலை இங்கிருந்து ஓர் இருபது நிமிஷ நடைப் பயணத்தில் உள்ளது, எனவே நாம் நடந்தே செல்லலாம்" என்று கடைசியாக இருந்த ஒற்றை அத்திப்பழத்தைத் தன் வாயில் வைத்தவாறே ஜேக் கூறினான். அவன் விறுவிறுப்பாக நடந்து அக்கூட்டத்தை வழிநடத்திச் சென்றான். "லெவ், நமது காலை உணவினைத் தேர்ந்தெடுத்த விதத்திற்காக நான் உன்னைப் பாராட்ட வேண்டும். பருவ காலத்தில் வரும் ஓலாம் பழத்தைத் தேர்ந்தெடுத்ததில் உனது சாமார்த்தியம் உள்ளது. மற்றப் பழங்களும் கனியாகும் பருவத்தில் இருந்தன, ஆனாலும் இந்த ஓலாம் பழத்தினைத் தேர்ந்தெடுத்ததில் நான் ஈர்க்கப்பட்டேன்" என்று ஜேக் தனது கருத்தினை லெவ்விடம் நேரடியாகக் கூறிச் சிரித்தான்.

"இந்தப் பாராட்டுக்களை நான் மட்டுமே எடுத்துக் கொள்ளமுடியாது" என்று லெவ் சிரித்துக் கொண்டே கூறியவாறு, ஜேக்கோடு இணைந்து கொள்வதற்காக வேகமாக நடந்தான். "இந்தப் பழத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஞானத்தைக் கொடுத்தது தேவனே! எனக்கு இந்த உணவுப்பழக்கம் மிகவும் பிடித்திருக்கின்றது என்றாலும் எனக்கு அதனை விவரித்துச் சொல்லத் தெரியவில்லை. எனக்கு

இறைச்சி மீது எந்த ஏக்கமும் இல்லை. ஆனால் உங்கள் அனைவரையும்போல் நான் இன்னும் ஆரோக்கியத்தில் தேறி வரவில்லை என்று நினைக்கிறேன்", மறுபடியும் தன்னுடைய நடையை வேகப்படுத்தியதில் மூச்சுவாங்கியபடி கூறினான். முதலில் லெவ், ஜேக்கோடுகூட நடப்பதற்கு முயற்சித்தான், ஆனால் இப்பொழுதோ சற்று பின்பு வந்து கொண்டிருந்த ஆலன் மற்றும் ரேச்சலின் வேகத்திற்கு கூட ஈடு கொடுக்க முடியாமல் லெவ் தடுமாறினான்.

ஜேக் இதனைக் குறிப்பால் உணர்ந்து, தனது வேகத்தினைக் குறைத்தான். "வழக்கமாக நாம் வயிறு நிரம்பும் வரை சாப்பிடுவோம். இப்போது நாம் மனம் நிறைவாக உணரும் வரை சாப்பிடுகிறோம்" என்று ஜேக் கூறினான்.

"மனிதனுடைய உணர்வுகள் ஒவ்வொன்றையும் திருப்திப் படுத்தும் வகையில் தேவன் இந்த உணவை உண்டாக்கியிருக்கிறார்," என்று கூறி சிறிதளவும் மூச்சுவாங்குதல் இல்லாதவனாக ஆலன் இந்த உரையாடலில் இணைந்தான். "மூளைக்கு மின் இயக்கத்தை(electrical energy) வழங்குவதற்கு நம் உடலின் உயிர்வேதியியல் சமநிலையில் இருக்க வேண்டும். புலன் உணர்வுகளை மூளைக்கு எடுத்துச்செல்லும் மின் விசைகள் செயலாற்றும் போதுதான், நாம் ஜீவனுடன் இருக்கின்றோம்" என்று ஆலன் விளக்கினான்.

"அப்பொழுது நான் இறந்தபோது...." என்று லெவ் மென்மையாகக் கூறியவாறு ஆழ்ந்த சிந்தனைக்குள் போனான்.

"ஆம்! நீங்கள் மரிக்கும்போது உங்கள் புலன் உணர்வுகளை மூளைக்கு எடுத்துச்செல்லும் மின் விசைகள் நிறுத்தப்பட்டன. நம்முடைய ஞாபகத்தில் எதை வைத்து வைத்துள்ளோமோ அது மாத்திரமே பாதுகாக்கப்பட்டுள்ளது. நீங்கள் உயிர்த்தெழுப்பப்பட்ட போது உங்கள் புலன் உணர்வுகளை மூளைக்கு எடுத்துச்செல்லும் மின் விசைகளானது, புதிதாக உருவாக்கப்பட்ட உங்கள் மூளை

அணுக்களுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டன. மேலும் உங்கள் மரபணு குறியீட்டுப் படிவத்துடன் பொருந்தக்கூடிய ஓர் உடலை தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ளார்" என்று ஆலன் குறுக்கிட்டு தனது விளக்கத்தினை உற்சாகத்தோடு நிறைவு செய்தான்.

இந்த விளக்கம் லெவ்வினைக் கவர்ந்தது. "நான் மரித்தபோது, என்னுடைய புலன் உணர்வுகளை மூளைக்கு எடுத்துச்செல்லும் மின் விசைகள் நிறுத்தப்பட்டன. மேலும் அந்த நிலை எப்படி இருந்தது என்று என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து எனக்குத் தெரியும். முற்றிலும் மரித்துப்போனவனாக இருந்தேன்". லெவ் ஆழ்ந்து சிந்தித்த போது '***மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்***' (***பிரசங்கி*** 9:5) என்ற வேதத்தில் உள்ள வசனம் அவனுடைய நினைவுக்கு வந்தது. "மேலும் என் மனம் முன்பு எப்போதும் இருந்ததைவிட இப்போது உயிரோட்டத்துடன் உள்ளது. எனது முந்தைய ஆண்டுகளில் நான் ஒரிரு முறை மட்டுமே கேட்ட வசனங்கள் கூட நினைவில் வருகின்றன..." என்று லெவ் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டான்.

"நேரம் செல்லச் செல்ல, உங்கள் உடலிலும் நீங்கள் பெரிய வித்தியாசத்தை உணர்வீர்கள்" என்றவாறே நடைபயணத்திலிருந்து - வேகமான நடைக்கும் - மிகவும் விறுவிறுப்பான ஒரு நடைக்கும் - பின்பு ஓட்டத்திற்கும் வேண்டுமென்றே மாறியவாறு ரெபெக்காள் கேலிசெய்தாள். ஓடிக்கொண்டிருந்தவர்களில் முதலிடத்தில் இருந்தவாறே அவள் சிரமமின்றி தொடர்ந்து பேசினாள்; ஜேக், ரேச்சல் மற்றும் ஆலன் மூன்று பேரும் அவளுக்கு இணையாக ஓடினார்கள். "உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருப்பது மகிழ்ச்சியானது என்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று பின்னால் வந்துகொண்டிருந்த லெவ்விற்கு கேட்கும்படியாக அவள் தனது குரலை உயர்த்தி சத்தமாகக் கூறினாள்; தொழிற்சாலை வேலை மற்றும் பிற திட்டங்களிலும் ஈடுபட வேண்டும்.

ஆனால் இவை அனைத்தும் உங்களைப் பொருத்தது, நீங்கள் விரும்பினால் நாள் முழுவதும் உட்கார்ந்தும் இருக்கலாம்" என்று அவனைத் திரும்பிப் பார்த்தவாறே கூறியதில் அவளுடைய முகம் சிவந்து கண்கள் பிரகாசமாகியது.

மறுபடியும் லெவ் இந்தப் புதிய உலகின் அனுபவமுள்ள ஓட்டப்பந்தய வீரர்களுடன் தொடர்ந்து ஓடுவதில் சிரமத்தை மேற்கொண்டான். கடினமான மூச்சுவாங்குதல்களுக்குகிடையே "ஒன்றும் செய்-யாமல் உட்-கார்-ந்து இரு-க்க வேண்டும் என்று நினைப்-பவன் நான் அல்ல" என்று அவன் கூறினான். "எப்போதும் ஓய்-வின்றி இருப்பதையே நான் விரு-ம்பு-கிறேன். மேலும் நல்ல ஆரோக்-கியமாக இருப்பதையே விரு-ம்பு-கிறேன். ஆனால் இந்த ஏதேன் பூக்களின் மணத்தை நுக-ர்வ-தற்கு நாம் சிறிது மெதுவாகச் செல்லலாம் என்று எண்ணுகிறேன்" என்று கூறியபடி லெவ் திடீரென தனது ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்தான், மற்றவர்களும் உடனடியாக தங்களது வேகத்தைக் குறைத்தனர்.

"நல்ல முயற்சி, அப்பா, இன்னும் சிறிது காலத்தில் ஏதேன் பழத்தின் உதவியால் நீங்கள் எங்கள் அனைவரையும் மிஞ்சிவிடுவீர்கள்" என்று ஆலன் தனது தந்தையின் முதுகில் தட்டியவாறு கூறினான்.

"ஆமாம், சரிதான்!" என்று மூச்சு வாங்கிக் கொண்டே லெவ் கூறினான். மெதுவான வேகம், பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட இடங்களில் இருந்த தோப்புகளை கவனிக்க லெவ்வுக்கு வாய்ப்பளித்தது. சில வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருந்தன, மற்றவைகளில் பணிகள் நடந்து கொண்டிருந்தன. "சரி அம்மாவிற்கும், அப்பாவிற்கும் ஒதுக்கப்பட்ட இடம் எங்கே இருக்கிறது?" என்று லெவ் வினவினான்.

"அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களை விரைவில் காண்பிப்போம். லெவ், இந்த வீட்டைப் பாருங்கள். இந்த வீடு அதில் குடியிருக்கப்போகும் நபர்களைக்கூட அறியாத மக்களால் கட்டப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் பொறுப்பில் இருக்கும் பெண்ணை எனக்குத் தெரியும். நான் அவளுடன் தொழிற்சாலையில் பணிபுரிந்தேன்" என்று புதிதாகப் போடப்பட்ட அஸ்திபாரத்தை மேற்பார்வை செய்துக்கொண்டிருந்த ஓர் இளம் பெண்ணை நோக்கி ரேச்சல் கை அசைத்தவாறு கூறினாள்.

"இனி உயிர்த்தெழுந்து வரப்போகின்ற அந்தக் குடும்பத்தின் உறவினர்களுக்கு என்ன ஆயிற்று? அவர்கள் ஏன் ஆயத்தங்ளைச் செய்வதற்கு முன்வரவில்லை?" என்று லெவ் கேட்டான்.

"கடந்த கால தலைமுறைகளில் விவாகரத்து அதிகமாக இருந்தது. மேலும் பிரிந்த குடும்பங்களில் இருந்த பிள்ளைகளை ஒன்றுகூட்டி அவர்களை விட்டுச் சென்ற அவர்களது பெற்றோர்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுக்க முயற்சிப்பது, நாம் விரும்புவதைப்போல எளிதாக நடக்கக்கூடியதல்ல. அவர்களுக்கிடையே உணர்வுகள் ரீதியிலாக அநேக காயங்கள் ஏற்பட்டிருக்கும். தங்கள் குழந்தைகளை விட்டுச்சென்ற அல்லது துஷ்பிரயோகம் செய்த பெற்றோர்களை அவர்கள் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் காணப்படமாட்டார்கள். இது அவர்களுக்கு கஷ்டமான ஒன்றுதான். அப்படியான மக்களுக்குத் தேவையானவைகளைச் செய்யவதற்கு தன்னார்வலர்கள் வேண்டும்" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

"மறுசீரமைப்புப் பணி என்றாலே மகிழ்ச்சி நிறைந்தது என்று உங்களுக்கு தோன்றலாம், மகிழ்ச்சி என்பது ஒரு பகுதி மட்டுமே. ஆனால் அப்பணி சவால்களாலும்கூட நிறைந்துள்ளது; அதாவது நம்மையும் மற்றவர்களையும் எதிர்கொள்ளுவது, ஒருவருக்கொருவர்

முற்றிலும் நேர்மையாக இருப்பது, ஒருவருக்கொருவர் செய்த தவறுகளுக்குப் பரிகாரங்கள் செய்வதுபோன்ற சவால்கள் காணப்படும். மனிதர்கள் மற்றவர்களுக்கு ஏற்படுத்திய காயங்கள், அவர்கள் மரித்த பின்பும்கூட மறக்க முடிவதில்லை. அவர்கள் சிறந்த மனிதர்களாக மாறுவதற்கு அவைகள் அனைத்தையும் கடந்துசெல்ல உறுதியும், மேசியாவின் உதவியும் தேவை" என்று ரேச்சல் கூறினாள்.

அவர்கள் நடந்து கொண்டிருக்கையில் லெவ் தரையைப் பார்த்துக் கொண்டே நடந்தான். அவன் இப்போது மேசியாவை நம்பினான். ஆனாலும் இன்னும் அதிகமாக அவரை அறிந்து கொள்ள வேண்டும் என்று தன் மனதில் எண்ணிக் கொண்டே நடந்தான். அவனுடைய குடும்பம் கிறிஸ்துவையும் மற்றும் அவரது ஒப்புரவாக்கும் வல்லமையையும் உண்மையாக நம்பியது. ஆனால் லெவ்வினால் அதன் ஆழங்களைக் காண முடியவில்லை.

## தொழிற்சாலைக்கு வருகை தருதல்

"அப்பா, அங்கே தொழிற்சாலை இருக்கிறது" என்று தொழிலாளர்களுக்கு சுற்றுலா தளமாக விளங்கிய சிறு பழமரங்களால் ஆன தோப்பினால் சூழப்பட்டிருந்த ஒரு பெரிய கட்டிடத்தை நோக்கி ஆலன் தன் கைகளை நீட்டிக் கூறினான்.

பாதுகாவலர் அல்லது வரவேற்பாளர் இல்லை என்பதை லெவ் கவனித்தான். அவர்கள் நேரடியாக தொழிற்சாலைக்குள் நடந்தார்கள். அங்கே நடந்து கொண்டிருந்த செயல்முறை உடனடியாக லெவ்வைக் கவர்ந்தது. ஒரு பெரிய ஹைட்ரோ-ஆக்ஸி உலைக்கு பொருள் கடத்தியின் வழியாக மணல் கொண்டு வரப்பட்டது. வெப்பம், கண்ணாடியை உருகிய நிலைக்கு ஆக்கியபோது, மற்றொரு பொருள் கடத்தி நிறத்தையும், வேண்டிய வலிமையையும் கொடுப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களைக் கொண்டு வந்தது. உருகிய கலவை

பின்னர் செங்கல் அச்சுகளில் ஊற்றப்பட்டது, பின்பு குளிரூட்டலுக்காக கீழ் இருந்த பொருள் கடத்தியின் மூலமாக அனுப்பப்பட்டது. பின்னர் அவை துண்டுகளாக்கப்பட்டு தனித்தனி பாகமாக்கப்பட்டன. கெட்டியாக உறைந்த செங்கல்களானது ஆர்வமுள்ள தொழிலாளர்களால் சறக்கு வண்டிகளில் வைக்கப்பட்டு கப்பலுக்கு அனுப்பப்படுவதை லெவ் பார்த்தான்.

"அவர்கள் தங்கள் வேலையை அனுபவித்து செய்வதாகத் தெரிகிறதே....ஆனால், அதிக வேலைக்காரர்கள் இல்லையே? எல்லோரும் எங்கு இருக்கிறார்கள்?" என்று லெவ் சுற்றிலும் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"உண்மையில், இந்த ஆலை இயங்குவதற்கு பதினைந்து ஊழியர்கள் மட்டுமே தேவை. ரெபெக்காளும், நானும் அலுவலகத்தில் வேலை செய்கிறோம். சில சமயங்களில் ஆலைகளில் வேலை செய்கிறோம், சில சமயங்களில் நாங்கள் கற்களை கப்பல்களுக்கு அனுப்ப உதவுகிறோம்" என்று ரேச்சல் பதிலளித்தாள்.

"நீ கற்களை ஏற்றுவாயா?" என்று லெவ் ரெபெக்காளிடமிருந்து, ரேச்சலிடம் பார்வையைச் செலுத்தியவாரு கேட்டான். "இந்த வேலை ஆண்கள் செய்யும் வேலை தானே?" என்று லெவ் வினவினான்.

ரெபெக்காள் தன் கைகளை பலம் காட்டி உயர்த்தி, அவளது பலமான மேற்கை உள்தசையைக் காண்பித்தாள். "இதற்கான விடை ஏதேன் பழம் தான்! இல்லை, இல்லை உண்மையில் எல்லாவற்றையும் ஏற்றுவதற்கு நாங்கள் இயந்திரங்களைப் பயன்படுத்துகிறோம்" என்று கூறி அவள் சிரித்தாள்.

"நீங்கள் இருவரும் நல்ல உடல் கட்டமைப்பில் இருக்கிறீர்கள், இப்போது நம்மிடையே கை மல்யுத்த போட்டி வைத்தால் நீங்கள் என்னை வென்று விடுவீர்கள்" என்று கூறி லெவ் சிரித்தான். தன்னைவிட அவர்கள் பலமுள்ளவர்களாக இருப்பது லெவ்விற்கு

விநோதமாக இருந்தது. இந்தப் புதிய உலகில் ஆண், பெண் விஷயத்தில் இருக்கும் வித்தியாசங்களைக் கண்டதால் உண்டான பயத்தினால் தனது குழப்பமான சிந்தனையை தவிர்ப்பதற்காக உரையாடலைத் திருப்பிவிட "ஓ! இப்படித்தான் வேலைகள் நடைபெறுகின்றனவா?" என்று லெவ் கேள்வி எழுப்பினான்.

ஆலன் தனது தந்தையின் அசௌகரியத்தை அறிந்து பின்வருமாறு பதிலளித்தான்: "நமது பகுதியில் ஏராளமாக மணல் உள்ளது, எனவே நாம் கண்ணாடி செங்கற்களை உருவாக்குகிறோம். இந்தத் தொழிற்சாலை முதன்மை வேலையான மணலை சூடாக்குவதை இரவு முழுவதும் செய்கிறது, காலையில் நாங்கள் இறுதிப் பணிகளைச் செய்துவிட்டு, உற்பத்தியைத் தொடங்குவோம். நாங்கள் வழக்கமாக ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று மணிநேரம் மட்டுமே வேலை செய்கிறோம், பின்னர் மற்றொரு வேலைமாற்றுக் குழு(ஷிப்ட்) பொறுப்பேற்கிறது. லாரிகள் கட்டுமான தளங்களுக்குப் பொருட்களைக் கொண்டு செல்கின்றன. நீர் குழாய் அமைப்பு, வெப்பமாக்கல் மற்றும் மின் கூறுகளை உருவாக்கும் பிற தொழிற்சாலைகள் உள்ளன. பொறியாளர்கள் ஒவ்வொரு மாதமும் ஆலைக்கு வந்து பராமரிப்பை எவ்வாறு செய்வது என்று எங்களுக்குக் கற்றுக் கொடுப்பதோடு, வேலைகளைச் சீராக செய்ய எங்களுக்கு உதவுகிறார்கள்."

அவர்கள் தங்கள் சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்தபோது, கற்கள் அச்சுகளில் ஊற்றப்பட்டு வெளிவருவதை மிக அருகில் இருந்து பார்ப்பதற்காக நான்கு பேரிடமிருந்தும் லெவ் பிரிந்து சென்றான்.

"உன்னை இங்கே சந்திப்பதில் மகிழ்ச்சி லெவ்" என்று கிண்டலாக ஒலித்த குரலைக் கேட்டான். அந்தக் குரல் அவனுக்குப் பழக்கமான குரலாக இருந்தது. அந்தக் குரலுக்குச் சொந்தமானவனின் பெயரை நினைவில் கொண்டுவரும்போதே, அவனது வயிற்றில் ஓர்

இறுக்கத்தை லெவ் உணர்ந்தான். திரும்பி அவனுடைய உயர்நிலைப்பள்ளி நாட்களில் அவனுடைய எதிரியான ரூபன் மேயரைப் பார்த்தபோது லெவ்வின் கண்கள் சுருங்கின. நொடிப்பொழுதில் பல நினைவுகள் அவனுள் தோன்றியது.

முந்தைய உலகத்தில் தான் எப்படி இருந்தேன் என்பது லெவ்வுக்கு தெளிவாக ஞாபகம் இருந்தது. அவன் ஒல்லியாக இருந்தாலும் உறுதியான உடல் கட்டமைப்போடும், விஷயங்களைக் கையாள்வதில் திறன் இல்லாதவனாகவும், அவனது இளமைப் பிராயத்தின் தடுமாற்றங்களிலிருந்து மாறாதவனாகவும் இருந்தான். தன் சகோதரனுக்கான தனது ஆதரவை எப்போதுமே கொடுப்பதற்காகவும், தன்னை நிரூபிப்பதற்காகவும், தன்னைப் பற்றியதான தாழ்வுமனப்பான்மையிலிருந்து விடுபடுவதற்காகவுமான மற்றொரு வழியாக தன் சகோதரன் ஜேக்கிடம் அடிக்கடி வந்துவிடுவான். லெவ், கூச்ச சுபாவம் கொண்டவனாகவும், பெண்கள் தொடர்புடைய காரியங்களில் தன்னம்பிக்கையில் குறைந்தவனாகவும் இருந்தான். தன்னைக் குறித்ததான தேடுதலின் நினைவுகளில் இப்போதும் அவனது முகம் சிவந்தது. தனது முதல் பார்வையிலேயே ரெபெக்காள் ஒபதியாவை மிகவும் நேசித்தான். ஆனால் அவளை அணுக முயற்சிப்பதில் அவன் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ள முடியவில்லை.

ரூபன் மேயர் எதையும் அவனுக்கு எளிதாக இருக்கும்படி விடவில்லை. லெவ்வுக்கு எதிராகப் புரிந்துகொள்ள முடியாததொரு பகையைக் கொண்டிருந்தான்.

ரெபெக்காள் மீதான லெவ்வின் காதலை ரூபன் அறிந்ததும் அவளை வசீகரிக்கும்படி நடித்தான், அவன் அந்தப் பாத்திரத்தை நன்றாகச் செய்தான். "லெவ், உங்கள் சனிக்கிழமை மாலையை எப்படி கழிக்கப் போகிறீர்கள்... என்னுடனும், ரெபெக்காளுடனும் வர

விரும்புகிறீர்களா?" என்று ரூபன் மேயர் பெற்ற வெற்றியால் லெவ்வைக் கேலி செய்தான். பின்னர் ஒரு நாள் பள்ளி அலுவலகத்தின் பூட்டை உடைத்து நுழைந்து கணினி பதிவேட்டில் உள்ள அனைவரின் மதிப்பெண்களையும், லெவ் மாற்றி அமைத்ததுபோல் செய்து முழுப் பள்ளிக்கும் முன்பாக லெவ்வை அவமானப்படுத்தினான். லெவ்வின் பெற்றோர்கூட ரூபனின் இந்தக் கதையை நம்பினர்.

உயர்நிலைப்பள்ளியின் தனது கடைசி ஆண்டில், லெவ் ஆக்ரோஷமானவனாகவும், தன்னைப் பற்றி உறுதியானவனாகவும் இருந்தான். ரூபனையும், ரெபெக்காளையும் லெவ் கண்டு கொள்ளவில்லை. கட்டாய இராணுவபணி நடைமுறையில் இல்லாதிருந்தபோதிலும்கூட, லெவ் அந்தக் கோடையில் இராணுவத்தில் சேர்ந்தான். எப்போதுமே இருக்கும் என்று கூற இயலாத சமாதானத்தை இஸ்ரயேல் அனுபவித்துக் கொண்டிருந்தது. பின்பு நான்கு வருஷங்கள் கழித்து ஹீப்ரு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது, அவனும், ரெபெக்காளும் ஒருவரையொருவர் தீவிரமாக விரும்ப ஆரம்பித்தனர். ஆனாலும் ரூபன் மேயர் அவனுக்குச் செய்தவைகளால் உண்டான கோபமும், அவமானமும் அவனது இதயத்தில் இன்னமும் எரிந்து கொண்டிருந்தது.

"படையெடுப்பாளர்களுக்கு எதிரான முதல் போரில் நீ கொல்லப்பட்டதாக நான் கேள்விப்பட்டேன்" என்று ரூபன் கூறினான். லெவ் அவனது குரலில் கிண்டலின் தொனி இருந்ததை உறுதியாக அறிந்தான்.

"ஆமாம், நான் அந்தப் போரில் கொல்லப்பட்டேன்தான்." லெவ் எரிச்சலடைந்தது அவனது முகத்திலும் தொனியிலும் தெரிந்தது.

"இன்னும் என் மீது கோபமா, ம்ம்?" என்று கேட்டு ரூபன் சிரித்துக் கொண்டு நின்றான். பின்பு அவன் லெவ்வை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்து "அப்புறம், ரெபெக்காள் எப்படி இருக்கிறாள்? இந்த உலகில்,

நம்மிருவரில் யாரும் அவளைப் பெற முடியாது என்று நினைக்கிறேன்...” என்று அமைதியான குரலில் பேசினான்.

லெவ்வின் தாடை இறுகியது, அவன் தன் கை முட்டியை முறுக்கினான்.

“இது வெற்றியா? அல்லது தோல்வியா?” என்று ரூபன், லெவ்விடம் கேள்வி எழுப்பினான். “நீ இன்னும் தைரியம் இல்லாதவனாகத்தானே உள்ளாய் லெவ்?” என்று ரூபன் கேலியாகக் கேட்டான்.

## லெவ்விற்கான பின்விளைவு

லெவ் கோபத்தில் தன் முழுப் பலத்தையும் திரட்டி ரூபன் மேயரை அடிப்பதற்காக கையை ஓங்கினான். ஆனால் தனது கரம் ரூபனை அடிப்பதற்கு உதவாததைக் கண்டு லெவ் திகைத்துப் போனான். திடீரென உணர்வற்று தளர்ந்த தனது வலது கையை அவன் உற்றுப்பார்த்தவாறு, அங்கிருந்து விரைவாக வெளியேறினான்.

“பார்க்கலாம் லெவ்” என்று விரைவாக அறையை விட்டு வெளியேறிய லெவ்விடம், ரூபன் கூறினான்.

“ரூபன் மீண்டும் தன்னை சிக்கலில் மாட்டிவிட்டுவிட்டான், என்னை வம்பிற்கு இழுத்தால் நான் கோபப்படுவேன் என்று அறிந்து, வேண்டுமென்றேதான் ரூபன் இதைச் செய்திருக்கிறான்” என்று லெவ் நினைத்தான். வலது கை எந்தவிதமான வேலையும் செய்ய முடியாதபடி தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டபோது உண்டான கோபத்தில் எதிரே வந்த ரெபெக்காளைக் கவனியாது அவள் மீது லெவ் மோதினான். அவன் நிலையைக் கண்டு “லெவ், என்ன நடந்தது?” என்று ரெபெக்காள் கேட்டாள்.

“ரூபன் மேயர்” என்று லெவ் பதிலளித்தான்.

“ஆ...உங்களது கை எப்படி ஆகிவிட்டது பாருங்கள், நான் முன்பே இதைக் குறித்து உங்களுக்குச் சொல்லி இருக்க வேண்டும் லெவ்” என்று ரெபெக்காள் வருத்தத்துடன் கூறினாள்.

"நான் பொறுமை இழந்து அவனை அடிக்க முயற்சித்தேன். நீ சொல்லாத புதிய பூமியின் பின்விளைவுகளில் இதுவும் ஒன்று என்று நினைக்கிறேன்" என்று கூறி சங்கடத்தோடு லெவ் நின்றான்.

"மனக்கசப்புகள் நம்மை விட்டு எளிதில் நீங்காததால் நாம் அனைவரும் இப்படியான அனுபவங்களுக்குள் செல்ல வேண்டியிருக்கும்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"அப்படியானால் ரூபனுக்கு ஏன் எதுவும் நடக்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை, இப்படித்தான் நடக்கும் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். மேலும் நான்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறேன்" என்று தனக்கு அநீதி இழைக்கப்பட்ட உணர்வுடன் லெவ் கூறினான்.

"உங்களுக்கான தண்டனை உங்களது தவறுக்கானது, லெவ். ரூபனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ரூபனும் இதிலிருந்து தப்பிக்க முடியாது. ரூபன் தனது கடந்தகால செயல்களுக்கு வருந்தவில்லை போன்று தெரிகின்றது. அவனுக்கு நேரம் கொடுங்கள், அவன் சமீபத்தில்தான் உயிர்த்தெழுப்பப்பட்டான். இன்னும் நிறைய பிரச்சனைகளை அவன் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் செய்த தவறுகளைச் சரியாக்க அவனுக்கு நிறைய நேரம் இருக்கிறது, குறைந்தது நூறு ஆண்டுகள்" என்று கூறி ரெபெக்காள் லெவ்வை சமாதானப்படுத்த முயன்றாள்.

லெவ் அவனது கையைச் சங்கடத்துடன் பார்த்தவாறு "இப்போது நான் என்ன செய்வது?" என்று கேட்டான். "நான் புதிய பூமியின் செயல்முறையில் கொஞ்சம் முன்னேற ஆரம்பித்தேன் என்று நினைத்தேன், இப்போது இப்படி ஆகிவிட்டதே" என்று அவன் ரெபெக்காளிடம் கூறியதைவிட தனக்குத்தானே கூறி வருத்தப்பட்டான்.

தனது கரத்தையே பார்த்துக் கொண்டிருந்த லெவ்வின் தலையை ரெபெக்காள் தனது முகத்திற்கு நேராகத் திருப்பி "லெவ்" என்று

கூப்பிட்டாள். "நீங்கள் முற்பிதாக்களின் அலுவலகத்தை தொடர்பு கொண்டு அவர்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டும். கிறிஸ்துவிடம் கலந்து ஆலோசிக்கும்போது என்ன நடந்தது என்பதனை அவர்கள் துல்லியமாக அறிந்து கொள்வார்கள். அவர்கள் ஒருவேளை ரூபனுடனும் பேசுவார்கள்." ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிற்கான பட்டனை ரெபெக்காள் அழுத்தி கைப்பேசியை லெவ்விடம் கொடுத்தாள்.

லெவ் இடது கையினால் கைப்பேசியை தனது காதில் வைத்தவாறு கட்டிடத்தை விட்டு வெளியேறி இருக்கை ஒன்றில் அமர்ந்தான். "இது முற்பிதாக்களின் அலுவலகம், நான் எப்படி உங்களுக்கு உதவ வேண்டும்?" என்று ஒரு குரல் கேட்டது.

"ம்ம்... என் கையைப்...பயன்படுத்த முடியவில்லை... நான் முற்பிதாக்களுடன் பேச வேண்டும்" என்று லெவ் பதிலளித்தான்.

லெவ்வை ஒரு நிமிடம் காத்திருக்கச் சொன்னார்கள்.

"ஷாலோம். நான் முற்பிதாவாகிய சாராள், நான் உங்களுக்கு எப்படி உதவ வேண்டும்?" என்று கேட்டார்.

அவன் தொலைக்காட்சியில் பார்த்திருந்த ஆபிரகாமின் முன்னாள் மனைவியான சாராளின் அழகான தோற்றத்தைத் தன் நினைவிற்குக் கொண்டு வந்தான். "என் பெயர் லெவ் ஆரோன், என் புதிய வாழ்க்கையின் மூன்றாவது நாளில் இருக்கிறேன். இன்று நான் ஒரு பழைய எதிரியை அடித்து வீழ்த்த முயற்சித்தேன், எனது செய்கைக்காக நான் வெட்கப்படுகிறேன்" என்று லெவ் கூறினான்.

"என்ன நடந்தது என்பதைப் பற்றி என்னிடம் சொல்லுங்கள்" என்ற சாராளின் குரலில் கண்டனத்தின் குறிப்பு எதுவும் இல்லை. "எனக்கு முழு உண்மையையும் நேர்மையாகவும், சுருக்கமாகவும் கூறுங்கள். இன்று என்ன நடந்தது என்றும் சொல்லுங்கள். மேலும் கடந்த காலத்தின் சுருக்கமான வரலாற்றை எனக்குக் கொடுங்கள்.

அப்பொழுதுதான் உங்களுக்கு இழைக்கப்பட்ட பழைய அநீதிக்கு நீங்கள் எதிர்வினை ஆற்றியுள்ளீர்களா என்பதை நான் தெரிந்து கொள்ளமுடியும். உண்மையை நாங்கள் தீர்மானிக்கமாட்டோம் என்று நீங்கள் அறிவீர்கள், இல்லையா? கிறிஸ்து அல்லது அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களில் ஒருவர் இந்தக் காரியம் பற்றி நமக்குத் தெரிவிப்பார்" என்று முற்பிதாவாகிய சாராள் பதிலளித்தார்.

லெவ், ரூபனின் ஆத்திரமூட்டும் வார்த்தைகளையும், அவனது மனதில் ரூபனைப் பற்றி எழுந்த பழைய நினைவுகளைப் பற்றியும் முற்பிதாவாகிய சாராளிடம் கூறினான். அவன் தனது சார்பில் நேர்மையாக இருக்க முயன்றான். மேலும் அவனுடைய வாழ்க்கை முழுவதையும் அறிந்திருந்த இந்த முற்பிதாக்கள்(அவனுக்கு இப்பொழுதுதான் தெரிய ஆரம்பித்திருந்த) மேசியாவுடன் நேரடித் தொடர்பில் இருக்கிறார்கள் என்பதை நினைத்து லெவ் பதட்டமாக உணர்ந்தான்.

"எனது செயலுக்காக நான் மனம் வருந்துகிறேன். ஆனாலும் உண்மையில் நான் அவனை அடித்திருந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன் - நான் முழுமனதாக வருத்தப்படவில்லை என்பதற்காக வருந்துகிறேன் - இதுதான் உண்மை" என்று லெவ் தான் நினைத்ததை நேர்மையாகக் கூறினான்.

"நன்றி லெவ் ஆரோன். நீங்கள் என்னிடம் கூறிய அனைத்தும் உண்மையாக இருந்தால், ஒரு மணி நேரத்திற்குள் உங்கள் கை பழைய நிலைக்குத் திரும்பும். குணமாகும் செயல்முறை நடைபெறும்போது அதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். நீங்கள் கவலையில் இருக்கிறீர்கள், லெவ். "***அவர் நெரிந்த நாணலை முறிக்கமாட்டார்***" என்ற எனது அன்பு நண்பர் ஏசாயாவின் வார்த்தைகளால் நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். இவை அனைத்தும் இந்தப் புதிய உலகில் முன்னேறுவதற்கான செயல்முறையின் ஒரு பகுதி

ஆகும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று முற்பிதாவாகிய சாராள் கூறினார்.

மேஜையின் இருக்கையில் அமர்ந்து லெவ் சிந்தனையில் மூழ்கினான். விரைவில் அவனது குடும்பத்தினர் லெவ்வுடன் இணைந்தார்கள்.

"அப்பா..ா..ா, நீங்கள் எதிரியுடன் சண்டை போடப் போனதாக நான் கேள்விப்பட்டேன். நானும் இதுபோன்று செய்தபோது, எனக்கு ஏற்பட்ட முதல் பின்விளைவும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் அந்த ஒன்றோடு நான் நிறுத்திக் கொள்ளவில்லை" என்று கூறியவாறு ஆலன் தனது தந்தையின் அருகில் அமர்ந்து அவனது தோளில் விளையாட்டுத்தனமாக ஒரு இடி இடித்தான்.

"நாம் அனைவருமே இந்த அனுபவங்களின் வாயிலாகக் கடந்து வருகிறோம், லெவ். எதிர்காலத்திலும் நாம் அனைவரும் வேறு சில திருத்தங்களைப் பெறுவோம். புதிய சிந்திக்கும் முறையைக் கற்றுக் கொள்வதும், குணலட்சணத்தைக் கட்டி எழுப்புவதும் தான் நாம் செய்ய வேண்டிய விஷயங்களாகும். நாம் நம்முடைய குணலட்சணங்களை ஒன்று உருவாக்குகிறோம் அல்லது அழித்துப்போடுகிறோம். நற்பெயர் என்பது நம்மைக் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதேயாகும், குணலட்சணம் என்பது உண்மையில் நாம் என்னவாக இருக்கிறோம் என்பது ஆகும். தேவனும், கிறிஸ்துவும் இந்த வித்தியாசத்தை அறிவார்கள்" என்று ஜேக் கூறினார். ஜேக் தனது சகோதரனைப் புரிந்துகொண்டது போன்றதான பார்வையைக் கொடுத்தான். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் அவரவரது முறை வரும்போது தாங்கள் பெற்றுக்கொண்ட பின்விளைவுகளையும், அது அவர்களது வாழ்வில் எத்தகைய தாக்கத்தினைக் கொண்டு வந்தது என்பதனையும் பகிர்ந்து கொண்டனர்.

முதல் முறையாக அவன் தனது கையைப் போரில் இழந்திருந்தான், இப்போது இரண்டாவது முறையாக....லெவ் தனது

கையைப் பார்த்தவாறு "என் கை இப்படி இருப்பது எனக்கு அவமானமாகவும், தர்மசங்கடமாகவும் இருக்கிறது." அவன் தனக்குத்தானே சிரித்துக் கொண்டு, "இப்போது வேறு வகையான போரில் நான் எனது கையை இழந்துள்ளதாக எண்ணுகிறேன்" என்று லெவ் கூறினான்.

லெவ், அனைத்து செயல்முறைகளையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக புத்துணர்ச்சியூட்டும் மதிய உணவுக்குப் பிறகும் பிற்பகல் முழுவதும் தொழிற்சாலையிலேயே கழித்தனர். பின்விளைவுகள் பற்றிய கலந்துரையாடலுக்குப் பிறகு சிறிது நேரத்திலேயே, அவனது வலது கையில் ஒரு கூச்ச உணர்வு இருப்பதை அவன் கவனித்தான், மிக விரைவிலேயே அவனது தோள் மற்றும் மணிக்கட்டிற்கு நகர்த்தும் திறன் திரும்பியது. அவர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியேறும் நேரத்தில் அவனது விரல்கள் அவற்றின் இயக்கத்திற்கு முழுமையாக திரும்பின.

வீட்டிற்கு நடந்து செல்கையில் லெவ் அமைதியாக இருந்தான். அவன் உயிர்த்தெழுந்த பின்பு முதல் முறையாக தனது காலியான, அமைதியான வீட்டிற்குத் திரும்புவதற்கு நன்றியுள்ளவனாக இருந்தான். தனிமையில் லெவ்விற்குச் சிந்திப்பதற்கு நேரம் தேவைப்பட்டது.

அவன் விரும்பிய தோட்டத்தில் ஒரு பெஞ்சில் அமர்ந்தான், இன்னும் அவனது மனதில் ஒட்டிக் கொண்டிருந்த மனக்கசப்பினைக் கண்டு குழப்பமடைந்தான். அவன் தனது இரவு உணவிற்குச் சில ஏதேனின் பழங்களைச் சாப்பிட்டான், அதன் குணப்படுத்துதல் மற்றும் ஜீவன் பெறுவதற்கான உதவி இரண்டுமே தனக்குத் தேவை என்பதை லெவ் அறிந்திருந்தான்.

அவன் தன்னைச் சுற்றி இருந்த செழித்து வளர்ந்திருந்த மரங்களை உற்றுப் பார்த்துவாறு, அவன் சத்தமாகப் பேசினான்.

"எனக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று தெரியவில்லை. நான் என் கோபத்தை விட்டுவிட முயற்சிக்கிறேன் ஆனால் அது மீண்டும் என்னைத் தொந்தரவு செய்கிறது. கோபம் மிகவும் அழிவுகரமானது என்று எனக்குத் தெரியும்; நான் உண்மையில் என் இருதயத்தில் கோபம் இருப்பதை விரும்பவில்லை" என்று கத்தினான். அப்போது தொலைபேசியின் அழைப்பு அவனது எண்ணங்களைச் சிதறடித்தது.

## ரூபனின் மன்னிப்பு

லெவ், சமையலறையில் இருந்த தொலைபேசியை நோக்கி விரைந்தான். "ஹலோ?" யார் பேசுவது என்று வினவினான்.

தொலைபேசியில் "ஷாலோம்" என்ற குரல் ஒலித்தது..... சற்று நேரம் இருவருமே பேசவில்லை. அக்குரலுக்குரியவனை ரூபன் என்று அறிந்ததும் லெவ்வின் மனஅமைதி குலைந்தது.

"பழைய உலகத்தில் நான் உனக்கு தீமை செய்திருந்தேன். இந்த உலகத்திலும், இன்றைய நாளில் நான் உனக்குச் செய்தது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று முற்பிதாவாகிய சாராள் என்னை எச்சரித்ததால் உன்னை அழைத்தேன். எனது கடந்த கால மற்றும் தற்போதைய நடத்தைக்கு நான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சாராள் என்னிடம் கூறியுள்ளார். அதனால் நான் மன்னிப்பு கேட்கிறேன்" என்று கூறி தொலைபேசியை ரூபன் வைத்துவிட்டான்.

திகைப்புடனே தொலைபேசியை வைத்துவிட்டு "ஓ! எத்தகையதொரு சுவாரஸ்யமான மன்னிப்பு" என்று அவன் நகைச்சுவையோடு கூறினான். "இது ஒரு உண்மையான மன்னிப்பு போன்று எனக்குத் தோன்றவில்லை, இது எனக்கு மிகவும் செயற்கையாகத் தோன்றுகிறது" என்று நினைத்தவாறே லெவ் தனது வலது கையினால் பேனாவை எடுக்கச் சென்றபோது அவனுடைய கை இயல்பான நிலைக்குத் திரும்பியது.

"எனது கை குணமடைந்துவிட்டது ஆனால் எனது இருதயம் இன்னும் குணமடையவில்லை" என்று லெவ் உணர்ந்து வருந்தினான்.

அவன் தனது கை முழுமையாக குணமடைந்ததற்கு நன்றி தெரிவித்தவாறே தனது படுக்கையறைக்கு நடந்தான். ஆனால் அவனது கோபம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அவன் தனது கோபத்தை மேற்கொள்ளாவிட்டால் அது அவனுக்கு நிச்சயமாக சிக்கலை ஏற்படுத்தும் என்றும் லெவ் உணர்ந்தான். அவன் கட்டிலின் அருகே முழங்கால்படியிட்டு "தேவனே, என் வலது கை குணமடைந்து விட்டது ஆனால் என் குணலட்சணம் இன்னும் சரியாகவில்லை. சோதனையில் நான் உண்மையில் தோல்வியடைந்துவிட்டேன் என நினைக்கிறேன்" என்று லெவ் ஜெபித்தான்.

"*அவர் நெரிந்த நாணலை முறிக்கமாட்டார்*" என்ற ஏசாயாவின் வார்த்தைகளை மேற்கோள்காட்டிய முற்பிதாவாகிய சாராளின் குரல் லெவ்வின் மனதில் ஒலித்தது.

## ஒரு நெரிந்த நாணல்

லெவ் தன் கண்களில் கண்ணீர் வருவதைக் கண்டு, அவன் தன்னை ஒரு நெரிந்த நாணலைப் போல உணர்ந்தான். தன்னுடைய கோபமும், காயங்களுமே தன்னை பலவீனமாக்குவதையும், பாதிப்புக்குள்ளாக்குவதையும் உணர்ந்தான். இனிமேல் தனது வாழ்க்கையில் அதிகமாக ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடிவு செய்தான். "என் உணர்ச்சிகளுக்கு நான் பெறுப்பேற்க வேண்டும். எந்தச் சூழ்நிலையில் கோபம் வந்தாலும், அது என்னை ஆளுவதற்கு நான் அனுமதிக்கப்போவதில்லை" என்று லெவ் தீர்மானித்தான்.

"எரிநரகம் மற்றும் கந்தகம் போன்றவற்றால் தண்டிப்பார் என்று போதர்களால் போதிக்கப்பட்ட கிறிஸ்து அவர் அல்ல. ஆனால் அவர் நம்முடைய ஜனங்களையும், சகல ஜாதிகளையும் ஒப்பரவாக்கி ஆசீர்வதிக்க வரும் இயேசுவாகிய மேசியா. நமக்கு எதிராகக் குற்றம் சுமத்த அவர் தம்மை வெளிப்படுத்தவில்லை, மாறாக நம்மை விடுவிக்கவே வெளிப்பட்டார்." லெவ்வின் புதிய வாழ்க்கையின் முதல்

நாள் மாலையில் ஜேக் பேசிய இந்த வார்த்தைகள் தெளிவாக அவனது மனதில் தோன்றின.

தனது குமாரனையே வழங்கிய தேவனுடைய அன்பின் நீள, அகல, ஆழம் மற்றும் உயரத்தையும் மற்றும் தனது ஜீவனையே மனப்பூர்வமாகக் கொடுத்த குமாரனின் அன்பினையும் உணர்ந்து லெவ் வார்த்தைகளின்றி இருந்தான்.

லெவ் தனது புதிய வாழ்க்கையின் முதல் நாளில் தான் எண்ணிய எண்ணங்களை நினைவு கூர்ந்தான். விசுவாசத்திற்கு ஏற்ப வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி அமைக்கும் காரியமானது ஒருவகைப் போராகும்... கிறிஸ்துவாகிய மேசியா இந்தப் போரை எதிர்கொண்டார். அவருடைய பின்னடியார்களும் எதிர்கொண்டனர். மேலும் இப்போது அவனும்(லெவ்) இந்த ஒரு போரில் ஈடுபட்டு இருக்கின்றான்... நானும் இனி என் கடமையை ஆற்ற வேண்டும் என்று லெவ் தன் மனதில் எண்ணினான்.

மெல்லிய மெத்தை விரிப்பைத் தன்னுடைய இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு, முழுவதுமாக உடை அணிந்திருந்த நிலையிலும், லெவ் அவற்றை போர்த்திக் கொண்டு படுக்கையில் படுத்தான். அன்றைய நாளின் நிகழ்வுகளை நினைத்தபோது உள்ளான சமாதானம் அவனுக்குக் கிடைத்தது. லெவ் தனது வழிகளைச் சரிசெய்ய மெதுவாகக் கற்றுக்கொண்டிருக்கிறான். இந்த அனுபவத்திலிருந்தும், இனி வரும் அவனுடைய எல்லா அனுபவங்களிலிருந்தும் தான் கற்றுக்கொள்ளப் போவதாக லெவ் முடிவு செய்தான், ஏனெனில் முட்டாள்கள் மட்டுமே கற்றுக்கொள்ள மறுப்பார்கள் என்றும் நினைத்தான்.

***

**"நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்..." (சங்கீதம் 32:8)**

# அத்தியாயம் - 7

ரெபெக்காள் தூக்கத்தில் இருந்து விழித்தாள் ஆனாலும் முழுமையாகப் புத்துணர்ச்சி அடையவில்லை. லெவ்விற்கு எதிரான அவளுடைய தவறை ஒப்புக்கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறித்த சிந்தனையிலும் மற்றும் ஜெபத்திலும் மாலைப் பொழுதைச் செலவழித்திருந்தாள். லெவ் அன்புமிக்கவன்தான் ஆனாலும் இதைச் சமாளிப்பதற்கு அவனுக்குக் கடினமாக இருக்கலாம். ரூபனுடனான மோதலைச் சமாளிப்பதற்கு எடுத்த முயற்சியே அவனுக்குப் போதுமானதாக இருந்தது, ஆனால் இப்போது அவளுடைய கடந்தகால தவறையும் அவன் எதிர்கொள்ள வேண்டும். இருவரும் இணைந்திருந்த அவர்களுடைய முந்தைய வாழ்க்கையில், அவளுடைய கருக்கலைப்பு குறித்து அவனிடம் சொல்வதை ரெபெக்காள் வேண்டுமென்றே தவிர்த்திருந்தாள், அதைச் சொல்வதற்கான தைரியம் அவளுக்கு இருக்கவில்லை. அதை அப்படியே விட்டுவிட்டால் அது தானாகவே மறந்துபோய்விடும் என்று எண்ணினாள். அவள் தற்போதும் அவனிடம் சொல்லத் தயங்கினாள். ஏனென்றால் அவளுடைய கடந்தகால பாவத்தை ஒப்புக்கொள்ள அவளுக்கு இன்னும் தைரியம் வரவில்லை.

ரெபெக்காள் தன் தோட்டத்தின் நடுவில் கூடையைக் கையில் பிடித்தவாறு நின்று, பெருமூச்சு விட்டாள். தரையில் இருந்த புல்லின் குளிர்ச்சி அவளது பாதத்தைத் தழுவியது. அவள் வெள்ளிபடர்ந்த கிளைகளைக் கண்டு, பழுத்த ஏதேனின் பழங்களைப் பிரம்மிப்புடன் பறித்தாள். அவளது தோட்டத்து மரங்களிலிருந்து எடுக்கப்பட்ட உணவு, அவளுடைய சிருஷ்டிகருக்கு தான் நன்றிக்கடன்பட்டுள்ளதையும் மேலும் அவருடைய தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் ஞானத்தையும்

நினைப்பூட்டியது. ஏதேனின் மரங்கள், தேவன் மற்றும் கிறிஸ்துவின் அன்புக்கு சாட்சியாக இருந்தன. மனிதனின் பசியை முழுமையாக திருப்திப்படுத்தும் ஜீவனளிக்கும் ஊட்டச்சத்தை அளிப்பதன் மூலம் படிப்படியாக, நீடித்த பெலத்துடன் உடலின் ஆற்றல் சமநிலை பெறும். அதனால் ஆரோக்கியம் மற்றும் சீரான சிந்தனை அனைவருக்கும் கிடைக்கும். அவள் பழத்தோட்டத்தில் நேரம் செலவழிப்பதில் சோர்வடைந்ததே இல்லை.

செடிகள் மற்றும் அவைகளை வளர்ப்பதன் மீதான அவளது விருப்பமானது அவளுடைய பெற்றோர்களான பெஞ்சமின் மற்றும் தெபோராள் ஒபதியாவால் பரம்பரையாக வந்ததாகும். தோட்டக் கலையின் மீது அவர்களுக்கு இருந்த இயற்கையான திறமையை இந்தப் புதிய பூமியில் மேம்படுத்திக் கொண்டனர். மேலும் அவர்களின் சேவைகள் ஏதேன் பழத்தினைப் புசித்த அனைவராலும் அறியப்பட்டு பாராட்டு பெற்றது. உலகமெங்கும் உள்ள பெரிய அளவிலான தோப்புகளுக்கு, ஏதேன் மரங்களை ஏற்றுமதி செய்வதற்குப் பொறுப்பாளர்களாக அவர்கள் இருந்தனர். ரெபெக்காள் மற்றும் மனுக்குல குடும்பம் மீது அவர்களுக்கிருந்த அன்பினை ஏதேன் மரங்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

"தேவனே, இந்த நாள் நான் லெவ்வுடன் அனைத்தையும் சொல்வதற்கு நீங்கள் ஏற்படுத்திய நாளாக இருக்கிறது, எனக்குப் பயமாயிருக்கிறது ஆனாலும் நான் கண்டிப்பாக சரியானதைச் செய்ய வேண்டும்" என்று அவள் மென்மையாகப் பேசியவாறு, தன் தோட்டக்கூடையிலிருந்த சிறிய அறுவடையிலிருந்து ஓர் இனிப்பான பழத்தைக் கடித்தாள்.

## இதுதான் சரியான நாள்

அந்த நாளின் காலை வழிபாட்டின்போது ரெபெக்காள் லெவ்வை உன்னிப்பாக கவனித்தாள். அவன் வித்தியாசமாகத் தெரிந்தான்.

சங்கீதத்திலிருந்து, வழிநடத்துபவர் வாசித்தபோது அவள் அவனது முகபாவங்களைக் கவனித்தாள்.

*"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,*

*எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.*

*எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ,*

*எவனுடைய ஆவியில் கபடமில்லதிருக்கிறதோ அவன் பாக்கியவான்."*

வித்தியாசமான அனுபவங்களினாலும், தான் பெற்றிருந்த புதிய ஜீவனினாலும் நிறைந்திருந்த லெவ், தன் முகத்தைப் பரலோகத்துக்கு ஏறெடுத்து, கண்களை மூடி புன்னகைத்தான். ரெபெக்காளின் இதயத்துடிப்பு வேகமானது, அவளும் புன்னகைத்தாள். அவன் மேசியாவுடன் சமாதானத்துடன் இருப்பதை அவள் உடனடியாகப் புரிந்துகொண்டாள்.

ஆராதனை முடிந்தது. "மிகவும் அருமையான ஆராதனையாக இருந்ததல்லவா?" என்று கூறி லெவ் விளையாட்டுத்தனமாக ஆலனின் முடியைக் கலைத்தான்.

லெவ்விடம் முன்பிருந்த தடுமாற்றம் இப்போது இல்லாததைக் கண்டு, "ஆமாம், அப்பா" என்று பதிலளித்து குழப்பத்துடன் தனது தந்தையை ஆலன் பார்த்தான்.

"இந்தப் புதிய பூமியின் பணிகளைச் செய்வதற்கான ஏழு நாள் பயிற்சித் திட்டத்தை மகிழ்வோடு அனுபவிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும் தானே, நான் இப்போது நான்காம் நாளில் இருக்கிறேன். ஆனாலும் நான் இதுவரையிலும் எந்த வேலையையும் செய்ய ஆரம்பிக்கவில்லை என்ற குற்ற உணர்வு உள்ளது. இன்னும் எந்த ஒரு வேலையையும் நான் செய்யாததால் எனது கைகள் அழுக்கடையவில்லை. செய்வதற்கு நிறைய வேலைகள் இருக்கிறது, நானும் என் பங்கைச் செய்ய விரும்புகிறேன். எனது பெற்றோர்களுக்காக

வீடு கட்டவேண்டும், பிறகு என்னவென்று யாருக்குத் தெரியும்? கற்றுக்கொள்வதற்கான படிப்புகளும், மற்றும் பயிற்சி தேவைப்படும் விலங்குகளும் உள்ளன'' என்று லெவ் கூறினான்.

ரெபெக்காள் தனது கையை லெவ்வின் வாயில் வைத்து மூடினாள். ''மெதுவாக லெவ். ஏதேனின் பழம் கண்டிப்பாக வேலை செய்கிறது. ஒரு நேரத்தில் ஒரு வேலையை எடுத்துக் கொள்ளுங்கள். நாம் ஜேக் மற்றும் ரேச்சலோடு இணைந்து இந்த நாளைத் திட்டமிடலாம்.'' வழிபாட்டுக் கூடத்திற்கு வெளியே இருந்து, ரெபெக்காளை நோக்கி கையசைத்த ஜேக் மற்றும் ரேச்சலைச் சுட்டிக்காட்டினாள். லெவ்வும், ஆலனும் அவர்களை நோக்கி நடந்தனர்.

அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வீட்டை நோக்கி நடந்தனர். ஆலன் தன் தொண்டையைக் கணைத்து, ''உங்களிடம் கூறுவதற்கு ஒரு செய்தி உள்ளது என்றான். தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கும், நிலத்தை அளவிடுவதற்கும், மரங்களை நடவு செய்வதற்கும், வீடுகளை அமைப்பதற்கும் முற்பிதாக்களுக்குச் சில தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த விஷயங்கள் அனைத்தையும் நான் ஏற்கெனவே செய்திருப்பதால், இந்தப் பணிக்கு நான் தகுதியானவன் என்று கூறி ஆப்பிரிக்காவின் கானாவுக்குச் செல்லும்படி, முற்பிதாக்களில் ஒருவரான ஏனோக்கு என்னிடம் கேட்டுள்ளார்'' என்றான்.

லெவ் தனது மகனைப் பார்த்து பெருமிதத்துடன் முதுகில் தட்டினான். ''இப்பொழுதுதான் நாமிருவரும் சந்தித்துக் கொண்டோம், அதற்குள் நீ செல்கிறாய், நம்மால் ஒன்றாக இருக்க முடியாது. ஆனாலும் நீ ஒரு நல்ல நோக்கத்துடன் தொலைதூர இடத்திற்குச் செல்கிறாய், ஆலன். நான் எனது படிப்பில் கடினமாக உழைத்து நவீன தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொண்டால், ஒருவேளை நானும் உன்னோடு சேர்ந்து கொள்ள முடியும். ஆனால் நான் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறைய இருக்கிறது. நீ ஓர் அதிர்ஷ்டசாலி இளைஞன் ஆலன்'' என்று லெவ் பாராட்டினான்.

## பாம்புகள் பற்றிய கவலை

"இந்த வேலை வாய்ப்பைப் பற்றி நான் உற்சாகமாக உணர்கிறேன் ஆனால் அந்தக் கொடிய விஷமுள்ள பாம்புகள் மட்டும் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும். மாம்பா பாம்புகள் ஓடுவதில் அவற்றை விஞ்ச முடியாது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். எதுவுமே நம்மை காயப்படுத்தவோ அல்லது அழிக்கவோ முடியாது என்று கிறிஸ்து கூறி இருப்பது, விலங்குகள் உலகத்தையும் உள்ளடக்கும் என்று நான் நம்புகிறேன்" என ஆலன் கூறினான்.

"ஆனியின் வகுப்புகள் முடிந்தவுடன் அவளும் உன்னுடன் இணைந்து கொள்ள விரும்புவாள் என்று நான் எண்ணுகிறேன் ஆலன். அவளுக்கு எப்போதும் பாம்புகளைப் பிடிக்கும்" என்று ஜேக் கூறினான்.

"அவளுக்கு இன்னும் கொஞ்சம் கட்டிடம் கட்டுவதிலும் மற்றும் நிலப்பரப்பளவை ஆய்வு செய்வதிலும் அனுபவம் இருந்தால், அவளும் நமது வெளிநாட்டு சேவைகளில் சேருவதற்குத் தயாராக இருந்திருப்பாள், எப்பொழுதும் விலங்குகளை இயல்பாகக் கையாளும் அவளது திறனும் எனக்குத் தெரியும்" என்று ஆலன் ஆனியைப் பற்றி கூறினான்.

காலை உணவிற்குப் பின்பு ஜேக் தன்னார்வத் தொண்டு செய்யும் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு நடந்துசெல்ல அவர்கள் முடிவு செய்தனர். ஜேக், சிறிய குழுவை முதலில் தனது துறைக்கு அழைத்துச் சென்றான்.

கணினி அறிவியல் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதைப் பார்த்து லெவ் ஆச்சரியப்பட்டான். கணினிகள் இன்னும் சிறியதாகவும், வேகமானதாகவும் மற்றும் மிகவும் நிலையானதாகவும் உள்ளன. அவைகள் இனி ஒருபோதும் செயலிழக்காது என்று ஜேக் கூறினான்.

"நீங்கள் எப்படியாவது இந்த ஏதேன் பழத்தைக் கணிணியின் தாய்பலகைக்குள் (மதர்போர்டிற்குள்) போட்டுவிடுவீர்கள் தானே? இந்தக்

கணினிகள் பழைய உலகத்தின் நோய்களை எதிர்க்கும் சக்தி கொண்டவைகள் என்று நான் நினைக்கிறேன்'' என்று கூறி லெவ் சிரித்தான்.

''உங்களது யோசனை சரிதான், ஆனால் மிகச் சரியானது அல்ல, அப்பா. கணினி வைரஸ்கள் மற்றும் திருடுபவர்கள் (ஹேக்கர்கள்) இங்கு இல்லை'' என்று ஆலன் கூறினான்.

''இத்தகைய முன்னேற்றங்களை உங்களால் நம்பமுடியாது, லெவ். தூசி இல்லாத மற்றும் வெப்பநிலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஓர் அறையின் ஜன்னலை ஜேக் சுட்டிக்காட்டினான். வரிசையில் இருந்து வரும் சிப்பை(சிறு மின்னணு உபகரணம்) வடிவமைக்க நான் உதவுகிறேன். இவற்றில் பல கணினிகள் ஆலனுடன் கானாவுக்கு அனுப்பப்படுகின்றன'' என்று ஜேக் கூறினான்.

''இன்னும் ஒரு வருஷத்தில் கானா நாடே தங்களுக்குத் தேவையான கணினியை சொந்தமாக உற்பத்தி செய்து கொள்ளும்.'' ஆலன், தனது தந்தை நம்பமுடியாமல் புருவங்களை உயர்த்துவதைப் பார்த்தான். ''உண்மையாக அப்பா, தேசமானது, முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வரும்போது முன்னேற்றங்கள் விரைவாக நடக்கிறது. உலகெங்கிலும் இன்னும் இருக்கும் வறுமையானது, அவர்கள் ஏதேன் பழத்தைப் பெற்றுக்கொண்ட பின்பும், அடிப்படைக் கட்டிடத் திறன்களைக் கற்றுக்கொண்ட பின்பும் எளிதாக மாற்றப்படும். தேசங்கள், முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வருவதற்கு முன்வராததே முக்கியத் தடையாக உள்ளது'' என்று ஆலன் விளக்கினான்.

''முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வருவதற்கு அவர்களுக்கு என்ன பிரச்சனை? நாடுகள் தங்களது ஒத்துழைப்பைக் கொடுப்பதற்கு, ஏதேன் பழம் மட்டுமே போதுமானதோர் காரணமாக இருக்கவில்லையா?'' என்று லெவ் கேட்டான்.

''சில நாடுகள், உண்மையில் இஸ்ரயேலிடம் உதவி பெறத் தயங்குகின்றன. பழைய உலகின் தப்பெண்ணங்களும், பெருமையும் இன்னும் உள்ளது'' என்று ரேச்சல் கூறினாள்.

மேசியாவின் திட்டங்கள் தோல்வியடையவோ அல்லது ஏமாற்றமடையவோ செய்யாது என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நிலவரத்தைப் பார்த்தால் சிக்கலான மற்றும் சவாலான காரியமாக இருப்பதுபோல லெவ்விற்குத் தோன்றியது

"தொழிற்சாலையின் இயங்கு திறமையால் அந்தப் பகுதிக்குத் தேவையான கணினி மற்றும் வீட்டிற்குத் தேவையான அனைத்து மின்னணு உபகரணங்களையும் எளிதாக வழங்க முடிகிறது. அடுத்தடுத்து வரும் மற்ற நாடுகளுக்கும் உபகரணங்களை அனுப்ப முடியும் என்பதையும், இன்னும் மூன்று ஆண்டுகளில் உலகம் முழுவதுக்கும் தேவையானவைகள் வழங்கப்பட்டிருக்கும்" என்றும் ஜேக் தெரிவித்தான்.

"இந்தத் தொழிற்சாலைக்கான தானியங்கி கருவிகள் வடக்கே உள்ள ஓர் ஆலையில் உற்பத்தி செய்யப்படுகின்றன, பல தொழிற்சாலைகளை அமைக்கத் தேவையான அனைத்துப் பொருட்களும் அடுத்த வாரம் கானாவிற்குச் சென்றடையும். இதுபோன்ற ஒரு தொழிற்சாலை கானாவில் முழு திறனில் செயல்படுவதற்கு ஒரு வருடம் ஆகும். ஆலன் அவற்றை அமைக்க உதவுவான். மேலும் அவற்றை இயக்கவும், பராமரிக்கவும் மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்" என்று ஜேக் தொடர்ந்து விளக்கினான்.

"மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது" என்று லெவ் தனது கருத்தினைத் தெரிவித்தான்.

"உயிர்த்தெழுப்பப்பட்டவர்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் இவ்வாழ்க்கைக்குத் தேவையானவைகளைக் கொடுப்பது எளிதான காரியம்தான். மக்கள் தங்கள் சிந்தனையை மாற்றிக்கொள்வதும், கல்லான இருதயம் - சதையாக மாறுவதுமே உண்மையான சவாலாக இருக்கும்" என்று லெவ் கூறினான்.

## எபிரெய மொழி

லெவ், முந்தைய நாளில் தனது கட்டுப்பாட்டை இழந்து ரூபனிடம் கோபம் கொண்டதை நினைத்து முகம் சிவந்தான். "இருதயமாற்றம் என்பது உண்மையாகவே ஒரு சவாலாகத்தான் இருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்." அவன் தனது சங்கடத்திலிருந்து கவனத்தை திசை திருப்ப, "நீங்கள் மொழிப் பிரச்சனையை எப்படி சமாளிப்பீர்கள்?" என்று ஆலனிடம் வேகமாகக் கேட்டான்.

ஆரம்பத்தில் அவர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. ஏதேன் பழத்தின் காரணமாக நான் பெற்றிருக்கும் துல்லியமான ஞாபகத்திறனுக்கு நன்றி, என்னாலும் அவர்களது மொழியைச் சுலபமாகக் கற்றுக்கொள்ள முடிந்தது. மேலும் அவர்களும் எளிதாகப் படிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட நவீன எழுத்துக்களையும், அரபிக் எண்களையும் மற்றும் பின்ன முறைகளையும்(டெசிமல்) கொண்ட நவீனமயமாக்கப்பட்ட எபிரெய பதிப்பைக் கானாவாசிகள் கற்றுக்கொள்வார்கள் என்று ஆலன் விளக்கினான்.

"எபிரெய மொழியையா?" அனைத்து நாடுகளும் எபிரெய மொழியைக் கற்கின்றனவா? இராணுவ வீரர்கள் அணிவகுத்து வருவதைப்போல ஹிட்லர் வந்து நின்று தன் குதிகால்களை தரையில் ஓங்கியடித்து, ஓசை எழுப்பி எபிரெய மொழியைப் பேச முயற்சிப்பதை என்னால் கற்பனை செய்யமுடியவில்லை!" தான் கேலியாகக் கூறியது சூழ்நிலைக்குப் பொருத்தமற்றதாக இருப்பதைக் கண்டு, தன் பேச்சினைத் திசை மாற்றும்படி "ஏதாவது சாப்பிடுவோமா, சாப்பிடும் நேரம் வந்துவிட்டதே?" என்று லெவ் கேட்டான்.

## திருமதி மில்லி

லெவ்வும், அவனது குடும்பத்தினரும் மேஜையில் இருந்த நண்பர்களுக்கிடையே நடந்து கொண்டிருந்த கலகலப்பான கலந்துரையாடலில் இணைந்தனர்.

"எனக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு நான் தற்கொலை செய்துகொண்டேன்" என்று ஒரு பெண் வெளிப்படையாகப் பேசினாள். "எனக்கு குழந்தை இல்லாததால் மிகுந்த மனச்சோர்வைடைந்து இருந்தேன், என் கணவரும் அவருடைய குடும்பமும் என்னை வெறுத்தனர். என் கணவர் ஓர் இளம் பெண்ணிற்காக என்னைக் கைவிட்டுவிட்டார். முதல் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தியினாலும், தோல்வியாலும் எதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை, எனது இரண்டாவது கணவரையும் நான் புரிந்துகொள்ளவில்லை. என்னால் தற்கொலை செய்துகொள்ளும் முடிவைத்தான் எடுக்க முடிந்தது" என்று அப்பெண் கூறினாள்.

அந்தப் பெண்ணிடமிருந்து வெளிப்பட்ட உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் கண்ட லெவ் "ஆனால் நீங்கள் இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களே - செல்வி - அல்லது திருமதி ___," என்றவாறே லெவ் வார்த்தைகளுக்காகத் தடுமாறினான்.

"ஏனென்றால் நான் இப்போது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறேன், "என் பெயர் மில்லி," என்று கூறி அந்த இளம்பெண் சிரித்தாள். நீங்கள் திரு.......? என்று அவன் பெயரை அறியும் பொருட்டு கேட்டாள்.

நான் "திரு.ஆரோன், திரு.லெவ் ஆரோன்" என்று கூறி லெவ் சிரித்தான்.

"நான் உயிர்த்தெழுந்தவுடன் எனக்குத் தெரியாத சிலர் எனக்கு உதவினார்கள். மேலும் எனக்கு முற்பிதாக்களில் ஒருவரான அன்னாள் அறிமுகமானார், அவரும் என்னைப்போலவே குழந்தையின்றி இருந்தார். அன்னாளின் கணவனின் இரண்டாவது மனைவி, நிறைய பிள்ளைகளைப் பெற்றிருந்ததினிமித்தம் மற்றவரின் துன்பத்தை மகிழ்வோடு நோக்கும் அவளின் குணத்தால் உண்டான துயரத்தையும்

அன்னாள் அனுபவித்திருந்தார். என்னைப்போலவே அவரும் அனைத்து அனுபவங்களையும் பெற்றிருந்ததால், எனது மனச் சோர்விலிருந்து அவர் என்னை மீட்டெடுத்தார். இப்போது நான் என் இதயத்தில் மேசியாவோடு சமாதானம் கொண்டிருக்கிறேன், நான் இதுவரை அறியாத பெலத்தையும், மகிழ்ச்சியையும் காண்கிறேன். மேலும் மேசியா, அன்னாளை ஆசீர்வதித்ததைப் போலவே என்னையும் ஆசீர்வதித்தார். இப்பொழுது ஃபிராங்க்கும், நானும் முற்பிதாக்களின் கீழ் வந்த அதிகம் அறியப்படாத தேசத்திலிருந்து, வாலிப வயதிலேயே குழந்தையைப் பெற்றுக்கொண்ட ஒரு பெண்ணால் தத்துக் கொடுக்கப்பட்ட குழந்தையை வளர்க்கிறோம். மில்லி மீண்டும் சிரித்தாள். நான் இந்தக் குழந்தையை முழு மனதுடன் நேசிக்கிறேன். இதுபோன்ற கசப்பான ஏமாற்றங்களை நான் அனுபவிக்காமல் இருந்திருந்தால், இந்த மகிழ்ச்சியின் ஆழத்தை நான் அனுபவித்திருக்க முடியாது. எனது முதல் கணவரும் அவரது மனைவியும் ஒரு மாதத்தில் உயிர்த்தெழுப்பப்பட உள்ளனர். நானும், ஃபிராங்க்கும் அவர்களுக்குத் தேவையானவற்றை தயார் செய்து வருகிறோம்" என்று மில்லி கூறினாள்.

லெவ் நம்ப முடியாமல் மில்லியைப் பார்த்தான். "கல்லான இருதயம், சதையாக மாற்றம் அடைதல்" அவன் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டான். அவனால் கற்பனைசெய்ய முடியாத ஓர் அதிசயிக்கத்தக்க இருதயமாற்றத்தைக் கண்ணால் கண்டான் - புலம்பலின் இரட்டு ஆனந்தக்களிப்பாக மாறியது. இந்த மாற்றங்கள் வெளிப்படையாக மேசியாவின் வல்லமையையே காட்டுகிறது என்ற உணர்வினால் உணர்ச்சிவசப்பட்டு லெவ் திணறினான்.

"நன்றி, திருமதி மில்லி" என்று கூறியவாறே லெவ் தனது கையை நீட்டினான்.

"திரு.லெவ் ஆரோன்" என்று மில்லி அவனது கரங்களைப் பற்றி "நாங்கள் உங்களைச் சந்தித்ததில் மிகுந்த சந்தோஷமடைகிறோம்" என்று கூறி அவனது கையைக் குலுக்கினாள்.

## ரெபெக்காளின் இரகசியம்

லெவ், அவளது சமையலறையில் இருந்த மேஜையின் குறுக்கேயிருந்து ரெபெக்காளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு மெழுவர்த்தியிலிருந்து வந்த ஒளி அவளது முகத்தைப் பிரகாசிக்கச் செய்தது. அவர்கள் எளிய இரவு உணவை முடித்து விட்டிருந்தனர். மேலும் அன்றைய நாளின் நிகழ்வுகள் உற்சாகத்தைக் கொடுத்திருந்தன. அவர்களின் சொந்த மகன் ஆலன், கானாவுக்குச் செல்கிறான். கணினிகள் அதிக அளவில் முன்னேற்றம் பெற்றுள்ளன. இன்னும் மூன்று ஆண்டுகளில் கணினிகளின் புதிய தொழில்நுட்பம் உலகம் முழுவதும் சென்றடையும். லெவ்வால் "திருமதி மில்லி" மற்றும் அவளது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றிப்பேசுவதை நிறுத்த முடியவில்லை. "திருமதி மில்லி குறித்து எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது. அவள் விரக்தியினால் தன்னுடைய வாழ்க்கையையே அழித்துக் கொண்டாள். ஆனால் இப்போது அவளைப் பார், பழையவைகளிலிருந்து விடுபட்டு புதுப்பொலிவுடன் ஒரு குழந்தையை வளர்க்கும் பெண்மணியாக இருக்கிறாள். கசப்புணர்வின் எவ்விதமான சுவடும்கூட அவளிடத்தில் இல்லை, என்னால் அதை நம்ப முடியவில்லை. அவளும், ஃபிராங்க்கும், அவளது சுயநலமான கணவன் மற்றும் அவனது இரண்டாவது மனைவியின் உயிர்த்தெழுதலுக்காக உண்மையாகவே தயார் செய்து வருகின்றனர்" என்று லெவ் கூறினான்.

திடீரென்று ரெபெக்காள் அழ ஆரம்பித்துவிட்டாள். அதிர்ச்சியில் லெவ் ஒரு கணம் அமைதியாகிவிட்டான். தான் எதையும் கவனிக்காது பேசிக் கொண்டே இருந்ததை அப்போதுதான் உணர்ந்து, ரெபெக்காளிடம் சென்று அவளது கைகளைப் பற்றி "ரெபெக்காள் என்ன ஆயிற்று?" என்று கேட்டான்.

தன்னுடைய கரங்களுக்கு மேல் இருந்த லெவ்வின் கரங்களையே ரெபெக்காள் பார்த்தபடி "என்னுடைய கடந்த காலம் பற்றிய ஒன்றை உங்களிடம் சொல்ல வேண்டும், லெவ்" என்று மெல்லிய குரலில் கூறினாள்.

"நீ என்னிடம் சொல்லலாம், ரெபெக்காள். நீ சொல்ல வேண்டியதைச் சொல்லும்வரை நான் பேசாமல் இருப்பேன் என்று நான் உனக்கு உறுதியளிக்கிறேன்..." என்று லெவ் கூற, ரெபெக்காள் தன் கண்ணீரின் ஊடே லேசாகச் சிரித்தாள்.

"உங்களிடம் இதைச் சொல்வதற்கு இதுதான் சரியான நேரம் என்று நான் நினைக்கிறேன், குறிப்பாக இன்று மதியம் மில்லியின் அனுபவங்களைக் கேட்ட பின்பாக நான் இந்த முடிவிற்கு வந்தேன்." ரெபெக்காள் பெருமூச்செடுத்தாள், மேலும் லெவ்வின் கரங்களிலிருந்து தனது கரங்களை விலக்கிக் கொண்டாள். "நான் பருவ வயதில் இருந்தபோது, எனக்கு இருந்த ஒரு தொடர்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அதனால் நான் கற்பமடைந்துவிட்டேன். பிறகு அந்தக் கருவைக் கலைத்தும் விட்டேன்" என்று ரெபெக்காள் தேம்பி அழுதாள். "அந்தக் குழந்தை உயிர்த்தெழுப்பப்படாது, ஏனென்றால் கரு வளர்ச்சியடைவதற்கு முன்னதாகவே... நான் கலைத்துவிட்டேன்" என்று ரெபெக்காள் அழுகையினூடே பேச முயன்றாள்.

"நான் கலைத்த அந்தக் கரு - நான் ஒருவேளை அதை அழிக்காமல் இருந்திருந்தால் - அது ஜீவனோடிருந்திருக்கும். மில்லி பிறப்பிலேயே கைவிடப்பட்ட குழந்தைக்கு ஆதரவளிக்கிறாள். ஆனால் நான் அழித்த அந்தக்கரு - ஒருபோதும் ஜீவனை அடைய முடியாது" என்று கூறி ரெபெக்காள் அவளது முகத்தை கைகளால் மறைத்துக் கொண்டு மேலும் அழுதாள்.

அவளது அழுகை லெவ்வைப் பாதித்தது. தனது அன்புக்குரிய ரெபெக்காளை அமைதியாகப் பார்த்தான். அவளுக்கு ஆறுதலளிக்கும்படி சொல்வதற்கு ஏதாவது இருக்கிறதா என்று யோசிக்க முயன்றான்.

"இவ்வளவு வருடங்கள் இதை உனது இதயத்தில் வைத்திருந்தது என்பது கண்டிப்பாக உனக்கு மிகவும் கஷ்டமாக இருந்திருக்கும் ரெபெக்காள். நீ "சுதந்திரமாக" இருக்க விரும்பும் பெண் என்று எனக்குத் தெரியும். குறிப்பாக குழந்தை உயிர்த்தெழுப்பப்படாது என்பது இன்னும் கடினமாக இருக்கும் என்று எண்ணால் உணர முடிகிறது" என்று லெவ் வருத்ததத்துடன் கூறினான்.

ரெபெக்காள் தனது கைகளால் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு லெவ்வைப் பார்த்தாள். "உண்மையில் நான் ஒழுக்கக்கேடாக இருந்ததை, நடைமுறையில் சுதந்திரமாக இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தேன் என்று நினைக்கிறேன். ஹார்மோன்கள் என்னைத் தூண்டியபோது, நான் சோதனையில் விழுந்தேன். எனது ஒழுக்க கேடான நடத்தை இன்னும் பெரிய பாவத்திற்கு வழிவகுத்தது. அதற்கும் சுதந்திரத்துக்கும் சம்பந்தம் இல்லை. நான் விரும்புவதைப் பெறுவதற்கு சுதந்திரத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்தினேன். இறுதியில் அது மிகுந்த வலியை ஏற்படுத்தியது. மேலும் கரு முழுமையாக வளர்ச்சி அடைந்து பிறப்பதற்கு முன்பாக அதை அழித்தும் விட்டேன்" என்றாள்.

லெவ் எழுந்து ரெபெக்காளுக்கு அருகாமையில் சென்றான். பின்பு அவளது கைகளைப் பற்றி தன்னிடமாக இழுத்து அவள் எழுவதற்கு உதவினான். அவன் அவளை சோபாவுக்கு அழைத்துச் சென்று அவளருகில் அமர்ந்தான். அமைதியான அம்மாலை வேளையில் அவளை அவனது தோளோடு அணைத்தான்.

"உனக்குத் தெரியும் ரெபெக்காள், நான் மேசியாவை ஏற்றுக்கொண்டு அவரோடு ஒப்புரவாகிவிட்டேன். தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது மற்றும் மனந்திரும்புதல் எச்சரிக்கையைத் தருவதோடு ஒருவரை சுத்திகரிக்கும் முயற்சியையும் உண்டாக்குகிறது. அதைத்தான் உன் வாழ்க்கையில் நான் பார்க்கிறேன். லௌகீக துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்குவது

இல்லை. ஆனால் ஊக்கமின்மையையும் வலியையுமே தருகின்றது" என்று லெவ் ஆறுதலாகப் பேசினான்.

நீண்ட நேரம் கழித்து, ரெபெக்காள் மீண்டும் பேசினாள். அவளது குரல் சோர்வாகவும் பெலனின்றியும் இருந்தது. "நான் கூறியவைகளைக் கேட்டதற்கு நன்றி, லெவ். ஆனால் இன்னும் ஒரு விஷயம் நான் உங்களிடத்தில் சொல்ல வேண்டும்." அவள் தயக்கத்துடன்... "எனது அந்தக் கருவின் தந்தை ரூபன் மேயர்" என்றாள்.

லெவ் பேச்சற்று இருந்தான். தழும்புகள் இருந்த சுவடே தெரியாத தன்னுடைய மென்மையான நெற்றியினை லெவ் தடவினான், இன்னும் வெளிப்படையாக வெளிப்படுத்த விரும்பாத தனது சொந்த இரகசியங்களின் அழுத்தத்தால் உண்டான பாரத்தினையும் உணர்ந்தான். ரூபனுடைய பழிவாங்கும் நினைவுகள், அவனின் மனதில் திரும்பியதால் ஏற்பட்ட பொறாமையினாலும், அவமானத்தினாலும் லெவ் கோபமடைந்தான். பின்பு பெரும் துக்கம் தன்னை மேற்கொள்வதை அவன் உணர்ந்தான். தனது வாழ்க்கையில் ரூபனின் தலையீட்டால் உண்டான இந்தப் புதிய நிகழ்வின் மீதான கோபத்துடன், ரெபெக்காளின் வருத்தத்தை எப்படிச் சரிசெய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் ரெபெக்காளின் பக்கத்தில் நீண்ட நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பின்பு "நான் வீட்டிற்குச் செல்கிறேன் ரெபெக்காள். மிகவும் சோர்வாக உள்ளேன், என்னால் யோசிக்க முடியவில்லை" என்று கூறி லெவ் வாசலுக்குச் சென்று இரவின் இருளில் மறைந்தான்.

***

**"நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படிச் செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூறும்" (சங்கீதம் 51:8)**

# அத்தியாயம் - 8

ரெபெக்காள் தன்னிடம் சொன்ன இரகசியத்துடனும் - தான் இன்னுமும் அவளிடம் வெளிப்படுத்தாத இரகசியத்துடனும் லெவ் போராடிக் கொண்டிருந்தான். லெவ் படுக்கையில் இரவு முழுவதும் தூங்காமல் புரண்டு கொண்டிருந்தான். ரூபன் மற்றும் ரெபெக்காளைப் பற்றிய நினைவுகள் அவனைக் கலங்கச் செய்தது. ஆனால் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டால், மற்றவரும் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதை அவன் ஆழ்மனதில் நன்கு அறிந்திருந்தான். அன்யாவைப் பற்றியும், தனக்கு அன்யாவுடன் நடந்த முதல் திருமணம் சோகத்தில் முடிந்திருந்ததைப் பற்றியும் இதுவரையிலும் அவன் ரெபெக்காளிடம் சொன்னதே இல்லை.

மன உளைச்சலோடு லெவ் தனது கணினியை திறந்து எவ்விதமான இலக்குமில்லாமல் வலைதளத்தில் உலாவத் தொடங்கினான். மேசியாவின் ஆட்சியை ஏற்றுக்கொண்ட புதிய நாடுகளின் சமீபத்திய முன்னேற்றங்களை அவன் பார்வையிட முயன்றான். ஆனால் அவனால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. பின்னர் அவன் உயிர்த்தெழுதலுக்கான வளைதளத்தைத் திறந்தான். அதில் தனிநபர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த தேதிகள் பட்டியலிடப்பட்டிருந்தன. தெரிந்த பெயர்கள் ஏதாவது உள்ளனவா என்று அவன் அந்த நீண்ட பட்டியலில் தேடிக் கொண்டிருந்தான். "அன்யா ஸ்டீன் ஆரோன்" என்ற பெயரைப் பார்த்ததும் லெவ்வின் கண்கள் உறைந்தன. அவளது பெயரை

எந்தவிதமான உணர்ச்சியும் இன்றிப் பார்த்தான். பின்பு தொடர்ந்து வாசித்தான். அன்யா ஸ்டீன் இன்னும் ஆறு மாதங்களில் உயிர்த்தெழுப்பப்படுவாள். சுருக்கமான அவளது சுயசரிதைக் குறிப்பானது, ஜீன் 15 அன்று எரிகோவில் பதுங்கியிருந்த ஹமாஸ் இராணுவ பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட ரஷ்ய யூத குடிமகள் என்று கூறி இருந்தது.

லெவ் பதட்டத்தில் நெற்றியைத் தடவியபடி, முகத்தில் வேதனையுடன் "அன்யா" என்று மெல்லிய குரலில் உச்சரித்தான். அவளுடைய துயர மரணம் நிகழ்ந்த நாளிலிருந்து இன்று வரை அவன் அவளுடைய பெயரை உச்சரிக்கவேயில்லை. அவனுக்குள் இருந்த உணர்வுகள் எழுப்பப்பட்டன. அன்யா என்ற பெயருக்கே உரிய அவளுடைய அழகிய கருவிழிகளை லெவ் நினைத்துப்பார்த்தான்.

லெவ் அவளைக் குறித்த தனது நினைவுகளை அடியோடு ஒதுக்கிவிட மனப்பூர்வமாகத் தீர்மானித்திருந்தான். அவளுடைய மரணத்தைக் குறித்த சிந்தனையோடு வாழவோ அல்லது அதைக்குறித்து யாரிடமும் பேசவோ அவன் விரும்பவில்லை. அவன் கணினி மேஜையின் மீது சாய்ந்து தனது கைகளால் தலையைத் தாங்கியவாறு அமர்ந்தான்.

## இரவின் இருள்

இராணுவத்தில் சேர்ந்த அவனது பதினெட்டாம் வயதின் கோடைகாலத்தில், எதிர்பாராமல் ஏற்பட்ட சந்திப்பின்போது லெவ் அவள் மீது காதல் கொண்டான். அன்யா, எருசலேம் டைம்ஸ் பத்திரிக்கையின் வளர்ந்து வரும் பத்திரிக்கையாளராக இருந்தாள். லெவ், இராணுவத்தில் தனியார் குழுமத்தில் இருந்து சேர்ந்து இருந்தான். அவர்கள் ஒரு சில சந்திப்புகளுக்குப் பிறகு திருமணம் செய்து கொண்டனர்.

அவள் தன்னுடன் வேலை செய்து வரும் மற்றொரு பத்திரிகையாளருடன் இணைந்து ஒரு கட்டுரையின் இறுதி வரைவை எடுப்பதற்காகவும், அவளுடைய நோய்வாய்ப்பட்ட சகோதரியைப் பார்ப்பதற்காகவும் செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தாள். அவள் எருசலேமுக்கு புறப்படும்போது தனது வெளிர் ஆலிவ் பச்சை நிறத்திலான இராணுவ ஜாக்கெட்டை லெவ் அவளது தோள்களின் மீது போர்த்தினான்.

"இன்றிரவே வண்டியை ஓட்டிக்கொண்டு திரும்பி வர வேண்டாம் அன்யா, இரவில் வருவது மிகவும் ஆபத்தானது என்றான்". அவள் வீட்டை விட்டு வெளியேறும்போது லெவ், அவளது தோள்களைப் பிடித்து அவள் கண்களை ஆழ்ந்த அக்கறையோடு பார்த்தான்.

"கவலைப்படாதே அன்பே, நான் தனியாகச் செல்லமாட்டேன். நான் கவனமாக இருப்பேன். நான் செய்ய வேண்டிய முக்கியமான வேலையைத் தவிர்த்து வேறு எதற்காகவும் ஒரு நிமிஷம்கூட நான் உங்களிடமிருந்து பிரிந்து இருக்க விரும்பவில்லை" என்று அன்யா கூறினாள்.

"அன்யா - தயவுசெய்து" என்று லெவ் ஏதோ கூறவரும் போதே...அன்யா விரைவான ஒரு முத்தத்துடன் அவனது வேண்டுகோளை இடைமறித்து வீட்டை விட்டு வெளியேறினாள்.

பல மணி நேரங்கள் கடந்துவிட்டது. பின்பு லெவ், அவள் கிளம்பும் நேரத்தில் தனக்கு ஏற்பட்ட கவலையை நினைத்து அவளுடைய பத்திரிகையாளர் நண்பருக்குத் தொடர்பு கொண்டான்.

மாயாவின் குரல் தொடர்புக்குள் வந்தது.

"இருட்டுவதற்கு சற்று முன்பு, ஒன்றேகால் மணி நேரத்திற்கு முன்பே கிளம்பிவிட்டாள்" என்று லெவ் கூறினான். அவள் இப்போது

எரிகோவில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அவள் இன்னும் அங்கே வந்து சேரவில்லை என்பதை அறிந்து லெவ் பதட்டமடைந்தான்.

லெவ் வெளியே ஓடி தனது காருக்கு விரைந்தான். காரின் பாதையை விட்டு விலகியதால் அவனது காரின் டயர்கள் சரளைக் கற்களை எறிந்தன. அவன் எரிகோவை நோக்கி, கிழக்கு எருசலேம் வழியாக வேகமாக ஓட்டினான். அன்யாவின் அடையாளங்கள் ஏதாவது தென்படுமோ என்று வளைந்து நெளிந்து சென்ற சாலையினை உன்னிப்பாகக் கவனித்தவாறு ஓட்டினான். எரிகோ-எருசலேம் சாலை இரவில் இன்னும் செங்குத்தாக மற்றும் வளைந்து நெளிந்து தோன்றியது. உயரமான பாறைகள், இருபுறமும் அச்சுறுத்தும் காவலாளிகள் போல் காணப்பட்டன. எதிரே வரும் கார்களைக் காண முடியாத அளவுக்கு, வளைவுகளில் செலுத்த வேண்டிய வேகத்திற்கும் அதிகமாகவே காரை ஓட்டினான். அப்போது அங்கு அவன் கண்ட காட்சி அவனது இதயத்தை உடைத்து நொறுக்கியது.

லெவ், அந்த சாலையின் ஓரத்தில் பள்ளத்தாக்கு போன்ற பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி பிணைந்து கிடந்ததை மங்கலாகப் பார்த்தான். அவன் பிரேக்குகளை மிதித்ததில், அவனது கார் சுழன்று நின்றது. கையுறைப் பெட்டியில் இருந்த ஒரு டார்ச்லைட்டை எடுத்துக் கொண்டு இடிபாடுகளின் இடையே ஓடினான். டார்ச்லைட்டிலிருந்து வந்த சிறிய ஒளி, சிதைந்திருந்த உடல்களைக் காட்டியது, சிலரது உடல்கள் குண்டு வெடிப்பில் எரிந்திருந்தன மற்றும் சிலரது உடல்கள் தோட்டாக்களால் துளைக்கப்பட்டிருந்தன. அவன் மூன்றாவது வாகனத்தை அடைந்த போதுதான் அங்கே, நான்காவதாக ஒரு வாகனம் இருப்பதைப் பார்த்தான்.

தோட்டாக்களினால் துளைக்கப்பட்டிருந்த அன்யாவின் நீல நிற பிளேசரைப் பார்த்தபோது, அவனது இதயம் நொறுங்கியது. வண்டியின் கண்ணாடி நொறுங்கி இருந்தது. அது பள்ளத்தாக்கின் சரிவில் இருந்தது, வண்டி மேலும் கீழே இறங்காதவாறு ஒரு பெரிய பாறாங்கல் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. லெவ், விளக்கின் ஒளியை வேகமாகக் காரின் உட்புறத்தினுள் காட்டினான். இரத்தம், சிதறிய காகிதங்கள் மற்றும் கண்ணாடித் துண்டுகளின் சிதறல்கள் எல்லா இடங்களிலும் இருந்தன. அவன் காரின் மறுபக்கத்தில் விழுந்து மண்டியிட்டு தரையில் தேடினான். கிழிந்தும், இரத்தம் தோய்ந்தும் இருந்த அன்யாவின் உடைகளும் மற்றும் ஒரே சீராக வெட்டப்பட்ட அவனது கோட்டும் காலுக்கடியில் கிடந்தன. இரத்தம் தோய்ந்த ஆடைகளைத் தன் கைகளில் எடுத்து, அவனது தலையை அதில் புதைத்த படி "இல்ல்ல்லை!" என்று அலறினான். இச்சம்பவத்தின் போது தனது அன்யாவின் அழகான கருமையான கண்கள் எப்படிப்பட்ட பயத்தை வெளிப்படுத்தி இருந்திருக்கும் என்பதை லெவ் கற்பனைசெய்து பார்த்தான். அவன் மிகவும் தீவிரமாக அந்த இடத்தில் அவளது உடலைத் தேடினான், ஆனால் எந்தப் பயனும் இல்லை.

"இல்லைலை..." என்று அவன் மீண்டும் கத்தினான், அவனது குரல் தேம்பியவாறே அடைத்துக் கொண்டது. லெவ் அங்கிருந்தவற்றை நீண்ட நேரம் மண்டியிட்டு பார்த்துக் கொண்டிருந்தான். பின்பு சட்டென்று எழுந்து தனது காருக்கு விரைந்தான், வேகமாக இராணுவத்திற்கு அழைத்து அவர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான். தனது பிரியமானவளுக்கு இத்தகைய ஒரு காரியத்தைச் செய்தவனைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஓர் உந்துதலில் சாலையில் இன்னும் சிறிது தூரம் சென்று பார்க்க முடிவு செய்தான். வளைந்த சாலையில் செல்வதற்காக, ஓட்ட வேண்டிய

வேகத்தை விட இன்னும் வேகமாக காரை செலுத்தினாலும் வண்டி அவனது கட்டுப்பாட்டில் இருந்தது. அவன் அடுத்த வளைவில் காரைத் திருப்பிய போது, சாலையில் இருந்த ஓர் கூர்மையான பொருளின் மீது லெவ்வின் கார் ஏறியதில், முன்பக்க டயர் பறந்தது, வண்டி அவனது கட்டுப்பாட்டை இழந்தது. கார் சாலையிலிருந்து விலகியபோது, அந்நிலையைச் சமாளிக்க அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. கற்பாறைகள் மற்றும் மரங்களைப் பார்த்தவாறு, காதைச் செவிடாக்கும் அளவிலான விபத்தின் சத்தத்தைக் கேட்டான். பின்னர் இருளைத் தவிர வேறு எதையும் அவனால் பார்க்க முடியவில்லை.

## ஒரு மௌன நினைவகம்

அவன் கண் விழித்தபோது லெவ்வின் முழு உடலும் வலித்தது. ஒரு மருத்துவமனையில் தலையில் அடிபட்டு காயத்துடன் இருந்தான். மருத்துவமனையில் இருந்தபோதும் அவன் அன்யாவைப் பற்றி கடைசியாக அவன் கண்ட காட்சிகளின் நினைவுகளால் வேதனைப்பட்டான். அவளுக்கு என்ன நடந்திருக்கும் என்ற சிந்தனையைக்கூட அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வீட்டிற்கு வந்தபின்பு மீளமுடியாத அதிர்ச்சியிலும், உணர்ச்சியற்ற நிலையிலும், அன்யாவின் அனைத்து பொருட்களையும் அப்புறப்படுத்தினான். அந்த இரவு தொடர்பான எதைப் பற்றியும், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு அவன் அளித்த கடுமையான பதில்கள், அவளைப் பற்றிய எந்தவொரு குறிப்பையும் அறியமுடியாது தடுத்துவிட்டது.

லெவ்வின் மீதியிருந்த சேவை காலத்தின் பணிக்குத் திரும்பமுடியாத அளவிற்கு, அந்த விபத்தின் அதிர்ச்சியிலிருந்து மிகவும் மெதுவாக குணமடைந்தான். பின்பு அவன் எபிரெய

பல்கலைக்கழகத்தில் பொறியியல் வகுப்பில் மிகவும் கடினமானதென்று அவன் கண்டுகொண்ட பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து தன்னை அதில் மூழ்கடித்துக் கொண்டான். முன்பு தான் பெற்றிருந்த வலிமையை மீண்டும் பெற உடற்பயிற்சிகளை ஒழுங்காகச் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டான்.

பின்னர் லெவ் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ரெபெக்காளை மீண்டும் சந்தித்தான்.

அவன் தனது வலிமிகுந்த எண்ணங்களைப் புதைத்துவிட முயற்சி செய்தான். சில நிமிடங்களுக்கு முன்பு வரை அன்யாவின் பெயரை வெளியே ஒருபோதும் சொன்னதில்லை. அவனது நெற்றியில் இருந்த அழிக்கமுடியாத வடு ஒன்றே, அவன் அடைந்த வருத்தத்திற்கான வெளிப்படையான அடையாளமாக இருந்தது. அவன் ஒதுக்கித்தள்ள நினைத்த நினைவுகள் வடுவாய் இப்போது அவனது இதயத்தில் மட்டும் இருந்தது.

லெவ் சமையலறைக்கு நடந்துசென்று தனக்காக உயிர்த்தெழுதல் தேநீரைத் தயாரித்தான். அவன் சமையலறையில் இருந்த ஒரு நாற்காலியில் சரிந்து அமர்ந்து அதை நன்றியுடன் குடித்தான். அவன் எதையும் குறிப்பாக உற்றுப்பார்க்காது வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். தனது உடல் இலகுவாவதையும் மற்றும் இதயத்துடிப்பு இயல்பு நிலைக்குத் திரும்புவதையும் லெவ் உணர்ந்தான்.

லெவ் தான் சோர்வாக இருப்பதாக உணர்ந்தான் ஆனாலும் அவனால் உறங்க முடியவில்லை. தனது வாழ்க்கையில் இவ்வளவு கொடூரமான முடிவை அனுபவித்துவிட்டு உயிர்த்தெழுப்பப்பட்டு வரும்போது அது அன்யாவிற்கு எப்படியாக இருக்கும்? இது ரெபெக்காளுக்கு எப்படியாக இருக்கும்? கடைசியாக அவன் தொலைபேசியை அடைந்து ரெபெக்காளை அழைத்தான்.

"ரெபெக்காள் - உன்னை எழுப்புவதற்காக வருந்துகிறேன், நான் உன்னிடம் ஒன்றைக் குறித்துப் பேச வேண்டும" என்று லெவ் கூறினான்.

## வலியை எதிர்கொள்ளுதல்

அதிகாலையிலிருந்தே ரெபெக்காள், லெவ்வுக்காகக் காத்திருந்தாள். அவளது வீட்டின் முன்புறக் கதவைத் திறந்து நின்றபோது குளிர்ந்த காலைத் தென்றல் வருடியது. லெவ் தனது வீட்டை நோக்கி மெதுவாக நடந்து வருவதை ரெபெக்காள் பார்த்தாள். அவனுடைய முகபாவம் அவன் மனக்கலக்கத்தில் இருக்கிறான் என்பதை அவளுக்கு வெளிப்படுத்தியது.

"லெவ், என்ன ஆயிற்று?" என்று கதவினருகே வந்த அவனிடம் ரெபெக்காள் கேட்டாள். லெவ் தனது கைகளை அவளது இரண்டு தோள்களிலும் வைத்து அவளைத் தன்னிடம் நெருக்கமாக இழுத்தான்.

"நான் உன்னிடம் பேச வேண்டும்" என்றான்.

ரெபெக்காள் அவன் கையைப் பிடித்து, அவனை சோபாவுக்கு அழைத்துச் சென்றாள்.

"உயிர்த்தெழுதல் தேநீர் அருந்தலாமா?" என்று லெவ் பலவீனமாக கேட்டான்.

"சரி!" என்று அவள் கூறிவிட்டு, சோபாவின் பக்கத்தில் ஏற்கெனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்த தேநீரை இரண்டு கோப்பைகளில் ஊற்றினாள்.

லெவ், தேநீரைக் குடித்துவிட்டு பின்னால் சாய்ந்து கண்களை மூடி, பெருமூச்சு விட்டான். "ரெபெக்காள்" என்று தொடங்கினான், "எனக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தப் புதிய வாழ்க்கையைப் பற்றி, எனக்கு ஒரு வருத்தம் இருக்கிறது. நாம் உயிர்த்தெழுப்பப்பட்டபோது,

நாம் கடந்துவந்த ஒவ்வொரு நினைவுகளையும் ஞாபகத்தில் வைக்கும் திறன் நமது மனதிற்கு உள்ளது. அந்த நினைவுகளினால் உண்டாகும் வலியைத் தவிர்க்கும் திறனும் நமக்குள்ளது என்று நான் நினைக்கிறேன். நான் திரும்பி வந்த நாள் முதல் இதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.”

ரெபெக்காளின் கண்கள் அவனது ஒவ்வொரு வார்த்தைகளையும் கவனமாகக் கேட்கும்படி, லெவ்வையே பார்த்துக் கொண்டிருந்தன. மிக முக்கியமான ஏதோ ஒன்றை அவன் பகிர்ந்து கொள்ளப்போகிறான் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

லெவ் உயிர்த்தெழுதல் பட்டியலைப் பார்த்த கணத்தில் இருந்து தனது மனதில் பதிந்து இருந்த பெயரை மீண்டும் கூறினான். “அன்யா ஆரோன். ரஷ்யயூதர், ஜூன் 15 அன்று ஹமாஸ் பயங்கரவாதிகளால், எரிகோவில் நடந்த திடீர் தாக்குதலில் கொல்லப்பட்டாள்” அதைத் தொடர்ந்து, உயிர்த்தெழுதல் பட்டியலில் அவளைப் பற்றி அவன் கண்ட சுருக்கமான விளக்கத்தை மீண்டும் கூறினான். அதன் பின்னர் மெதுவாக, லெவ் தனது முதல் மனைவி அன்யாவைப் பற்றியும், அவள் எரிகோவுக்குச் சென்றதைக் குறித்தும், அதன் பின்பு அவளது வருகையின் தாமதத்தினால் ஏற்பட்ட கவலை குறித்தும், வளைந்து நெளிந்த எருசலேம் - எரிகோ சாலையில் பயத்தோடு அவன் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றதைப் பற்றியும் விவரித்தான். வெடித்துச் சிதறிய குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்த மூன்று கார்களையும், இரத்தத்தினால் தோய்க்கப்பட்டிருந்த உடல்களை எப்படி கண்டுபிடித்தான் என்பதையும், என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்கான சாட்சிகள் மரித்துப் போயிருந்ததையும் லெவ் விவரித்தான்.

லெவ்வினால் பேச முடியவில்லை, இருப்பினும் தொடர்ந்து பேசுவதற்காக லெவ் தனது நெற்றியின் இருபுறமும் தன்னுடைய கைகளைக் கொண்டு அழுத்தினான்.

"சரிவின் சிறிது தூரத்தில் நான் அவளது கார் - நீல நிற பிளேசர் இருந்ததைக் கண்டுபிடித்தேன் - முழுவதும் தோட்டாக்களின் துளைகளால் நிறைந்திருந்தன - எல்லா இடங்களிலும் கண்ணாடித் துண்டுகள் மற்றும் இரத்தம் இருந்தது - நான் அவளைத் தேடினேன் - என்னால் கண்டுபிடிக்க முடிந்தது எல்லாம்... அவன் திடீரென்று நிறுத்தினான். ரெபெக்காள் அவனது தோள்மீது தன் கையை வைத்தாள், "என்னால் கண்டுபிடிக்க முடிந்தது எல்லாம் - கிழிந்த - அவளது ஆடைகள், சிதறியிருந்த இரத்தமும் தான்........" என்னால் இவைகளைத்தான் கண்டுபிடிக்க முடிந்தது, அன்யாவை எவ்வளவு தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று கூறி லெவ் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தேம்பி அழுதான்.

"நான் இருக்கிறேன் லெவ்" என்று ரெபெக்காள் புரிந்துகொள்ளுதலுடன் மென்மையான குரலில் கூறினாள்.

நான்அவளிடம் கொடுத்திருந்த கோட்டை அந்த இடத்தில் பார்த்தேன். "நான் அவளுக்கு கொடுத்த - ஜாக்கெட் - அது என்னுடைய தவறுதான்" என்று லெவ் அழுதான்.

"நான் என் கோட்டை அவளிடம் கொடுத்திருந்தேன், இராணுவத்தின் அடையாளம்(emblem)... இருந்த அந்தக் கோட்டை... பயங்கரவாதி பார்த்துவிட்டான்... இஸ்ரேலிய இராணுவத்தின் மீதான அவனது ஆத்திரத்தை... அவள் மீது...காட்டிவிட்டான்." லெவ் கவலையான குரலுடன் தொடர்ந்தாலும் இயல்பைவிட அவனுடைய குரல் சத்தமாக ஒலித்தது.

"ஓ, எவ்வளவு பயங்கரமானது, லெவ்" ரெபெக்காள் தனது கண்களில் கண்ணீரோடு கூறினாள்.

"இதுவரை என்னால் இதைப் பற்றி பேச முடியவில்லை. நான் கோபமாக இருந்தேன் - யார் மீது என்று தெரியவில்லை - ஹமாஸ் மீதா,

உலகத்தின் மீதா, தேவன் மீதும்கூட மறைமுகமான கோபம் இருந்திருக்கலாம். நான் மிகவும் குற்ற உணர்வுடன் இருந்தேன். எனது வலியிலிருந்து என்னை தனிமைப்படுத்திக் கொண்டேன், இந்த நினைவுகளிலிருந்து என்னைக் காத்துக் கொள்வதற்காக கடினமான பாடங்களைத் தேர்ந்தெடுத்தது போன்ற பல்வேறு வழிமுறைகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். எதிர்கொள்ள முடியாத அளவிற்கு இந்த வலி என்னால் தாங்க முடியாததாய் இருந்தது" என்றான்.

ரெபெக்காள் இறுதியாகப் பேசினாள். "இதைப் பற்றின ஒரு பகுதி எனக்குத் தெரியும்" என்று அமைதியாகக் கூறினாள். "நீங்களும், நானும் விரும்பத் தொடங்கிய பிறகு உங்கள் குடும்பத்தினர் எனக்கு சிலவற்றை மட்டும் தெரிவித்தனர். நீங்கள் ஒரு பெரிய விபத்தில் உங்கள் முதல் மனைவியை இழந்துவிட்டீர்கள் என்றும், நீங்கள் பயங்கரவாதிகளைத் தேடிச் சென்றபோது, கார் விபத்தில் மாட்டிக் கொண்டீர்கள் என்றும் உங்கள் குடும்பத்தினர் கூறினார்கள். மேலும் அதைப் பற்றின எதையும் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டு வரவேண்டாம் என்றும் உங்களது குடும்பத்தினர் என்னை எச்சரித்திருந்தனர், அதனால் நான் எதையும் உங்களிடம் கேட்டதில்லை. உங்கள் நெற்றியில் வடுவும், இருதயத்தில் காயங்களும் இருந்தன என்று எனக்குத் தெரியும். நான் நடந்தவற்றிற்காக மிகவும் வருந்துகிறேன்" என்றாள்.

"நீங்கள் அன்யாவை நேசித்தீர்கள், அவள் குளிராதவாறு இருப்பதற்காக உங்கள் கோட்டை அவளிடம் கொடுத்தீர்கள் அவ்வளவுதான். அது உங்களது தவறு அல்ல. கட்டுப்படுத்த முடியாத ஆத்திரம் ஹமாஸ் இயக்கத்தினரின் இருதயத்தை நச்சுப்படுத்தி இருந்ததற்கு நீங்கள் பொறுப்பல்ல. லெவ் தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று ரெபெக்காள் கண்ணீரோடு கெஞ்சினாள்.

லெவ் மறுமொழியாக எதுவும் சொல்லவில்லை. அவன் சோபாவில் சாய்ந்து கிடந்தான். அவன் சோர்வாக இருப்பதை ரெபெக்காள் புரிந்துகொண்டு அவனது கையைப் பிடித்துக் கொண்டாள். லெவ் மிகவும் ஆழமாக நேசித்த கருமையான-விழிகளைக் கொண்ட அன்யாவை, ரெபெக்காள் கற்பனையில் பார்க்க முயன்றாள். அவனது கடுந்துயரமான நினைவுகளுக்காகவும், அவ்வலியை எதிர்கொள்ள முடியாமல் இருந்த அவனது இயலாமைக்காகவும், அன்யாவின் கடைசி கொடூரமான தருணங்களுக்காகவும் அவள் அழுதாள். அன்யா, இன்னும் ஆறு மாதங்களில் உயிர்த்தெழுந்து வரப்போகிறாள்.

"ஓ கர்த்தாவே, நான் லெவ்வுக்காக மட்டுமல்ல, எனக்காகவும் ஜெபிக்கிறேன். லெவ் எப்போதும் நேசிக்கும் முதல் பெண்ணான அன்யாவை வரவேற்பதற்கும், மனமுவந்து அவளை ஆறுதல்படுத்துவதற்கும் என்னைத் தயார் ஆக்குங்கள்" என்று அவள் அமைதியாக ஜெபித்தாள்.

## என் மேலுண்டான அந்தகாரம், என் இளைப்பாறுதல் கன்மலையே

லெவ் எழுந்துவிடாதபடி ரெபெக்காள் மெதுவாக நடந்தாள். குளித்து, உடைமாற்றி அவளது பழத்தோட்டத்தில் இருந்து ஏதேன் பழங்களைச் சேகரித்தாள். பின்பு அவள் அங்கிருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்தாள், மனதில் அநேக காரியங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் மீதமுள்ள பழத் துண்டை சாப்பிட்டவாறே, மெதுவாக வழிபாட்டு ஆராதனைக்குச் செல்வதற்காக நடந்தாள். லெவ்வை ஆறுதல்படுத்துவதற்கும், தன்னை ஆறுதல்படுத்துவதற்கும் மற்றும் அன்யாவை எதிர்கொள்வதற்குமாக தனது சிந்தையை ஜெபத்தில் ஈடுபடுத்தினாள். இந்த வாழ்க்கையில் பல புதிய மாற்றங்கள்

"மீண்டும் புதியதாகத் தொடங்கும்" அனுபவங்களைக் கொடுக்கும். அந்த அனுபவங்கள் அழகாகவும் மற்றும் அவளுடைய இருதயத்தை விசாலமானதாக்கும் என்ற புதுப்பிக்கப்பட்ட உணர்வுடன் ரெபெக்காள் வீட்டிற்குத் திரும்பினாள்.

புதிதாகத் தயாரிக்கப்பட்ட தேநீரின் இனிமையான நறுமணத்தால் லெவ் விழித்தான். முக்கியமான ஏதோ ஒன்றை மறந்துவிட்டதுபோல் உணர்ந்தான். ஏதேன் உணவு மற்றும் ரெபெக்காளுடன் பேசுவதற்காக தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் லெவ் சமையலறையை நோக்கிச் சென்றான்.

ரெபெக்காள் மேஜையில் அவனுக்காக காத்திருந்தாள். லெவ் அவளருகில் வந்து அமர்ந்தான். "நான் வழிபாட்டு ஆராதனையைத் தவறவிட்டுவிட்டேன்" என்று கூறியபோது அவன் இன்னும் அரைத் தூக்கத்தில் இருப்பதை அவனது குரல் வெளிப்படுத்தியது. தான் சற்று நேரத்திற்கு முன்பு அவளிடம் என்ன பேசிக் கொண்டிருந்தான் என்பது நினைவிற்கு வந்தவுடன் திடுக்கிட்டதில், அவனது வயிற்றில் ஓர் இறுக்கத்தை உணர்ந்தான். "நான், அன்யாவைப் பற்றி உன்னிடம் சொன்னேனல்லவா?" என்று லெவ் கேட்டான்.

ரெபெக்காள் புன்னகைத்தாள். "ஆமாம், நாம் இருவருமே ஒருவரைப் பற்றி ஒருவரிடம் நம்முடைய கடந்தகால வாழ்க்கையைக் குறித்துப் பேசிக் கொண்டோம் அல்லவா, அதனால் நான் உங்களை ஓய்வெடுக்கும்படி விட்டுவிட்டேன்" என்று கூறியபடி ரெபெக்காள் உயிர்த்தெழுதல் தேநீரை ஊற்றினாள்.

"ஆமாம் லெவ், நீங்கள் வெளிப்படுத்தியவைகளுடனும், என்னுடையவைகளுடனும் நான் போராடிக் கொண்டிருந்தபோது, எனக்கு சில எண்ணங்கள் தோன்றின. ஒவ்வொரு உச்சகட்ட அனுபவங்களுக்கும்கூட எப்படி நம்பிக்கையைத் தர வேண்டும் என்று

கர்த்தருக்குத் தெரியும், உங்களுக்கும், எனக்கும், அன்யாவிற்கும் உள்ள குழப்பத்தை எப்படி தணிப்பது என்றும் அவருக்குத் தெரியும். நமக்கு நடந்தது ஒன்றும் புதிதல்ல, இந்த அனுபவங்கள் அனைத்தும் நம்மை ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும்" என்றாள்.

லெவ் வெறுமனே தலையசைத்தான். அவர்கள் அமைதியாக ஜெபம் செய்தார்கள். பின்பு காலை உணவை முடிக்கும் வரை அமைதியாகவே இருந்தார்கள்.

"இனி நடக்கப்போகின்றவைகளைச் சந்திக்க நான் தயாராக இருக்கின்றேன், ரெபெக்காள். அந்தளவு கடினமாக இருக்காது என்று நினைக்கிறேன். இப்பொழுது நான் தெளிவாக இருக்கிறேன். இவைகள் ஒருவேளை உனக்கு கடினமாக இருக்கலாம். ஆனால் நீயும் உறுதியாக இரு" என்று லெவ், ரெபெக்காளுக்கு ஆலோசனை கூறினான்.

ரெபெக்காளும், லெவ்வும் சோபாவிற்குச் சென்றனர். கட்டுப்படுத்தக் கூடிய உணர்வுகளோடு தான் இருப்பதை உணர்ந்து, லெவ் தனது முன்னாள் மனைவியைப் பார்த்து புன்னகைத்து "நான் உன்னை உண்மையில் அன்பு செய்கிறேன் ரெபெக்காள்" என்றான். அவளுடைய பிரகாசமான புன்னகை, அதே வார்த்தைகளை மீண்டும் அவனுக்கு எதிரொலித்தது. ரெபெக்காள் அவனது தோளில் சாய்ந்து, நீண்ட ஆறுதலான அமைதியினூடே கண்களை மூடினாள்.

லெவ் இறுதியாகப் பேசினான். "இப்போது நமக்கிருக்கும் உறவில் எவ்வளவு ஆழமாக நான் உன்னை உணர்கிறேன் என்பதைக் குறித்து ஆச்சரியப்படுகின்றேன். நான் முந்தைய நாட்களில் இருந்ததை விட இப்போது இன்னும் ஆழமாக உன்னை காதலிக்கிறேன், ஆனால் அது..." என்று லெவ் நிறுத்த, "வித்தியாசமானது" என்று ரெபெக்காள் முடித்தாள்.

"உங்களை என் நண்பனாகப் பெற்றிருப்பது மிகவும் நல்லது என்று நானும் உணர்கிறேன். உயிர்த்தெழுதலின் இந்த மாற்றம் ஏதேன் பழத்தினால் உண்டானது. நாம் ஏதேன் கனியை உண்ணும்போது நம்முடைய பாலுணர்வு அடங்கி விடுகின்றது. ஆதாமும் ஏவாளும் தேவனால் விலக்கப்பட்ட கனியைச் சாப்பிட்ட பின்பே அவர்களுடைய பாலுணர்வு உயிர் பெற்றது" என்று ரெபெக்காள் தொடர்ந்தாள்.

"ம்ம்ம்...நன்மை தீமை அறியத்தக்க மரம் தான்... இவை எல்லாவற்றிற்கும் காரணமா? ஓ! அது பொருத்தமாகத்தான் இருக்கின்றது. அவர்கள் அதைச் சாப்பிட்ட பிறகுதான், தாங்கள் நிர்வாணிகளாக இருப்பதை உணர்ந்தார்கள்" என்று லெவ் கூறினான்.

"மனிதர்களின் பாலுணர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அந்த மரம் ஏதேனில் வைக்கப்பட்டிருந்தது. ஆதாமும், ஏவாளும் தேவனால் விலக்கப்பட்ட கனியைப் புசித்து பாவம் செய்யாமல் இருந்திருந்தால், மனிதர்கள் என்றென்றும் ஜீவனோடு வாழ்ந்திருப்பார்கள். மரணம் அங்கே இல்லாமல் இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் சந்ததிகள் உருவாகி இருக்கும், பின்பு எப்போதுமே வழிவழியாகச் சந்ததிகளை உருவாக்கும் அவசியம் அவர்களுக்கு இல்லாதிருந்திருக்கும். ஏனெனில் குறித்த காலத்தில் பூமி மக்களால் நிரம்பியிருக்கும். நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியைப் புசிக்காமல், ஏதேனின் கனியை மட்டுமே அவர்கள் புசித்திருந்தால் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்" என்று ரெபெக்காள் தொடர்ந்தாள்.

"இளம் ஆண்களும், பெண்களும் உணர்வுப்பூர்வமாக மட்டுமல்லாமல் தேவபக்தியோடும், அர்ப்பணிப்பின் சிந்தையோடும் இணைவதற்கு தயார் நிலையில் இருந்தால் மட்டுமே அவர்கள் தங்கள் பாலுணர்வை உயிர்ப்பிக்கச் செய்து தாம்பத்திய உறவில்

ஈடுபட்டிருந்திருப்பார்கள். இப்படி நடந்திருந்தால் நாம் வாழ்ந்து கொண்டிருந்த உலகில் இருந்த எத்தனையோ மனவேதனைகளையும், பிரச்சனைகளையும் நிச்சயம் தவிர்த்திருக்கலாம்...'' என்று கூறி லெவ் பெருமூச்சு விட்டான்.

''ஒரு புதிய உணர்வுடன் நான், உங்களுடன் இந்தப் புதிய பூமியில் இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன், லெவ்'' என்று ரெபெக்காள் கூறினாள்.

''எனக்கும்தான். நம்முடைய பழைய உறவை இழந்ததுபோல் நானும் உணரவில்லை. நான் திருப்தியுடனும், நன்றியுள்ளவனாகவும் இருக்கிறேன்'' என்று லெவ் கூறினான். அவர்களுக்குண்டான மனநிறைவினாலும், திருப்தியினாலும் பறவைகள் கீச்சிடும் சத்தத்தைக் கேட்டவாறே ஒருவர் மீது ஒருவர் சாய்ந்திருந்து லெவ்வும், ரெபெக்காளும் தங்களை மறந்து தூங்கினார்கள்.

காலையில், தொலைபேசியின் ஒலி அவர்களை எழுப்பியது. தொலைபேசியை எடுத்து ரெபெக்காள் ''ஹலோ'' என்றாள்.

''ரெபெக்காள், நான் அப்பா பேசுகிறேன். நீ எப்போது லெவ்வை நமது ஏதேன் மரப் பண்ணையைப் பார்வையிட அழைத்து வரப்போகிறாய்?'' என்று ரெபெக்காளின் தந்தை கேட்டார்.

***

**"இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்திலே அழைத்துக்கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி, அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்." (ஓசியா 2:14,15)**

# அத்தியாயம் - 9

சூரியன் தன் அதிகாலை இருட்டினை, விடியலின் குறிப்பிற்கான வண்ணங்களாலும், வெளிச்சத்தினாலும் மாற்றத் தொடங்கிய வேளையில் பெஞ்சமின் ஒபதியா கண்விழித்து, அவருடைய எளிமையான வீட்டைச் சுற்றியிருந்த பல ஏக்கர் நிலத்தினை ஆய்வு செய்யத் தொடங்கினார். அந்த நிலமானது அவருடைய சிருஷ்டிகரால் நம்பிக்கையோடு அவரது கவனிப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இஸ்ரயேல் நிலப்பரப்பின் மீது அவருக்கிருந்த பிணைப்பு அவரது இரத்தத்தில் ஊறி இருந்தது. பெஞ்சமினின் மூதாதையரான ஒபதியா 1878-இல் பென்டாடிக்வா இயக்கத்தின் மூலம் இஸ்ரயேலில் முதன்மையாகக் குடியேறியவர்களில் ஒருவராக இருந்தார். வலிமை மிகுந்த இந்த இளம் மனிதனான அவர் உள்ளார்ந்த விருப்பத்துடனும், உறுதியுடனும் மற்றும் கடின உழைப்பினாலும், நிலத்தைப் பயிரிடுவதில், எந்தவிதமான முன்மாதிரியான நவீன விவசாய முறைகளும் இல்லாதிருந்த காலத்திலேயே நிலத்தில் பயிர் செய்து, வெற்றி அடைந்திருந்தார். ஒரு கையில் மண்வெட்டியுடனும், மறுகையில் துப்பாக்கியுடனும், தேவனை நம்பியவராக ஆபிரகாமின் தேவன் அவருக்குக் கொடுத்த நிலத்தைப் பாதுகாக்கத் தயாராக இருந்தார். புதிய நாட்டில் முதன்மையாகக் குடியேறியபோது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை சகித்து, இஸ்ரயேலின் முதல் யூத சமுதாய நல வேளாண்மைக் குடியிருப்பை உருவாக்கினார். மகா உபத்திரவத்தின் போதும்கூட நிலம் முழுவதும் அப்படியே இருந்தது. இந்த நிலம்

"நம்பிக்கையின் வாசல்" என்று எபிரெயத்தில் அழைக்கப்பட்டது. அதன்படி உண்மையாகவே இந்த நிலமானது நம்பிக்கையின் வாசலாகவே மாறியது.

ஐந்து தலைமுறைகளுக்குப் பிறகு, பெஞ்சமின் பிறந்து, இஸ்ரயேலில் உள்ள பென்டாடிக்வாவில் வளர்ந்தார். அவரது பெரிய - தாத்தாவின் - பெற்றோர்களின் - பேரார்வமானது விருத்தியடைய வேண்டும் என்பதற்காக, நிலத்தை நேசிப்பவராக அங்கே வளர்க்கப்பட்டார். இருபதுகளின் தொடக்கத்தில் பல்கலைக்கழகத்தில் தன்னுடன் தோட்டக்கலை படித்த உறுதியான பெண்ணான தெபோராளை மணந்தார். மேலும் தெபோராளும், இஸ்ரயேலில் வளர்ந்து வரும் வேளாண்மையில் பெஞ்சமின் ஒபதியாவுக்கு உதவி செய்வதில் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புபவராக இருந்தார்.

பெஞ்சமின் ஒபதியா ஒவ்வொரு நாளும் செய்வதைப்போலவே இந்த நாளின் அதிகாலை நேரத்திலும் தெபோராளின் வருகைக்காகக் காத்திருந்தார். அப்போது தெபோராள் தோட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போதுதான் இருவருமாகச் சேர்ந்து அதிகாலையின் இளஞ்சிவப்பு, ஊதா வண்ணங்கள் கொண்ட பொன்னிறக் கதிரவன் நிலத்தின் மேற்பரப்பில் உதயமாகுவதைப் பார்த்து பிரமித்து இரசிக்க முடியும். ஒரே சீராகவும் மற்றும் கொஞ்சம் நெருக்கமாகவும் நீண்ட தூரத்திற்கு பல ஏக்கர்களில் வளர்ந்திருந்த பழமரங்களின் மேல், கதிரவன் தன் பொன்னிறக் கதிர்களை ஒன்றன் பின் ஒன்றாக, படிப்படியாகப் பரவச் செய்வதை ஒவ்வொரு நாளும் ரசிப்பார்கள். ஜீவன் கொடுக்கும் ஏதேன் மரங்களில் பிரகாசிக்கும் காலை ஒளியின் இந்தத் தருணம் பெஞ்சமினின் இதயத்தைச் சிறகடித்துப் பறக்கச் செய்யும்.

இறுதி யுத்தத்திற்குப் பின்னர் முற்பிதாக்களால் நேரடியாக முதலில் தொடர்பு கொள்ளப்பட்டவர்களில் ஒருவராக பெஞ்சமினும்,

அவரது மனைவி தெபோராளும் இருந்தனர். ஏதேனின் ஓலாம் மற்றும் ராஃபா பழங்களை ருசித்த தருணத்திலேயே, தேவன்தான் அவருடைய வாழ்க்கைப் பாதையை நியமித்திருக்கிறார் என்பதை பெஞ்சமின் தெளிவாக உணர்ந்து கொண்டார். அவரது முந்தைய வாழ்க்கையிலேயே பூமியின் மீதும், நீர் வளங்கள் மீதும் மற்றும் கதிரவன் மீதும், அற்புதமான இவ்வாழ்க்கையின் மீதும் பெஞ்சமின் அன்பு கொண்டிருந்தார். பழ மரங்களையும் மற்றும் பூக்களையும் வளர்க்கும் திறமைக்காக பெஞ்சமின் பெயர் பெற்றிருந்தார். அவர் தனது குரலில் இருந்த அன்பினாலும், கிளைகளைக் கத்தரித்து திருத்தம் செய்வதில் அவருக்கிருந்த உள்ளார்ந்த ஞானத்தினாலும், தாவரங்கள் மற்றும் பூக்களைச் செழித்து வளரச் செய்தார். "ஆ, கண்ணு, நீ வளரப் போராடுவதை நான் பார்க்கிறேன். இதோ, நான் உனக்கு உதவுகிறேன்" என்று அவர் தேவனுடன் பேசுவதைப் போலவே, தனது மரங்களுடனும் இயல்பாகப் பேசுவார்.

## ஏதேன் மரங்களின் பணி

கதிரவனின் குணமாக்கும் செயல்முறையானது, பல ஏக்கர் ஏதேன் மரங்களின் மீது விழுவதைப் பார்வையிடும்போது மெய்மறந்து போவதைப்போலவே, தன்னுடைய பணிக்கான அழைப்பு ஆபிரகாமிடமிருந்து வந்தபோது உண்மையாகவே மெய்மறந்து போனார். ஏதேன் மரங்களை வளர்ப்பதும், இந்தப் பரிபூரண போஷிப்புகளை தேசங்களுடன் பகிர்ந்து கொள்ளவதும் அவருக்குக் கிடைத்த கனமாகவும், சிலாக்கியமாகவும் நினைத்தார். ஒவ்வொரு சூரிய உதயமும், உலகத்தை மூடியிருந்த இருளை ஒளியினாலும், ஜீவனினாலும் நிரப்பிய கிறிஸ்துவின் பணியை அவருக்கு நினைப்பூட்டியது. இஸ்ரயேல் தேசத்திற்கு தேவன் அருளியிருந்த ஆசீர்வாதங்களின் ஒரு சிறு பகுதியில் பங்குகொள்ள பெஞ்சமின் ஒபதியா தேர்வு செய்யப்பட்டிருந்தார், இந்த ஆசீர்வாதமானது பின்பு பூமி முழுவதிற்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

பெஞ்சமின், முற்பிதாக்களுடனான தனது முதல் சந்திப்பை ஒருபோதும் மறக்க முடியாதவராக இருந்தார். முற்பிதாக்கள் முழு அதிகாரத்துடன் பேசினாலும், கனிவாகவும், மென்மையாகவும் இருந்தார்கள். நீண்ட வெள்ளை தாடியுடைய ஆண்களையும், நரைத்த தலை முடியுடைய பெண்களையும், வயதான தோற்றத்துடன் முற்பிதாக்கள் இருப்பார்கள் என்று அவர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அவர்கள் இளமையாகவும், கம்பீரமாகவும், புத்திசாலித்தனமாகவும் இருந்தார்கள். முற்பிதாக்கள், அவரிடமும், அவரது மனைவியிடமும் அன்புடன் கைகுலுக்கி இதயப்பூர்வமாக "ஷாலோம்" என்று கூறி வரவேற்றனர்.

"இரண்டு ஆண்டுகள்... இன்னும் இரண்டு ஆண்டுகளில் மரங்கள் உலகம் முழுவதுக்கும் கப்பலேற்றி அனுப்பப்பட்டு, நடப்படுவதற்கு தயாராக இருக்கும். அவைகள் விரைவில் கனிகளையும் கொடுக்கும்" என்று கூறிய முற்பிதாவாகிய ஆபிரகாமின் குரல் உறுதியுடன் இருந்தது. புதிய பூமியின் ஊட்டச்சத்து நிறைந்த மண், கட்டுப்படுத்தப்பட்ட வளிமண்டல வெப்பம், வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொட்டிகள் இவைகளின் உதவியோடு ஏதேன் மரத்தின் விதையை வேகமாக வளரச் செய்வதற்கான முறையை முற்பிதாவாகிய ஆபிரகாம் விவரித்தார்.

"இந்தத் திட்டமானது எண்ணற்ற மில்லியன் கணக்கானோர்களைக் குணப்படுத்துவதற்கும், புத்துயிர்படுத்துவதற்குமான திறவுகோலைக் கொண்டிருக்கிறபடியால் அதிக முன்னுரிமை பெற்றுள்ளது. உங்களது பலவிதமான திட்டப் பணிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கான மில்லியன் மரங்கள் வளர்க்கப்படும். ஒவ்வொரு வகையான விதையும் ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பாதுகாக்கப்பட்டு இருந்தது. அவைகள் ஒவ்வொன்றும் சிறப்பம்சங்கள் கொண்டுள்ளன." மிக முக்கியமானது

ஜீவனுக்கான ஒலாம் மரங்களின் விதைகளாகும் என்று முற்பிதாவாகிய ஆபிரகாம் அவரது காலடியில் இருந்த களிமண் பானைகளைச் சுட்டிக்காட்டியபடி கூறினார்.

அடுத்த கணம் மறக்கமுடியாத ஒன்றாக பெஞ்சமினின் மனதில் பதிந்திருந்தது. "இந்த விதைகளை வீட்டிற்கோ அல்லது அவற்றை நடுவதற்கோ அல்லது எவ்விடத்திலுள்ள யாருக்கேனும் அனுப்புவதற்கோ, எங்களது அறிவுறுத்தல் இன்றி செய்வதற்கு யாருக்கும் அனுமதி இல்லை. இந்த அறிவுறுத்தல்களில் ஏதேனும் மீறுதல் காணப்பட்டால் பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும். மறுசீரமைப்பில், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணி மிகவும் முக்கியம் வாய்ந்தது. பெஞ்சமின், நாங்கள் உங்களை நம்பி ஒப்படைத்துள்ள பொறுப்பினை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்களா?" என்று முற்பிதாவாகிய ஆபிரகாம், பெஞ்சமினின் கண்களைப் பார்த்து கண்டிப்பான குரலில் கேட்டார்.

"ஆமாம், நீங்கள் கூறியது எனக்குப் புரிகிறது" என்று பெஞ்சமின் பதிலளித்தார். "எங்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நிறைவேற்றுவதற்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்" என்று தெபோராள் தன் சம்மதத்தை மனப்பூர்வமாகத் தலையசைத்து தெரிவித்தார்.

சூரியன் தன் பொன்னிறக் கதிர்களை அவருடைய பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட பழத்தோட்டங்கள் மீது, அவருடைய கண்களுக்கெட்டும் தூரம் வரை பரவச் செய்து கொண்டிருந்தது. தெபோராள், பெஞ்சமினின் அருகில் வந்தார். மிகுந்த அன்புடன் அவர் தெபோரவைப் பார்த்தார். ஓய்வில்லாது பயிர்சாகுபடி செய்தும், தெபோராளின் கை பலமாக இருந்தது. அவர்கள் முந்தைய உலகில் வயதாகும் வரை ஒன்றாக வாழ்ந்திருந்தனர். இப்போது இந்தப் புதிய உலகில் இருவருமாக இணைந்து இளமைக்குத் திரும்பி இருந்தார்கள்.

பெஞ்சமினுக்கு அவரது தடித்த கண்ணாடிகள் இனி அவசியமில்லை, அவரது பார்வைக் குறைபாடு தற்போது துல்லியமாகவும் மற்றும் தெளிவாகவும் ஆகிவிட்டது. தெபோராளின் மூட்டு வலி நீங்கிவிட்டது, சற்று வளைந்திருந்த அவர் தோரணை நேராகி, துடிப்பாகவும், அழகாகவும் இருந்தார். இஸ்ரயேலின் தேவன் மீது தெபோராள் கொண்டிருந்த உறுதியான பக்திவைராக்கியத்தினால் தெபோராளின் மீது பெஞ்சமீனுக்கு உண்டான அன்பும் - பிதா, குமாரன், மற்றும் அவர்களது ஜீவன் அளிக்கும் மரங்கள் மீது தெபோராள் கொண்டிருந்த அன்பும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டது. அவருக்குக் கிடைத்த உலகம் முழுமைக்குமான ஆசீர்வாங்களை, தேசத்தின் மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே பெஞ்சமினுடைய இருதயம் முழுவதும் நிறைந்திருந்த மிகப்பெரிய ஏக்கமாக இருந்தது.

பெஞ்சமின், சமீபத்தில் நடப்பட்டிருந்த நாற்றுகளின் வரிசையின் கீழ் நடந்துசென்றார், தெபோராள் அவரைப் பின்தொடர்ந்தார். அவர் ஒரு நாற்றின் அருகே மண்டியிட்டார் அதனோடு நடப்பட்ட நாற்றுகளைவிட அது சிறியதாக இருப்பதைக் கண்டு "ஆ, கண்ணு! நீ வளர்வதற்குப் போராடுவதை நான் காண்கிறேன். நான் உனக்கு உதவுகிறேன்" என்று கூறி தன்னுடைய பின் பாக்கெட்டில் இருந்த சிறிய மண்வெட்டி ஒன்றை எடுத்து சிறிய நாற்றைச் சுற்றியிருந்த நிலத்தை மெதுவாகப் பண்படுத்தினார்.

## ஒபதியாக்கள்

ரெபெக்காள் வண்டியில் இருந்து இறங்கி, அவளது அப்பாவின் வீட்டிற்கு வழிநடத்திய கற்கள் பதித்த பாதையில் "அப்பா, அம்மா" என்று அழைத்தவாறு ஓடினாள்.

பெஞ்சமின் ஒபதியாவின் வீட்டிற்குள் லெவ் நுழைந்தபோது, ரெபெக்காளை முதலில் அவளது வீட்டில் சந்தித்தபோது ஏற்பட்ட அதே உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அன்பினாலும், நற்பண்புகளினாலும்

நிறைந்திருந்த இல்லமாக அது இருந்தது. வீட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஜீவன் இருந்தது. பானைகளில் இருந்து திராட்சக்கொடிகள் வளர்ந்து பெரிய வரவேற்பு அறையின் ஜன்னலைச் சுற்றிப் படர்ந்திருந்தன. ஜன்னலின் அடிப்பாகத்திலிருந்த சிறிய களிமண் கோப்பைகளில் பலவிதமான, தாவரக் கொழுந்துகள் வைக்கப்பட்டிருந்தன. சிற்றிலைகள் உள்ள படர் செடிவகைகள், மேஜையையும் மற்றும் அச்சிறிய அறையில் காணப்பட்ட ஒவ்வொரு சமமான இடைவெளிகளையும் அலங்கரித்திருந்தன. ஏழு சிறிய ஓலாம் மரங்கள் சுவரில் இருந்த ஒரு அலமாரியில் வைக்கப்பட்டிருந்தன அவை இல்லாவிடில் அந்தப் பகுதி வெறுமையாக இருந்திருக்கும். அந்தப் பகுதிக்கு மேலாக "நீர் உம்முடைய கையைத் திறக்க, சுவாசமுள்ள ஒவ்வொரு ஜீவனும் நன்மையால் திருப்தியாகும்" என்று தொங்கவிடப்பட்டிருந்த வாசகத்தை லெவ் கண்டான்.

ஜேக்கும், ரேச்சலும், தெபோராள் மற்றும் பெஞ்சமினுடன் மேஜையில் அமர்ந்திருந்தார்கள். பெஞ்சமின் வலுவான மற்றும் ஆரோக்கியமான தோற்றத்துடன் இருந்தார். அவரது முகத்தின் சுருக்கங்கள் எதுவுமில்லாமல் இளமையாகக் காட்சியளிப்பதை லெவ் கவனித்தான்.

"அப்பா, நீங்கள் மிகப் பிரமாதமாக இருக்கிறீர்கள்!" என்று உரக்கக் கூறியபடி லெவ், பெஞ்சமின் அருகே வந்தான். பின்பு தனது மாமியாரின் அருகே சென்று "அம்மா, நீங்களும் மிகவும் இளமையாக இருக்கிறீர்கள்" என்று கூறி தெபோராளை அணைத்துக்கொண்டான். லெவ் கூறியதைக் கேட்டபோது இருவரது முகமும் ஒளிர்ந்தது.

அவர்கள் வரவேற்பறையில் இருந்த பெரிய பிரெஞ்ச் ஜன்னலுக்கு அருகில் சென்று, ஏக்கர் கணக்கான நிலப்பரப்பில் ஏதேன் மரங்கள் காணப்படுவதை முழுமையாகக் காணும்படி நின்றனர். கதிரவனின் வலுவான காலை ஒளியை எதிர்த்துப் பார்ப்பதற்குக்

கடினமாக இருந்ததால், லெவ் தன் கையை கண்களுக்கு மேலாகக் கவசம் போல் வைத்துக் கொண்டான். "ஆஹா! தேசத்தின் அனைத்து மக்களையும் ஆசீர்வதிப்பதற்குப் போதுமான ஏதேன் மரங்கள் உங்களது தோட்டத்திலேயே இருப்பதைப் பார்ப்பதற்கு அற்புதமாக இருக்கிறது" என்றான்.

ஒபதியா குடும்பத்தினர் சமையலறை மேஜையைச் சுற்றி அமர்ந்தபடி, ஏதேன் தேநீர் மற்றும் கேக்குகளைச் சிற்றுண்டியாக சாப்பிட்டுக் கொண்டே, ஒருவருக்கொருவர் அவரவரது வாழ்க்கை முறைகளைப் பகிர்ந்துகொண்டனர். அதில் பல மணிநேரங்கள் பறந்தன. பிற்பகலில் பெஞ்சமின் அக்குழுவினரை, அவர்களின் ஏதேனின் செயல்முறைத் திட்டத்தினைச் (Eden Project) சுற்றிப்பார்ப்பதற்கு அழைத்துச் சென்றார்.

"நமது கண்களுக்கு முன்பாக இங்கு ஒரு பெரிய மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முழு மனுக்குலத்திற்கும் உயிர்நாடி போன்றுள்ள ஒன்றை இங்கு தேவன் அமைதியாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்" என்று பெஞ்சமின் பிரமிப்புடன் கூறினார்.

பழைய உலகில், தங்கள் வாழ்வாதாரத்திற்காக மிகக் குறைவான மக்களே விவசாயத்தினைச் சார்ந்திருந்தனர், அதிகமானோர் நகரங்களில் வாழ்ந்தார்கள். அரசியல் அதிகாரத்தை விட, வர்த்தக செல்வாக்கினால் நகரங்கள் அதிகமாக வளர்ந்து தொழிற்சாலைகள் பெருகிய காரியமானது, பாபேல் கோபுரத்தைக் கட்டுவதற்கு அப்போதிருந்த மக்கள் விரும்பியதை ஓரளவிற்கு நினைவுபடுத்துகிறது என்று பெஞ்சமின் விளக்கினார்.

"ஆனால் இப்போது மக்கள் மீண்டும் விவசாயம் செய்வதற்குக் கொண்டு வரப்படுகிறார்கள்" என்று கூறி பெஞ்சமின் குனிந்து ஒரு சிறு கூட்டமான ஏதேன் மரங்களைச் சுற்றி இருந்த மண்ணை தட்டி அழுத்தி இறுக்கினார். "உணவு மற்றும் ஆற்றல் தொடர்புடைய

விஷயத்தில் ஒவ்வொரு நபரும் யாரையும் சார்ந்திருக்காத நிலை உண்டாகும். விரைவில் உலகம் பன்முகமயம் ஆக்கப்படும், ஒருவர் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வழிமுறைகள் இனி இருக்காது" என்று பெஞ்சமின் கூறினார்.

"பன்முகமயம் ஆக்கப்படுதல் என்றால், ஒவ்வொரு மனிதனும் தன்தன் திராட்சத்தோட்டம் மற்றும் அத்தி மரங்களைச் சொந்தமாக வைத்திருப்பார்கள், சரிதானே?" என்று லெவ் உற்சாகத்துடன் கூறினான். எந்தவிதமான முயற்சியும் இல்லாமலேயே வசனம் அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது, இயல்பாகவே தன் சிந்தைக்குள் வந்த வசனத்தை அவன் மீண்டும் கூறினான். "இந்த வசனம் மீகா தீர்க்கதரிசன புஸ்தகத்தில், நான்காம் அதிகாரத்தில் தானே உள்ளது. இது இப்போது எனக்கு எப்படித் தெரிந்தது?" என்று லெவ் கேட்டான்.

எல்லோரும் அவனது குழந்தைத்தனமான பரவசத்தையும், நேர்மையையும் பார்த்துச் சிரித்தனர். பெஞ்சமின் தனது கையை லெவ்வின் தோள்களில் வைத்தார்.

"ஏதேன் பழமே காரணம்" என்று பெஞ்சமின் புன்னகையுடன் கூறினார். "தேவன் கொடுத்த ஊட்டச்சத்தின் வல்லமை. இது நினைவாற்றலை எழுப்பி மூளையின் திறனைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்கிறது. கிறிஸ்துவின் சிந்தையோடு இசைந்து நாமும் அதே கண்ணோட்டத்தின்படி பார்க்கக் கற்றுக் கொள்வதற்கு இந்தப் பழம் உதவுகின்றது. ஒரு மனிதனின் மனதுக்குள் வேதனையையும், துயரத்தையும் கொண்டு வந்த ஊக்கத் தடைகளை ஏதேன் பழத்தின் ஊட்டச்சத்தானது நீக்குகின்றது. இந்த ஏதேன் மரங்கள் உண்மையிலேயே முழு மனுக்குலத்திற்குமான உயிர்நாடியாய் இருக்கிறது" என்று பெஞ்சமின் விளக்கினார்.

"இத்தகைய சிறப்புமிக்க ஏதேன் பழம், உங்களது சொந்த தோட்டத்திலேயே உள்ளது" என்று லெவ் மேலும் கூறினான்.

"கிறிஸ்து நியமித்து வைத்திருக்கிற வழிமுறையிலும், காலத்திலும் மட்டுமே அனைத்து தேசங்களின் மக்களையும் ஆசீர்வதிப்பதற்கு இப்பழம் பயன்படுத்தப்படும்" என்று தெபோராள் வானத்தை நோக்கிப் பார்த்தவாறும் மற்றும் இராஜாவின் சேவையில் ஈடுபட்டிருந்த அவரது துணைவரின் கண்களைப் பார்த்தவாறும் கூறினார்.

"நாங்களும் இப்பணியில் இணைந்து கொள்கிறோம். நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்று நீங்கள் எங்களுக்குச் சொல்லுங்கள். நாங்களும் உங்கள் சேவையில் உங்களுக்குப் பக்கபலமாக இருப்போம்" என்று பெஞ்சமினிடம், ஜேக் கூறினான்.

"நாளை மதியத்திற்குள் நாம் புறப்பட வேண்டும். அப்போதுதான் நாம் ஓய்வுநாளில் சரியான நேரத்தில் வீட்டில் இருக்கமுடியும், நிறைய வேலைகள் இருக்கிறது. ஆனால் நமக்குக் குறைவான நேரமே உள்ளது" என்று தெளிவான நீல வானத்திற்கு கீழ் நீண்ட வரிசையில் இருந்த ஏதேன் மரங்களின் அருகே அக்குழுவினர் நடந்து கொண்டிருந்தபோது ரெபெக்காள் கூறினாள். சூரியனின் பொன்னிறக் கதிர்களின் இனிமையை அவர்கள் உணர்ந்தார்கள்.


**தொடரும்......**

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
**8428737474**

## முக்கிய குறிப்புகள் :

முக்கிய குறிப்புகள் :

**சகோதரர் யூஜின் பர்ன்ஸ்** அவர்கள்,
அவரது வாழ்நாள் முழுவதிலும் கதைகள் மீது,
அதிலும் விசேஷமாக வேதாகமத்தின் கதைகள் மீது
ஆர்வம் கொண்டவராக இருந்தவர் ஆவார்.
மனுஷர் எல்லாருடைய வாழ்க்கையின் கதையானது
கல்லறையோடு முடிந்துவிடுகின்றது. ஆனால்
மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றின
வாக்குத்தத்தமானது இதை மாற்றப்போகின்றது.
மறுஜென்ம காலத்தில், அதாவது மரித்தோரின்
உயிர்த்தெழுதலின் காலங்களில்,
எல்லா மனுஷருடைய வாழ்க்கைக் கதையும் மீண்டும்
தொடரப்போகின்றது என்பதை நினைக்கும்போதே
மேனி சிலிர்க்கின்றது. இந்தப் புத்தகத்தில்,
வாழ்க்கையை முற்றிலும் புதியதொரு **பரிணாமத்தில்** பார்ப்பதற்கான காட்சித்திரையை
ஆசிரியர் திறக்கிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலானது, **மீண்டும் ஜீவனோடு**
வருபவர்களுக்கு வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கான இரண்டாவது மேடையை
அமைத்துக்கொடுக்கிறது.



**நீங்கள் உட்பட, ஒவ்வொரு மனுஷனும், சீரான
பூமியில் காணப்படும் பரதீசில்
மீண்டும் வாழ்வீர்கள்.**

